விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 24 ஞாயிற்றுக்கிழமை (10.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 326

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## மீள் குடியேற்றத்தை வலியுறுத்தி செவ்வாயன்று உண்ணாவிரதம்!

இடம்பெயர்ந்த தமிழ்மக்களின் மீள் குடியேற்றம் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நாளை மறுதினம் 12 ஆம் திகதி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்பாக தொடர் உண்ணாவிரதப்போராட்டம் திட்டமிட்டபடி இடம்பெறும் என்று தெரிவித்த வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் சோ.சுகிர்தன், தமிழ் மக்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் நோக்குடன் இராணுவத்தினரால் திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிகாமம் வடக்கில் இடம் 23-ம் பக்கம் பார்க்க

## மக்கள் கொல்லப்பட்டமை பயங்கர குற்றச்செயல்!



### தயான் ஜெயதிலக தெரிவிப்பு

இலங்கை அரசின் போர்க் குற்றங்களை வெளிப்படுத்தும் சனல் 4 தொலைக்காட்சியின் காணொளிகள் உண்மையானவை என போர் நடைபெற்ற காலத்தில் இலங்கை அரசை பிரதிநிதித்துவம் செய்த முக்கிய ராஜதந்திரி ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி கடந்த காலங்களில் ஒளிப்பரப்பிய போரின் இறுதிக்கட்டத்தில் அரச படையினரால் கைது 24-ம் பக்கம் பார்க்க

## மாநாட்டுப் பிரதிநிதிகளை ஏற்றிச் சென்ற பஸ் விபத்து

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளை ஏற்றிச் செல்ல தயார் செய்யப்பட்டிருந்த சொகுசு பஸ் வண்டி நேற்று முற்பகல் விபத்துக்குள்ளானதாக தெரியவருகிறது.

திஸ்ஸமஹாராமவில் இருந்து மத்தள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை நோக்கி சென்ற இந்த பஸ் திஸ்ஸமஹாராம பன்னகமுவ சந்தியில் நேற்று முற்பகல் இராணுவ ட்ரக் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

திஸ்ஸமஹாராம பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணை 23-ம் பக்கம் பார்க்க

## மாநாட்டை புறக்கணிக்க எதிர்க்கட்சிகள் தீர்மானம்

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டை புறக்கணிப்பதாக எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

எதிர்வரும் 15-ம் திகதி பொதுநலவாய நாடுகள அரச தலைவர்கள் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் தாமரைத் தடாக அரங்கில் நடைபெறவுள்ளது.


எனினும், இந்த நிகழ்வுகளில் பங்கேற்கப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயகக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தீர்மானித்துள்ளன.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆரம்ப நிகழ்வுகளில் மட்டும் பங்கேற்க உள்ளார். மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மக்களின் 23-ம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதி மகிந்தவுக்கு இன்று கடிதம் எழுதுகிறார் மன்மோகன்

### வராமைக்கான காரணம் குறித்து



பொதுநலவாய மாநாட்டைத் தாம் புறக்கணிப்பது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இன்று கடிதம் ஒன்றை அனுப்பவுள்ளதாக பிரிஜ செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் இந்தியப் பிரதிநிதித்துவ மட்டம் மற்றும் மாநாட்டில் இருந்து இந்தியப் பிரதமர் விலகிக் கொள்வது தொடர்பாக அரசாங்கத்துக்கு இன்று தெரியப்படுத்தப்படவுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த உயிரிழப்பு தொடர்பில் விரைவில் கணக்கெடுப்பு!

### புள்ளிவிபரத் திணைக்களம் நடவடிக்கை

வடக்கு, கிழக்கில் யுத்தம் காரணமாக ஏற்பட்ட சொத்து மற்றும் உயிர சேதங்கள் தொடர்பில் கணக்கெடுப்பை மேற்கொள்ளவுள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த கணக்கெடுப்புகள் பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் கிராம சேவகர்களினால் மேற்கொள்ளப்படும்.

எதிர்வரும் 21ஆம் திகதி முதல கணக்கெடுப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதோடு, அதற்கான பயிற்சிகள் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

யுத்தம் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் சரியான கணக்கெடுப்பை நடத்துமாறும், ஏற்பட்ட சொத்து மற்றும் உயிர் சேதங்களுக்கு இழப்பீடுகளை வழங்குமாறு எதிரணி அரசியல் கட்சிகள் உட்பட பல்வேறு அமைப்புகள் பல வருடங்களாக அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

காணிகளை இழந்தவர்களுக்கு காணிகளை வழங்குதல், வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை வழங்குதல், அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துதல், உயிரிழந் 23-ம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய மாநாட்டால் நெருக்கடியில் திறைசேரி

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளும் அரச தலைவர்களின் செலவுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்டு ஒதுக்கப்பட்ட நிதி திடீரென மூன்று மடங்காக அதிகரித்ததால் திறைசேரி பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதாக தெரியவருகிறது.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளும் அரச தலைவர்கள் தமது மனைவி அல்லது கணவரை அழைத்து வருவார்கள் என்று கணக்கிட்டிருந்த திறைசேரி, இரண்டு பேருக்கு செலவாகும் தொகையை மதிப்பிட்டு நிதியை ஒதுக்கியிருந்தது.

இந்த நிலையில் அரச தலைவர்கள், தமது பிள்ளைகள் மற்றும் ஏனைய உறவினர்களுடன் இலங்கை வரவுள்ளதாக அறிவித்ததை அடுத்து திறைசேரிக்கு இந்த இக்கட்டான நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண் 24-ம் பக்கம் பார்க்க

### அரசியல் தலைவர்களுக்கான

## இணைப்பு அதிகாரிகளாக படையினர் நியமனம்!

(கொழும்பு)

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் பங்கேற்கும் வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் குழுக்களுக்கான இணைப்பு அதிகாரிகளாக படையினர் செயற்படவுள்ளனர்.

இந்த இணைப்பு அதிகாரிகளாக ஆயிரத்து 663 படையினர் நியமிக்கப்பட்டுள்ளதாக படைத்தரப்பின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இப்பணிகளில் படைத்தரப்பின் 327 அதிகாரிகளும், ஆயிரத்து 336 படையினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவர்கள் வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் குழுக்களை வரவேற்று, அவர்களுக்கான வசதிகள் மற்றும் பயணங்கள் போன்ற ஏற்பாடுகளை ஒழுங்கமைக்கும் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள படையினரை கடந்த 07ஆம் திகதி வியாழக்கிழமை சந்தித்த படைத்தளபதி, பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் அரசியல் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் குழுக்களை திருப்திப்படுத்தும் வகையில் பணியாற்ற வேண்டும் எனப் பணித்துள்ளார். 23-ம் பக்கம் பார்க்க

குளிர்மைமிகு கனடா சீமையிலே படிக்க
கைநிறைய உழைக்க இலகுவில் செல்ல

உணவு, இருப்பிடம் இலவசம். அரிய வாய்ப்பு

இதுவரையில் எங்களிடம் பெற்ற ஆலோசனைகளில்
இது மிகவும் மலிவானது

முன்னர் ஆலோசனை பெற்றவர்களும் 2-ம், 3-ம் தடவை இலவசமாக ஆலோசனை பெறலாம். (நிபந்தனைகளுடன்)

7 நாட்களும் காலை 8.30 முதல் பி.ப 5.30 வரை திறந்திருக்கும்

(விசாக்கள் வெற்றிபெறுவதென்பது நிட்சயமற்ற ஒரு விடயமாகும் என்பதை அழுத்தம் திருத்தமாக தங்கள் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.)



திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

(C-5430)

# ஈரான் எண்ணெய் கொள்வனவை நிறுத்திக் கொண்டது இலங்கை

ஈரானிடம் இருந்து இரகசியமாக எண்ணெய்யைக் கொள்வனவு செய்து வந்த அரசாங்கம், அமெரிக்கா விடுத்த கடுமையான எச்சரிக்கையை அடுத்து அதனைக் கைவிட்டுள்ளது.

இதனால் ஈரானிடம் இருந்து கொள்வனவு செய்யும் எண்ணெயை மட்டும் சுத்திகரிக்கும் வசதியைக் கொண்டுள்ள சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளது.

ஈரான் மீதான அமெரிக்காவின் தடைகளை அடுத்து, அந்நாட்டிடம் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்வதை நிறுத்துவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், ஈரான் மீதான அமெரிக்காவின் தடையையும் மீறி, மூன்றாவது தரப்பு ஊடாக அந்நாட்டிடம் இருந்து எண்ணெயை அரசாங்கம் கொள்வனவு செய்வதாக அமெரிக்காவுக்கு புலனாய்வுத் தகவல் கிடைத்திருந்தது.

இதையடுத்து, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் சிஸன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த மாதம் அலரி மாளிகையில் சந்தித்து கடுமையான எச்சரிக்கை விடுக்கும் அந்நாட்டு இராஜாங்க திணைக்களத்தின் செய்தியைக் கையளித்திருந்தார்.

இச்செய்தியில் ஈரானிடம் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்வதை இலங்கை அரசாங்கம் நிறுத்தாவிட்டால், பயங்கரமான விளைவுகளை சந்திக்க நேரும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இராஜதந்திர மொழியில் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதையடுத்து, கடந்த மாதம் 19ஆம் திகதி மற்றும் 27ஆம் திகதி ஆகிய தினங்களில் இலங்கைக்கு புறப்படவிருந்த இரண்டு எண்ணெய்க் கப்பல்களை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இவ்விரு கப்பல்களிலும் ஈரானிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட எண்ணெய் ஏற்றப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே, இவை நிறுத்தப்பட்டதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமைத்துவப் பணிப்பாளர் சுசந்த சில்வா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்படுவதால், இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று அச்சம் எழுந்துள்ளது.

கொழும்பில் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாடு நடைபெறவுள்ள இந்நிலையில், ஏனைய நாடுகளிடம் இருந்து சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை அவசரமாகக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (எ-11)

## மாவிலாறு காட்டுப்பகுதியில் ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்பு!

மட்டக்களப்பு மாவிலாறு பிரதேசத்தின் காட்டுப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகுதி ஆயுதப் பொருட்கள் நேற்று சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

ரி.56 ரக துப்பாக்கி-01 ,
எம்.ரி.எம்.ஜி. ரக துப்பாக்கி-01
எல்.எம்.ஜி. ரவைகள்-400.

ரி.56 ரக துப்பாக்கி ரவைகள்- 2000.

சீ4 வெடிமருந்து 15 கிலோ.

ரி.என்.ரி. வெடிமருந்து 20 கிலோ மற்றும் வயர்

உள்ளிட்ட ஆயுதங்களும், உபகரணங்களுமே மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை பிரதேச இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வாகரை 233 ஆவது படைப்பிரிவு இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்தே மேற்படி பொருட்களை மீட்டுள்ளதாக வாகரை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் கடந்த காலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

**இரசாயனவியல் வகுப்பு (English Medium)**

க.பொ.த.உயர்தர ஆங்கில மொழி மூல இரசாயனவியல் பாடம் கற்கும் மாணவர்களுக்கு பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள் மூலம் கற்பிக்கப்படும். (4458)

தொடர்புகளுக்கு: 077 378 7380



**சுவாமியே சரணம் ஐயப்பா**

**யாழ்.உரும்பிராய் சிவதர்ம சாஸ்த்தா திருக்கோவில் (ஐயப்பன் ஆலயம்)**

மேற்படி ஆலயத்தில் 17.11.2013 ஞாயிற்றுக்கிழமை சுவாமி ஐயப்பனின் வருடாந்த மகரஜோதி மண்டலப் பூசை ஆரம்பமாகின்றது. ஐயப்பனின் புனித மாலை போடும் அடியார்கள் ஆலயத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். 60 தினமும் மாலை 4.30 மணிக்கு அபிஷேகம், பூசை, பஜனை நடைபெறும்.

சுவாமி சரணம்

தொடர்பு:
சபரிசவாசம்,
முருகன் கோயில் வீதி, தாவடி. (4457)

இங்ஙனம்
ஆதினகர்த்தா
0778453776

**வட மாகாணத்தில்**

**உடனடி வேலைவாய்ப்பு**

**(Management Trainess - 2014)**

வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள USA Californiaவை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் நிறுவனத்திற்கு முகாமைத்துவ பயிற்சிக்கு ஆட்கள் தேவை. (Management Trainess-2014)

சந்தைப்படுத்தல் துறையில் அனுபவமுள்ள, ஆர்வமுள்ள பயிற்சி பெற விரும்புபவர்கள் மற்றும் வங்கிகளில் (Bank) பயிற்சி பெற்ற 18-35 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (சி-5431)

**GRANTON INTERNATIONAL (PVT) LTD**
**73, ST.ANNES CHURCH ROAD,**
**CHUNDIKKULY, JAFFNA.**
**CONTACT: 0777 274795, 0215686466**

# அரசியல் நோக்கத்துக்காக மாநாட்டை பயன்படுத்த முயற்சி

## இளவரசர் சார்ள்ஸ் தெரிவிப்பு



மகாராணி இரண்டாவது எலிசபெத் சார்பில்

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டை சில நாடுகள் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் அரசியல் கைப்பாவையாக பயன்படுத்த முயற்சிப்பதாக பிரித்தானியாவின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

பல்வேறு நாடுகளின் அந்த முயற்சிகளுக்கு இடமளிக்க போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில், பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத் சார்பில் கலந்து கொள்ள உள்ள சார்ள்ஸ் வெளிநாட்டு ஊடகங்களிடம் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சில நாடுகள், பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை அரசியல் கைப்பாவையாக பயன்படுத்த முயற்சித்தாலும் அந்த அமைப்பின் நோக்கம் அதனை விட விரிவானது எனவும் இளவரசர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கும் இந்த விடயங்களை வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கேற்கும் இளவரசர் சார்ள்ஸ், பண்டாரநாயக்கவினருக்கு சொந்தமானதும் தற்பொழுது நவீன ஹோட்டலாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதுமான கொழும்பு ரொஸ்மிட் பிளேசில் 65 இலக்கத்தில் உள்ள டின்டெங்கல் ஹோட்டலில் தங்கவுள்ளார். (எ-11)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். (C-5398)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

**புதிய வரவு**

**ஆஸ்திரேலியா செல்ல IT டிப்ளோமா**

**பட்டதாரிகளுககு அருமருந்தன்ன வாய்ப்பு**

- விசா வகுப்பு 457
- IELTS தேவையே இல்லை.
- ஆஸ்திரேலியாவில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா
- குடும்பமாக நிரந்தரக் குடியுரிமை தானாகவே கிடைக்கும்.
- இது தொடர்பான சட்ட ஆவணங்களை பார்வையிடலாம்.
- மேற்படி விசா வகுப்பை இணையத்தில் ஆய்வு செய்த பின் எம்மிடம் ஆலோசனைக்கு வருவது சாலச்சிறந்தது.

(விசாக்கள் வெற்றி பெறுவதென்பது நிட்சயமற்ற ஒரு விடயமாகும் என்பதை அழுத்தம் திருத்தமாகத் தங்கள் கவனத்திற்கு அறியத் தருகின்றோம்.) (சி-5432)

- முன்னர் ஆலோசனை பெற்றவர்களும் 2-ம், 3-ம் தடவை இலவசமாக ஆலோசனை பெறலாம். (நிபந்தனைகளுடன்)
- 7 நாட்களும் காலை 8.30 முதல் பிப 5.30 வரை திறந்திருக்கும்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090



# கொய்யா இலையின் மருத்துவ குணம்

கொய்யா மரத்தின் இளம் இலைகள் வெப்பமண்டல நாடுகளில் பாரம்பரிய மருத்துவத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

கொய்யா இலைகளை நன்கு கழுவி சுடுதண்ணீரில் கொதிக்கவிட்டு தேநீர் போன்று அருந்தினால் கொழுப்பைக் குறைக்கும், நீரிழிவை தடுக்கும், மேலும் வயிற்று போக்கினால் அவதிப்படுபவர்களுக்கு சிறந்த சிகிச்சையளிக்கும்.

**வயிற்றுப்போக்கு**

பக்றீரியா காரணமாக வயிற்றுபோக்கு ஏற்பட்டால் கொய்யா இலையில் தேநீர் செய்து சாப்பிடவேண்டும். இந்த தேநீர் பருகினால் எந்த காரணத்தினால் வயிற்றுபோக்கு ஏற்பட்டிருந்தாலும் குணப்படுத்திவிடும். கொய்யா இலையில் செய்யப்பட்ட தேநீரை பருகுவதால் குறைவான வயிற்றுவலி, குறைவான தண்ணீரால் வெளியேற்றப்படும் மலம்; அதிலிருந்து எளிதில் தீர்வு காண முடியும். கொய்யா இலை வயிற்று போக்கிற்கு சிறந்த தீர்வாக இருக்கும் என்று ரிவிஸ்டா இண்ஸ்ட்டியூட்டோ நிறுவனம் 2008 ஆய்வு செய்தனர் அதில் கொய்யா இலைச்சாறில் வயிற்று போக்குக்கு பொதுவான காரணமாக இருக்கக்கூடிய ஏரொஸ் பக்றீரியா வளர்ச்சி தடுக்கப்படுவதாக கண்டறியப்பட்டது.




# மாதுளையின் மருத்துவ குணம்



மாதுளம்பழச் சாறுடன் சமமாக இஞ்சி சாறு கலந்து, இத்துடன் தேன் கலந்து சாப்பிட, நாட்பட்ட வறட்டு இருமல் குணமாகும். நன்றாகப் பழுத்த அரை வாழைப்பழம் தினமும் இரவு சாப்பிட்டு வந்தால் இதயம் வலிமையாகும். மூச்சு சீராகும். சிறுநீரகக் கற்களால் பாதிக்கப்பட்டவர்கள் தினமும் ஒரு அப்பிள், அல்லது வாழைத்தண்டு ஜூஸ் சாப் பிட்டு வர நல்ல நிவாரணம் கிடைக்கும். ஆனால் வாழைத்தண்டு ஜூஸ் அளவுக்கு அதிகமாகக் குடிப்பதும் நல்லதல்ல.

மழைக்காலங்களில் கால் விரல்களுக்கு இடையே உண்டாகும் சேற்றுப் புண் குணமாக மஞ்சள் தூளுடன் தேனைக் கலந்து களிம்பு போல பூசலாம். இரண்டு டீஸ்பூன் தேனை ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து குடித்தால் நல்ல தூக்கம் வரும். மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டவர்கள் கீழ்காய் நெல்லியை வேரோடு பிடுங்கி நன்றாக அரைத்து பசும்பாலில் கலந்து 9 நாள் குடித்து வர நோய் குணமாகும்.

தினமும் சப்போட்டா பழ ஜூஸ் பருகி வர முடி நன்றாக வளரும். முடி உதிர்வது நிற்கும். பதினைந்து வில்வ இலையை கால் லீற்றர் தண்ணீரில் போட்டு நன்றாகக் கொதிக்க வைத்துக் குடித்தால் வயிற்றுப்புண் குணமாகும். மோரில் இஞ்சியை நறுக்கிப் போட்டு, கொத்தமல்லி இலையைக் கிள்ளிப் போட்டு குடித்தால் நன்றாகப் பசி எடுக்கும். நெல்லிக்காய் சாறு எடுத்து அதனுடன் தேன் கலந்து சாப்பிட்டால் உயர் இரத்த அழுத்தம் கட்டுக்குள் இருக்கும்.

வெள்ளரிக்காயை அரைத்து முகத்தில் பூசி, 15 நிமிடங்கள் கழித்து கழுவினால் முகப் பருக்கள் நீங்கி புத்துணர்ச்சி பொங்கும். தண்டுக்கீரைச் சாற்றைத் தலையில் தடவி வந்தால் முடி நன்றாக வளரும் முடி உதிர்வதும் குறையும். மன அழுத்தத்துக்கு மக்னீசியம் சத்து குறைபாடும் ஒரு காரணம். பசளிக்கீரையில் அதிக மக்னீசிய சத்து உண்டு. வாரத்துக்கு ஒரு முறையாவது உணவில் சேர்த்தால் மன அழுத்தம் போயே போச்சு.

மாதுளை ஜூஸை 40 நாட்கள் தொடர்ந்து அருந்தி வந்தால் பெண்களின் மாதாந்திரப் பிரச்சினைகள் நீங்கும். இரத்தத்தில் ஈமோகுளோபின் அளவு அதிகரிக்கும். பேரீச்சம் பழம் நகங்களுக்கு வலு தரும். தினமும் இரண்டு பேரீச்சம்பழமும் ஒரு கப் பாலும் சாப்பிட்டால் அழகிய நகம் வளரும்.



# கொழும்பில் இளைஞர்கள் மாநாடு இன்று கோலாகலமாக ஆரம்பம்

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் உத்தியோகபூர்வ நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளன.

இவற்றுக்கான சகல ஏற்பாடுகள் பூர்த்தியாகி யுள்ளன. பொதுநலவாய இளைஞர் மாநாடு அம்பாந்தோட்டையிலும், பொதுநலவாய மக்கள் மன்றம் ஹிக்கடுவையிலும் நடைபெறவுள்ளன.

பொதுநலவாய இளைஞர் மாநாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்க உள்ளதோடு அதேதினம் மாலை காலியில் நடைபெறும் பொதுநலவாய மக்கள் மன்றத்திலும் ஜனாதிபதி பங்கேற்கிறார்.

இவற்றையொட்டி காலி, ஹிக்கடுவை மற்றும் அம்பாந்தோட்டை நகரங்கள் விழாக்கோலம் பூண்டுள்ளன.

இந்த மாநாட்டில் இலங்கையின் சார்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் தலைவர்களும், வெளிநாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன். இன்றைய இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்களும் வாய்ப்புக்களும் என்ற தலைப்பில் ஆராயவுமுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 14 ஆம் திகதி பல்வேறு மட்ட சந்திப்புக்களும் கூட்டங்களும் இடம்பெறவுள்ளன. இதேவேளை பொதுநலவாய மக்கள் மன்றத்தின் மாநாடு அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு காலி கோட்டையிலுள்ள நீதிமன்ற சதுக்கத்தில் ஆரம்பமாகும்.

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் இலங்கை மற்றும் வெளிநாடுகளின் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொள்ளவுள்ளதுடன், பொதுநலவாய நாடுகளில் வாழும் சிவில் சமூகத்தினர் எதிர்கொள்ளும்பிரச்சினைகள் தொடர்பாகவும் மாநாட்டின்போது ஆராயவுள்ளனர்.

இதில் 53 நாடுகளைச் சேர்ந்த 106 பிரதிநிதிகளும் 20 கண்காணிப்பாளர்களும் 5 செயலணி உறுப்பினர்களும் பங்கேற்கின்றனர். இலங்கையிலிருந்து 25 பிரதிநிதிகளும் 20 கண்காணிப்பாளர்களும் 5 செயலணிக் குழு உறுப்பினர்களும் பங்குபற்றவுள்ளனர்.

8 முக்கிய தலைப்புகள் தொடர்பில் இங்கு ஆராயப்படவுள்ளதோடு இலங்கை அரச தலைவர்களுக்கும் இளைஞர் தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பும் இடம்பெறவுள்ளது.

பொதுநலவாய வர்த்தக மாநாடு 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெறுகிறது. இதில் 60 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 300 முக்கிய வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள் பங்கேற்கவுள்ளனர். இதில் பங்கேற்கவிருக்கும் முதலீட்டாளர்கள் தற்பொழுது இலங்கை வர ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பில் எதிர்வரும் 15 ஆம் திகதி கோலாகலமாக நடைபெறவுள்ள அரச தலைவர்களின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளும்பொருட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் அரச தலைவர்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இதனை முன்னிட்டு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் முதல் அரச தலைவர்கள் கொழும்பில் தங்கியிருக்கவுள்ள ஹோட்டல்கள் வரை, விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-2)

# பார்வையாளர்கள் தாக்கியதில் பாதுகாப்பு ஊழியர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிட வந்தவர்கள் வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்களை தாக்கியதில் இரு ஊழியர்கள் காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் அடிதடிச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல்5.30மணியளவில்யாழ்.வைத்தியசாலையின் முன்வாயில் அமைந்துள்ள இடத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அச்சுவேலியைச் சேர்ந்த 11 பேர் அளவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தமது உறவினரொருவரை பார்வையிட சென்றுள்ளனர்.

எனினும் வைத்தியசாலையின் தற்போதைய பாஸ் நடைமுறையின்படி நோயாளி ஒருவரை இருவர் மட்டுமே அதிலும் பாஸ் உள்ளவர்கள் மட்டுமே பார்வையிட முடியும்.

இதனால், அங்கு வந்த அனைவரையும் பாதுகாப்பு ஊழியர்கள் வைத்தியசாலையின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு உள் செல்ல அனுமதி மறுத்துள்ளனர்.

இதனையடுத்தே நோயாளியைப் பார்வையிட வந்தவர்களுக்கும் பாதுகாப்பு ஊழியர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

முரண்பாடு முற்றி இரு பாதுகாப்பு ஊழியர்கள் மீது வந்தவர்கள் சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் காயமடைந்த இரு பாதுகாப்பு ஊழியர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையின் விபத்துசிகிச்சைப்பிரிவில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து ஊழியர்கள் மீதுதாக்குதல் மேற்கொண்ட இருவரை பொலிஸார் கைது செய்துள்ளதோடு, ஏனையோரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பாஸ் நடைமுறையினால் பாதுகாப்பு ஊழியர்கள் மற்றும் பார்வையிட வருவோருக்கிடையில் முரண்பாடுகள் தொடர்ந்த வண்ணம் உள்ள போதிலும் இது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகம் பெரிதாக அக்கறை கொள்வதில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)

# வாரம் ஒரு தகவல்

## பார்த்த ஞாபகம்

"எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம் சேர்!" "என்ன சந்தேகம்?"

"ஒருமனிதன் இன்னொருமனிதனின் முகத்தைப்பார்த்து இவன் இன்னார்தான் என்று அடையாளம் கண்டுபிடிக்கிறான்... மிருகங்களுக்கு எல்லா முகமும் ஒரே மாதிரித் தானே இருக்கிறது. அதெல்லாம் எப்படி அடையாளம் கண்டுகொள்கிறது?"

"அது அதுக்கு ஒரு டெக்னிக் இருக்கிறது! கரடிகள் என்ன செய்யும் தெரியுமா? தங்கள் குட்டிகளை நாக்கினால் நக்கும். பின்னர் இரை தேடப் போகும். திரும்பி வந்ததும் குட்டிகளை முகர்ந்து பார்க்கும். தனது உமிழ்நீர் வாசனையை வைத்து இதுதான் தன்னுடைய குட்டிகள் என்று அடையாளம் கண்டு கொள்ளும்"

"அமெரிக்காவில் ஓர் ஆராய்ச்சியாளர் புதிதாக குட்டிபோட்ட ஒரு தாய்க் கரடிக்கு தூக்க மருந்து கொடுத்து தூங்கவைத்தார். பின்னர் அதன் மூக்கில் தலைவலித் தைலத்தை தடவி விட்டார். அந்தக் கரடியின் குட்டிகளுடன் அநாதையாக தவித்துக் கொண்டிருந்த இன்னொரு கரடிக் குட்டியையும் சேர்த்துவிட்டார்.

தாய்க்கரடி தூங்கி எழுந்ததும் அதற்கு தன்னுடைய குட்டிகளை சரியாக மோப்பம் பிடிக்க முடியவில்லை. அநாதைக் கரடிக் குட்டியையும் தன்னுடைய குட்டியாகவே நினைத்து நக்க ஆரம்பித்ததாம்"

"நானும் சில சமயம் அந்தக் கரடி மாதிரி ஆகிவிடுகிறேன் சேர்"

"எப்டி?"

"இன்று காலையில் எங்கள் வீட்டு வாசலில் ஒரு சின்னப் பையனைப் பார்த்தேன். அவனை எங்கேயோ பார்த்த ஞாபகமாய் இருந்தது. சரியாக நினைவுக்கு கொண்டு வரமுடியவில்லை. அரைமணி நேரம் கழித்து தான் ஞாபகம் வந்தது!"

"யார் அவன்?"

"ஹி... என்னோட மகன் தான் சேர்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

10.11.2013

(ஐப்பசி 24, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு

அட்டமி பின்னிரவு 2.21 மணிவரை

திருவோணம் பிற்பகல் 2.31 மணிவரை

இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

சுபநேரம் 9.05-10.35 மணிவரை

**மேடம்** வீட்டைப் பழுதுபார்க்கும் எண்ணம் மேலோங்கும், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பிறர் உதவியுண்டு.

**இடபம்** மனக் குழப்பம் அகன்று மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், ஆன்றோர் சந்திப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, தேவையற்ற அச்சங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** பேச்சில் நிதானம் தேவை, போசன சுகமுண்டு, எடுத்த காரியத்தை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, செலவுகள் அதிகமாகும்.

**கடகம்** உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், கல்யாணக் கனவுகள் நனவாகு முயற்சிகள் கைகூடும், விருந்துக்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**சிங்கம்** பழைய கடன்களை வருவிக்க எடுத்த முயற்சி வெற்றி தரும், தொலைபேசித்தகவல்கள் மகிழ்ச்சி தரும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், போக விரும்பும் இடத்திற்கு போக முடியாமல் போகலாம், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** தாய்வழி ஆதரவு பெருகும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், கல்வியில் ஆர்வம் கூடும், ரோக பயமுண்டு, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** கூட்டு முயற்சிகள் வெற்றிதரும், சகோதர ஒற்றுமை பலப்படும், வாக்கு மேன்மையுண்டு, அந்நியர் சந்திப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பக் கவலைகள் ஏற்படலாம், வார்த்தைகளில் நிதானம் தேவை, தனவரவுகள் திருப்தி தரும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், ஆழ்ந்த சிந்தையுண்டு, நண்பர்கள் உதவ முன்வருவர், போசன சுகமுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், உணர்ச்சி வசப்படும் சூழ்நிலைகள் ஏற்படலாம்.

**மீனம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்துசேரலாம், வருமானம் திருப்தி தரும், அதிர்ஷ்டகரமான நாள்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 130 | 120 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 90 | 120 |
| தக்காளி | 90 | 70 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 30 | 40 |
| கோவா | 30 | 25 | 50 | 60 |
| கரட் | 40 | 40 | 40 | 120 |
| பூசணி | 30 | 20 | 20 | 50 |
| புடோல் | 30 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 40 | 20 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 190 | 180 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 130 | 200 |
| பாகற்காய் | 200 | 120 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 25 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 35 | 40 | 60 |
| பயற்றங்காய் | 120 | 120 | 210 | 80 |
| லீக்ஸ் | 80 | 70 | 80 | 100 |
| பீற்றூட் | 20 | 15 | 25 | 40 |
| கறிமிளகாய் | 100 | 60 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 50 | 50 | 60 |
| போஞ்சி | 90 | 80 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 300 | 150 | 170 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 35 - 45 |

# வீடழிப்புக்கு எதிராக வெகுஜன போராட்டங்களை நடத்துவோம்

## புதிய ஜ.மா.லெனினிசக்கட்சி

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவ பிடிக்குள் இருந்து வரும் மக்களின் வீடுகள் இடித்து அழிக்கப்படுவது இராணுவத்தின் நிரந்தர இருப்பையும் விஸ்தரிப்பையும்` நோக்காகக் கொண்டதாகும்.

1990 இல் வலி.வடக்கில் இருந்து துரத்தப்பட்ட மக்களில் சுமார் 3 இலட்சம் மக்கள் அவல வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். அவர்களது வீடுகளின் ஒரு பகுதியே தற்போது இராணுவத்தினரால் இடித்தழிக்கப்பட்டு வருகிறது. இதனை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கிறது என அக்கட்சியின் வடபிராந்திய செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இக்கொடூரச் செயலை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும். இதற்குரிய் ஒரேவழி மக்கள் அணி திரண்டு வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதுதான். இதனை முன்னெடுப்பதற்கு முன்வந்திருக்கும் வலி. வடக்கு மீள்குடியேற்ற குழுவின் நடவடிக்கைகளுக்கு எமது கட்சி முழுமையான ஆதரவைத் தெரிவிக்கின்றது.

யுத்தம் முடிவடைந்து நான்கரை வருடங்கள் கடந்த பின்னரும் அவர்களது சொந்த நிலங்களுக்கு செல்லவிடாது தடுக்கப்படுவது அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பு போன்றதாகும்.

இதனை வெறுமனே தேர்தல்களில் மக்கள் புள்ளடி இடுவதால் மட்டும் எதிர்த்து நிற்க முடியாது.

அதற்கு அப்பால் மக்கள் தமது பலத்தை ஒருங்கிணைத்து வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதை தவிர வேறு மார்க்கம் கிடையாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொதுநலவாய அமைப்பிலிருந்து இலங்கை விலக வேண்டும்!

## மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்து

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இருந்து இலங்கையின் உறுப்புரிமையை நீக்கிக் கொள்ள வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

அந்த முன்னணியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

பொதுநலவாய அமைப்பின் தலைமைத்துவத்தை பிரித்தானியா தம்வசம் வைத்துள்ள நிலையில் இலங்கை தொடர்ந்தும் அந்த அமைப்பில் அங்கம் வகிப்பது முறையான செயற்பாடு அல்லவென்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை உடனடியாக அதில் இருந்து விலக வேண்டும் என தெரிவித்த அவர், பிரித்தானியா தொடர்ந்தும் தலைமைத்துவத்தை தம்வசம் வைத்துக் கொண்டு ஏனைய பதவி தரங்களை பிற நாடுகளுக்கு வழங்குகின்றமை அந்த இராச்சியத்தின் ஏகாதிபத்தியத்தை எடுத்துக்காட்டுவதாக விஜித ஹேரத் சுட் டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில் பொதுநலவாய மாநாட்டின் பின்னர் நாட்டு மக்களின் மீது சுமத்தப்படும் பொருளாதார சுமை மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-2)


### வீடு வாடகைக்கு

கச்சேரி மற்றும் பிரதான பாடசாலைகளுக்கு மிக அண்மையில் விசாலமான வீடு குருசோ வீதியில் வாடகைக்கு இருக்கிறது. வாகனங்கள் தரிப்பிடம் போதிய அளவு இருக்கின்றது

தொடர்புகளுக்கு:
0711712003, 0779344876

(4447)



G.C.E. (O/L) மாணவர்களுக்கான இலவச இறுதிக் கருத்தரங்கு பிரபல கொழும்பு ஆசிரியர்கள் பங்குபற்றுகின்ற கணிதம், ஆங்கிலம், விஞ்ஞான பாடத்திற்கான வினாத்தாள்களுடன் கூடிய இறுதி விசேட கருத்தரங்கு SMS மூலம் பதிவுகளுக்கு

யாழ்.மாணவர்கள் JF<Space>Name& Address & Phone number

கிளிநொச்சி மாணவர்கள் KC<Space>Name & address Phone number

என type செய்து 0770249071 இற்கு அனுப்புங்கள்

பதிவுகளை 15 ஆம் திகதிக்கு முதல் மேற்கொள்ளவும்.

**மேலதிக விபரங்களுக்கு:** International Knowledge Pool

இல.120/6, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

இல.330, ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சி

(வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தின் பின்புறம்)

**தொ.பே: 0770249071, 021 221 7105**

முதல் 200 மாணவர்களுக்கு அனுமதி இலவசம்



### பள்ளி மாணவர்களுக்கு ஐந்து ஈஸ்வரங்களுக்கான யாத்திரை

ஆண்டு 8 இற்கு மேல் கல்வி கற்கும் ஆண் மாணவர்களுக்காக இரண்டு நாட்களில் நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், மட்டக்களப்பு தான்தோன்றீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய ஐந்து ஈஸ்வரங்களுக்கும் சென்றுவர போக்குவரத்து (A/C Adjustable Seat TV) உணவு, தங்குமிடம் என்பவற்றுக்கு மொத்தக் கட்டணம் 5000/- மட்டுமே

முதல் பதிவு செய்யும் 10 மாணவர்களுக்கு ஒரு School Bag இலவசம்

பயணத் திகதி எதிர்வரும் சனிக்கிழமை 16.11.2013 காலை 6.30 மணிக்கு சென்று 17.11.2013 இரவு நிறைவு பெறும்.

**ஆசனப் பதிவுகளுக்கு முந்துங்கள்**

தொடர்புகளுக்கு: Sanjeys Tourism

713, Hospital Road, Jaffna.

T.P: 021 221 7070, 0777474111, 021 5671671

(சி-5429)

**வரணி புக்கிங் சென்ரர்**

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222 868, 0214900955









குறைந்த கட்டணத்தில்
24 மணி நேர சேவை

Northern Central Hospitals

### நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்

வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

**கண் சத்திர சிகிச்சை**



விசேட நிபுணத்துவம் வாய்ந்த கண் சத்திர சிகிச்சை நிபுணரால் சகல கண்சத்திர சிகிச்சைகளும் குறைந்த செலவில் மேற்கொள் ளப்படுகின்றன. நாளாந்த கண் கிளினிக்குகளும் நடைபெறுகின்றன.

**காது மூக்கு தொண்டை சத்திர சிகிச்சை**

விசேட வைத்திய நிபுணரால் உடனுக்குடன் நவீன சத்திர சிகிச்சைக் கூடத்தில் மேற்கொள்ளப் படுகின்றது.



(சி/5239)

**Dentel Surgery (Orthodontic) சகல விதமான பற்சிகிச்சைகள்**



பற் சிகிச்சை நிலையத்தில் பல் கட்டுதல் பல்முடி போடுதல் பாலமிடுதல் என்பவற்றுடன் சகல பற்சிகிச்சைகளும் orthodontic சிகிச்சையும் தினமும் மேற்கொள்ளப்படுகின்றன.

342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து (V)
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா : 87 செவ் 8 இல்
தகைமை/தொழில்: A/L / Computer Manager
தொ.இ: B/2465

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா : 55 உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L, Dip. in Electronic / TV Repairing (கனடா PR)
தொ.இ: B/2466

பிறப்பு: 1978 இந்து (V)
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா : 73 செவ் 12 இல்
உயரழ்: 5'5"
தகைமை/தொழில்: A/L / Store Keeper (USA)
தொ.இ: B/2468

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா : 58 சூரி செவ் 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: B.Sc / நில அளவையாளர்
தொ.இ: B/2469

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து (Pa)
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா : 54.25 செவ் 1 இல்
உயரம்: 5"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/2567

பிறப்பு: 1990. இந்து (V)
நட்சத்திரம்: அனுசம்
கி.பா : 29.5 செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/2569

பிறப்பு: 1990 இந்து (V)
நட்சத்திரம்: மகம் 4
கி.பா : 13.25 செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/2571

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா : 45.75 சூரி செவ் 7 இல்
தகைமை/தொழில்: BIT, AAT / Data Entry Operator
தொ.இ: G/2573


சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

# காரைநகர் பிரதேசசபைக்கு நிரந்தர கட்டடமில்லை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச சபை இன்று வரை.நிர ந்தர தலைமைக் காரியாலயமின்றி இயங்கி வருவதாக தவிசாளர் சுட்டிக்காட்டியுள்ளார். மேற்படி பிரதேச சபை இரண்டரை வருடங் களாக தலைமைக் காரியாலயமின்றி வசதிகளற்ற வீடொன்றிலே இயங்கி வருகின்றது.

இதையடுத்து முன்னர் காரைநகர் பிரதேச செயலகம் அமைந்திருந்த கட்டடத்தைத் தற் காலிகமாகத் தருமாறு பிரதேச சபைத் தவிசாளர் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தார்.

வலந்தலைச் சந்திப் பகுதியிலுள்ள குறித்த கட்டடம் கிடைக்குமாயின் இப் பிரதேச மக்கள் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை களில் தமது தேவைகளை இலகுவாக பெற் றுக் கொள்ள முடியும்.

எனவே, மக்களின் தேவைகளை இலகு படுத்தும் வகையிலும் பிரதேச சபையினர் தமது வேலைகளை முன்னெடுக்க வசதியாகவும் குறித்த கட்டடத்தை வழங்க முன்வர வேண்டு மென பிரதேச சபைத் தவிசாளர் வே.ஆனை முகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆயினும் அப்பிரதேச செயலக கட்டடத்தில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் அரச அலுவலர்களுக்கு பயிற்சி நடைபெறுவ தாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கடிதம் மூலம் பிரதேசசபைக்கு அறிவித்துள்ளார். (அ-9)



நன்றி:- மிரர்

## ரவிராஜின் நினைவுப் பேருரை

மாமனிதர் நடராஜா ரவிராஜின் நினைவு தினமும் நினைவுப் பேருரையும் இன்று ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச் சேரி டச்சு வீதியிலுள்ள ஐங்கரன் மண்ட பத்தில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் வரவேற்புரையை வைத்தியர் எஸ்.எஸ். அருளானந்தம், சிறப்புரையை வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ. கே.சிவஞானம், விசேட உரையை பேராசிரியர் சிற்றம்பலம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அத்தோடு, நினைவுரைகளை ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணே சனும், கலாநிதி சிவமதி சிவச்சந்திரனும் ஆற்ற வுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித் துள்ளனர். (அ-9-23-29)




# 50 மில்லியன் ரூபா செலவில் ஓய்வு மண்டபத்திற்கு அடிக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நயினாதீவு செல்லும் சுற்றுலாப் பயணிகள் தங்கி ஓய்வெடுப்பதற்கென மண் டபம் ஒன்று சுமார் 50 மில்லியன் ரூபா செல வில் வேலணை பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட மண்கும்பான் பகுதியிலுள்ள அரசாங்க காணியில் அமைக்கப்படவுள்ளது.

26 அறைகளைக் கொண்ட இந்த மண்டபம் அமைப்பதற்கான 50 மில்லியன் ரூபா நிதியை பொதுசன மக்கள் தொடர்பாடல் அமைச்சு வழங்கவுள்ளது.

இம் மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற் றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமை ச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.





சந்திரசிறி ஆகியோர் பிரதம விருந்தினர்க ளாக கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டியிருந்தனர்.

இதில் வடக்கு மாகாண ஆளுநரின் செய லாளர் எல்.இளங்கோவன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் றூபினி வரத லிங்கம், வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ். சிவராசா, செயலாளர் திருமதி சதீசன் மஞ்சுளா தேவி உள்ளிட்ட பலர் கலந்து கொண் டனர். (அ-6)

# எமது நிலங்களை எம்மிடம் தாருங்கள்

## பலாலி மக்கள் கோரிக்கை

எமது நிலங்களை எம்மிடமே தாருங்கள் என பலாலி மக்கள் இராணுவத்திடம் கோரியுள்ளனர். பலாலியை சொந்த இடமாக கொண்ட, தற் போது இடம்பெயர் முகாம்களில் வசிக்கின்ற மக்களே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் பலாலி கிழக்கில் தையிட்டி, மயிலிட்டியைச் சேர்ந்த மக்களை இராணுவம் குடியமர்த்தியிருந்தது.

இம்மீள்குடியேற்றத்தையடுத்தே பலாலி யைச் சொந்த இடமாக கொண்ட மக்கள் இராணு வத்தினரிடம் தம்மை அங்கு குடியேற்றுமாறு கோரியுள்ளனர்.

சொந்த நிலங்களில் மீளவும் குடியேற்றுங் கள். பலாலியைச் சேர்ந்தவர்கள் நாமிருக்க, வேற் றிடத்து மக்களை அங்கு குடியேற அனுமதிக்க வேண்டாம் என்ற கோரிக்கைகளுடன் பலாலியை சேர்ந்த மக்கள் முகாம் தலைவர்களை இன்று சந்திக்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை இராணுவம் வேறு ஒருவரு க்கு சொந்தமான காணியில் இன்னொரு இடத்தைச் சேர்ந்த மக்களைக் மீள்குடியமர்த்தி ஒரே இன மக்களிடையே முரண்பாடுகளை ஏற் படுத்த முனைகின்றது என குற்றஞ்சாட்டிய வலி.வடக்கு மீள்குடியேற்றத்தலைவர் எஸ்.சஜீ வன், இது பொதுநலவாயமாநாட்டை அடிப் படையாக கொண்ட பாதுகாப்பு அமைச்சின் திட்டமிட்ட செயற்றிட்டம் என்றார்.

இவ்வாறு மக்களினை சொந்த நிலங்களில் லாத வேறு இடங்களில் மீள்குடியமர்த்து வதன் மூலம் இராணுவம் பெருமளலான நிலங் களை கையகப்படுத்த முயற்சிக்கின்றது என வும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (அ-4)

# இளைஞர் எம்.பிக்களின் ஏற்பாட்டில் கருத்தரங்கு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஏற்பாட்டில், இவ்வாண்டு கல்விப் பொதுத் தராதர சாதா ரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் களுக் கான இலவச கல்விக் கருத்தரங்குகள் மற் றும் செயலமர்வுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 22 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கு களில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங் களுக்கு இரண்டு நாட்கள் செயலமர்வு முதலில் இடம்பெறவுள்ளது.

செயலமர்வின் முதல் கட்டமாக பண்டத் தரிப்பு பிரதேச மாணவர்களுக்கு, பண்டத்தரி ப்பு இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் செயலமர்வு நடைபெறவுள்ளது.

முதற்கட்ட செயலமர்வில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல் லூரி, பிரான்பற்று கலைமகள் வித்தியா சாலை, பண்டத்தரிப்புயசிந்தாறோ.க.த.க ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இச் செயலமர்வில் பிரதேச எல்லைக்குட் பட்ட அனைத்து மாணவர்களும் பயன்பெற முடியுமெனவும், தொடர்ந்து கருத்தரங்குகள் இடம்பெறும் இடங்கள் பின்னர் அறிவிக்கப் படுமெனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள் ளனர். (அ-9-23)







பருத்தித்துறையில் சுமார் 75 இலட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட முதியோர், குழந்தைகள் நலன்புரி பேணுகமான ராஜாராணி இல்லம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமராட்சி வடக்கு பிரதேச மூத்தோர் பேரவைத் தலைவர் சிவா கிருஷ்ணமூர்த்தி தம்பதிகள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் இல்ல நிறைவேற்றப் பணிப்பாளர் யோ.இருதயராஜா நிற்பதையும் திரு.திருமதி விக்டோரியா அல்சலோம் இல்லத்தை திறந்து வைப்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொழும்பு கம்பன் கழகத் தலைவர் தெ.ஈஸ்வரன் உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-தும்பளைச் செய்தியாளர்)

# பௌத்த விரோத செயல்களை எதிர்த்து சாகும் வரை குரல் கொடுப்போம்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையான பௌத்த புத்திரர்களின் உயிர் மூச்சு இருக்கும் வரை இலங்கைக்குள் அரசாங்கம் அல்ல எவரும் பௌத்த விரோத செயற்பாடுகளில் ஈடுபட இடமளிக்க முடியாது என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

கசினோ சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரிப் பணத்தை தரகு பணமாக பெறும் நோக்கிலேயே ஜேம்ஸ் பாக்கருக்கு வரிச் சலுகையின் அடிப்படையில் கசினோ தொழிலை ஆரம்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

வரிகளை அறவிடாது ஜேம்ஸ் பாக்கருக்கு சிறப்புரிமைகளை வழங்குவதில் அரசாங்கத்துக்கு ஒரு நோக்கம் இருக்கின்றது.

அரசாங்கம் பணம் இல்லாத கடனில் தனது பணிகளை முன்னெடுத்து செல்கிறதாயின் வரிகளை அறவிட வேண்டும்.

இந்த அரசாங்கம் பாரிளவில் பெறுமதியான பொருட்களை ஏற்றிய லொறியை போன்றது. பள்ளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அந்த லொறிக்கு கொடுக்கப்பட்டுள்ள ஜாதிக ஹெல உறுமய என்ற, சிறிய தடை கட்டையை நீக்கினால் போதும் லொறி பள்ளத்தில் வீழ்வது உறுதி.

மகிந்த சிந்தனை வழியாக எதிர்பார்த்தவற்றை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமாயின் இந்த சிறிய தடைக்கட்டை இருக்க வேண்டும். எனினும் பிரச்சினைகள் ஏற்படும் பொழுது நாங்கள் எங்கள் நிலைப்பாடுகளை முன்வைப்போம்.

விபச்சாரத்தை சட்டமாக்கும் சட்டமுலம் ஒன்று கொண்டு வரப்படின் அதனை நாம் எதிர்ப்போம். கசினோ, விபச்சாரம், போதைப் பொருள், ஆபாச திரைப்படங்கள் மற்றும் கசிப்பு ஆகியன ஊடாகவே தீமையான பஞ்ச மகா சக்திகளின் தலைமை நிலையம் உருவாகிறது.இவற்றை மேற்கொள்ள அரசாங்கம் முயற்சித்தால், நாடு இறப்பதற்கு முன்னர் நாங்கள் மரணிக்க தயாராக இருக்கின்றோம் என்றார். (அ-2)

# மன்மோகன் குழுவினருக்கு ஹோட்டல் அறைகள் தயார்

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை.

இருந்தபோதிலும் பிரதமர் மற்றும் பிரதிநிதிகள் தங்கியிருப்பதற்கான ஹோட்டல் அறைகள் ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளன என்று த இந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தியா இதற்கு முன்னர் எந்த பொதுநலவாய நாடுகளின் மாநாட்டையும் இதுவரை புறக்கணித்ததில்லை. எவ்வாறாயினும் இந்திய வெளிவிவகார அமைச்சு உட்பட அந்த அரசின் உயர் மட்ட அதிகாரிகள் இந்திய மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையில்நடைபெறும்பொதுநலவாய மாநாட்டை இந்தியா எந்த வகையிலும் புறக்கணிக்கக் கூடாது என இந்திய பாதுகாப்பு ஆய்வாளரான அஜய் சைனி தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் இலங்கை வருவாராயின் நிச்சயமாக அவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார் என புதுடில்லி தகவல்கள் தெரிவித்தன. (அ-2)

# மாநகர சபை பொதுக்கூட்டத்தை ஒத்தி வைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள மாதாந்த பொதுக்கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலி.வடக்கு வீடழிப்பு, காணி சுவீகரிப்பு , சிங்கள குடியேற்றம், போர்க்குற்ற விசாரணை ஆகியவற்றை முன்வைத்துஅதேதினத்திலிருந்துஉண்ணாவிரதப் போராட்டத்தை மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இப் பொதுக் கூட்டத்தை கடந்த மூன்று மாதங்களாக நடத்தாத யாழ். மாநகர சபை நாளை மறுதினம் அதனை நடத்து வதால் மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதில் பங்கு கொள்ள முடியாமற் போய்விடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதல்வரும் அவரைச் சார்ந்தோரும் உண்மையில் மக்களின் கருத்தையறிந்து செயற்படுவதில் கரிசனையாக இருப்பவராயின் அன்றைய இக்கூட்டத்தை பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைத்து தாங்களும் இப்போராட்டத்தில் கலந்து தமிழரின் ஒற்றுமையை எடுத்துக் காட்டவேண்டுமென விநயமாக வேண்டுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# சில ஐரோ. நாடுகள் அரசை புரிந்து கொள்ளவில்லை

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகள் சில இலங்கையின் உண்மையான நிலைமைகளை புரிந்து கொள்ளாது செயற்பட்டு வருவதாக பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

செக் குடியரசின் வெளிவிவகார அமைச்சர் எச்.ஈ. ஜேன்கோஹோவ்ட் மற்றும் பிரதமர் இடையில் பிரதமரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,இலங்கையில் இருந்து வந்த பயங்கர வாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் நல்லாட்சி, பொருளாதார அபிவிருத்தி, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம்மற்றும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் அபிவிருத்திகள் வேகமடைந்துள்ளன.

இலங்கையும் செக் குடியரசும் சம்பிரதாய பூர்வமான நண்பர்கள். முன்னாள் பிரதமர் சிறி மாவே பண்டாரநாயக்க மற்றும் செக் குடியரசின் டிடோ ஆகியோருக்கு இடையிலான இராஜ தந்திர உறவுகள் இதற்கு உதவியுள்ளன.

இலங்கையின் கைத்தொழில் துறைக்கு அன்றைய செக்கோஸ்லோவாக்கியா அரசாங்கம் பல உதவிகளை வழங்கியது என்றார். (அ-2)

# மரண அறிவித்தல்

## வைத்திய கலாநிதி ருக்மணி உதயகுமார்



ஆதி.மயிலிட்டியை பிறப்பிடமாகவும் சுன்னாகம் மயிலணி சிவன்கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி ருக்மணி உதயகுமார் அவர்கள் (08.11.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராசா, முத்துப்பிள்ளை தம்பதியரின் இளைய அன்பு மகளும் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் ராணி தம்பதியரின் மருமகளும் உதயகுமாரின் (France) பாசமிகு மனைவியும் அர்ச்சணா (Vitebsk state Medical University, Belarus) அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சீதாதேவி (விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்) ராஜகோபால் (கூட்டுறவு உத்தியோகத்தர்) மற்றும் கஸ்தூரி, சறோஜினி தேவி (முன்னாள் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் அரியநாயகம், இராஜநாயகம் (முன்னாள் சுகாதார பரிசோதகர்), குணநாயகம், செல்வநாயகம் (பாகிஸ்தான்), பிறேமச்சந்திரன் (France), கமலாதேவி (France) சுசிலாதேவி (France) நாகேஸ்வரி (தேவி - France), சுலோசனாதேவி (வேவி Holland) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.11.2013 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மயிலணி சிவன் கோயிலடி,
மயிலணி, சுன்னாகம்.

**தொடர்புகளுக்கு: ரி.மகிந்தன்**
*0776751134*

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(4456)

ம.அ.மரியஜெனிற்றா, சாவகச்சேரி

வணக்கம் அண்ணா!

தற்போது பேஸ்புக்கினால் ஏற்படும் விபரீதங்கள் பற்றி நீர் என்ன கூற விளைகின்றீர்?

**இதை தவற விடாதீங்க.. எனும் தலைப்பில் ஒரு வீடியோ பேஸ்புக்கில் உலா வருகிறது. அதில் ஒரு இளம் பெண்ணும் வயது முதிர்ந்து தலை வழுக்கை விழுந்த ஒருவரும் வீடியோ கோலில் பேசுவதற்கு தயாராகின்றனர். அந்த இளம் பெண் தன்னை அழகுபடுத்துகிறாள. அந்த முதியவர் தன் வழுக்கைத் தலைக்கு டோப்பை போடுகிறார். தன்னை அழகானவன் போல் மாறறிக் கொண்டு வீடியோவில் பேச முறப்படுகின்றாா. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தவுடன் அதிர்ச்சியடைந்து விடுகின்றனர். ஏனெனன்றால் அவர்கள் தந்தையும் மகளும்.**

உ.தர்சிகா, வல்வெட்டி

அன்பின் வியாசர் அண்ணா!

ஆண்கள் காதலிக்கும் போது காட்டும் அன்பை விட திருமணத்தின் பின்னர் குறைவாக உள்ளது. இதற்கு காரணம் என்னவாக இருக்கும்?

**வீட்டில் ஒரு ஆட்டுக்குட்டி நிற்கிறது. அதை எவ்வளவு அன்பாய் கொஞசி தடவி விடுகின்றோம். அந்த கொஞ்சலும் தடவலும் அது ஒரு குட்டிக்கு தாயானதும் கிடைக்குமா?**

பொ.இளவரசி, பருத்தித்துறை

அன்பின் வியாசர் அண்ணா!

உங்களை யாரும் அழகு என்று சொல்லி புளுகினால் எப்படி இருக்கும்?

**உண்மையைச் சொல்லும் போது ஏற்பதும் பொய்யைச் சொல்லும் போது எதிர்ப்பதும் நல்ல மனிதனுக்கு அழகு நீர் உண்மையைச் சொன்னதால் அதை ஏற்றுத்தானே ஆக வேண்டும்.**

பஸ்சில் கர்ப்பிணித் தாய்மாருக்கு ஆசனம் கொடுக்காத இளைஞர்களை யாது செய்யலாம்?




சி.றெபேக்கா, மட்டுவில்

அன்பின் வியாசரே!

பஸ்சில் கர்ப்பிணித் தாய்மாருக்கு ஆசனம் கொடுக்காத இளைஞர்களை யாது செய்யலாம்?

**பத்துக் கிலோ கல்லை அவர் வயிற்றில் கட்டிவிட்டு மட்டுவில் To யாழ்ப்பாணம் பஸ்சில் நின்றபடி பிரயாணம் செய்ய விட்டால் அதன் வலியும் தாய்மையின் தியாகமும் புரியும்.**

பத்திரிகைத் தொழிலில் எனக்கு நல்ல அனுபவமுண்டு. அங்கு வந்தால் எனக்கு வேலை தருவீர்களா?

ரி.விஜி

அன்பின் வியாசர் அண்ணா!

உலகில் அன்புக்கு ஈடான பொருள் ஏதேனும் உண்டா?

**சிலரிடம் கேட்டால் இல்லை என்று சொல்வார்கள். பலரிடம் கேட்டால் இருக்கென்று சொல்வார்கள். எதுவென்று கேட்டால் அதுதான் பணம்.**

பிரான்சிஸ், கொழும்புத்துறை

அன்பின் வியாசர் அவர்களே!

பத்திரிகைத் தொழிலில் எனக்கு நல்ல அனுபவமுண்டு. அங்கு வந்தால் எனக்கு வேலை தருவீர்களா?

**பிரான்சிஸ் பதில் தருவது மட்டும் தான் எனது வேலை. இப்படி கேள்வியிலேயே அப்பிளிகேசன் போட்டால் எப்படி பதில் தருவது?**

***கொஞ்சம் சிரிங்கப்பா...***




ஜெ.துஸ்யந்தன், சுன்னாகம்

வியாசரே!

கணவனை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மனைவி பற்றி?

**திருமணம் முடிந்து வீட்டிற்கு வரும் பெண்ணிடம் சாவிக்கொத்தைக் கொடுப்பது எதற்காக? எல்லா பொறுபபுக்களையும் ஏற்கச் சொல்லித்தானே. அது எப்படி கணவனை மட்டும் கட்டாக்காலியாக விட்டுவிடமுடியும்.**

த.கலைவாணி, வல்வெட்டித்துறை

அன்பின் வியாசர் அண்ணா!

ஒரு பெண்ணிற்கு புகுந்த வீட்டிலா? அல்லது பிறந்த வீட்டிலா அன்பு அதிகமாக இருக்கும்?

**மாமன் மாமி உயிருடன் இல்லாவிட்டால் புகுந்தவீடு சொர்க்கம் (தற்போதைய பெண்களுக்கு மட்டுமே பொருந்தும்)**

# பொதுநலவாய உச்சிமாநாடு

## ஒருபார்வை

பொதுநலவாய நாடுகள் என்பது பிரித்தானியப் பேரரசின் கீழ் இருந்த 53 சுதந்திர நாடுகளின் கூட்டமைப்பை குறிக்கும். பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை அவ்வமைப்பின் உறுப்பு நாடு ஒன்றில் இடம்பெறுகிறது. இம்மாநாடு நடைபெறும் நாட்டின் அரசுத் தலைவர், பிரதமர் அல்லது ஜனாதிபதி மாநாட்டுக்கு தலைமை வகிப்பதோடு, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கும் அவரே பொதுநலவாய நாடுகள் அமைப்பின் நடப்புத் தலைவ ராக் செயற்படுவார்.

பொதுநலவாய தலைவர்களின் முதலாவது மாநாடு 1971 இல் சிங்கப்பூரிலும் கடைசியாக 2011 இல் அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இடம்பெற்றது. சிங்கப்பூரில் நடைபெற்ற முதலாவது பொதுநலவாய நாடுகளின் மாநாடு தவிர்ந்த ஏனைய மாநாடுகளில் எலிசபெத் மகாராணி கலந்து கொண்டார். தென்னாபிரிக்காவுக்கு பிரித்தானியா ஆயுதங்கள் விற்பனை செய்வதாக எழுப்பப்பட்ட சர்ச்சைகளை அடுத்து எலிசபெத் மகாராணியை சிங்கப்பூரில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டாம் என அன்றைய பிரித்தானிய பிரதமர் எட்வர்ட் ஹீத் கேட்டுக்கொண்டதை அடுத்து அவர் கலந்து கொள்ளவில்லை. 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15,16,17ஆம் திகதிகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் இம் மாநாடானது இலங்கையில் நடக்கும் முதலாவது பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடாகும்.



87 வயதாகும் மகாராணியின் தேக நிலை இடம் கொடுக்காமையால், கொழும்பில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் மகாராணிக்கு பதிலாக பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் கலந்து கொள்கிறார்.

1926 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட பால்பர் உடன்படிக்கை, 1931 ஆம் ஆண்டு டிசெம்பர் 11 ஆம் திகதி உருவாக்கப்பட்ட வெஸ்ட் மின்ஸ்டர் சாசனம் ஆகியனவற்றின் படி 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி லண்டன் பிரகடனம் மூலம் இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

ஜனநாயகத்திற்கு வலுவூட்டுதல், மனித உரிமைகளை பாதுகாத்தல், நல்லாட்சி தருதல், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தல், தனிமனித உரிமை பாதுகாத்தல், மனித சமூக சமத்துவம் பேணுதல், தாராள வர்த்தகம் நடத்தல், உலக சமாதானத்தை நிலைநிறுத்தல் ஆகியன பொதுநலவாய நாடுகளின் முக்கிய குறிக்கோள்களாகும்.

எலிசபெத் மகாராணிதான் பொது நலவாய நாடுகளின் தலைவி. ஆனால் சகல நிர்வாக பொறுப்புகளையும் ஏற்று நடத்துபவர் பொதுநலவாய நாட்டு தலைமைச் செயலாளரே. பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைமையகம் லண்டனில் மார்லப்பரோ ஹவுஸில் அமைந்துள்ளது.

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் மக்கள் தொகை 192 கோடிகளுக்கு மேல். இது உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு என்பது முக்கியமான அம்சமாகும். பொதுநலவாய அமைப்பு நாடுகளின் சனத்தொகை கூடிய நாடாக இந்தியாவும், சனத்தொகை குறைந்த நாடாக துவாலுவும் காணப்படுகிறது. பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டி நான்கு ஆண்டுகளுக்கொரு முறை நடத்தப்பட்டு வருகிறது.

பொதுநலவாயத்தில் அங்கத்துவம் பெறும் 53 நாடுகளின் விபரம் வருமாறு.

இலங்கை, இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா, மாலைதீவு, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, உகண்டா, தென்னாபிரிக்கா, சிங்கப்பூர், நைஜீரியா, கென்யா, ஜமெய்க்கா, கனடா, நமீபியா, புரூண்ண, அன்டிகுவா-பர்புடா, பகாமாசு, பார்படோசு, பெலீஸ், போட்சுவானா, கமரூன், சைப்பிரஸ், டொமினிக்கா, பிஜித் தீவுகள், கம்பியா, கானா, கிரெனடா, கயானா, கிரிபத்தி தீவு, லெசோத்தோ, மலாவி, மால்ட்டா, மொரீசியஸ், மொஸாம்பிக், நவூரு; பப்புவா நியூ கினி, செயிண்ட் வின்செண்ட் கிரெனேடின்ஸ், சமோவா, சேஷெலட்ஸ், சியெரா லியொன், சாலமன் தீவுகள், சுவாசிலாந்து, டொங்கா, திரினிடாட் டொபாகோ, துவாலு, ஐக்கிய தான்ஸானியாக் குடியரசு, வனுவாட்டு, சாம்பியா, செயிண்ட் கிட்சும் நெவிசும், செயிண்ட் லூசியா ஆகியனவாகும்.

இம்முறை 2013 ஆம் ஆண்டு இலங்கையில் கொழும்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பொதுநல வாய அரச தலைவர்கள் மாநாடு நடைபெறுகிறது. இது 23 ஆவது பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாடாகும். ஏற்கனவே 7ஆவது மாநாடு இந்தியாவின் கோவா மாநிலத்தில் பிரதமர் இந்திரா காந்தி தலைமையில் 1983 ஆம் ஆண்டு நடைபெற்றது. 11 ஆவது மாநாடு மலேசியாவில் கோலாலம்பூரில் பிரதமர் மஹாதீர் பின் முகமது தலைமையில் 1989ஆம் ஆண்டு நடைபெற்றது. லண்டனில் மாநாடு மூன்று (1977, 1986, 1997) தடவைகள் நடைபெற்றிருக்கின்றன. இலங்கையை தொடர்ந்து 2015ஆம் ஆண்டு பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு பிரித்தானியாவில் நடைபெற இருக்கிறது. ✸

**அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (யாழ்ப்பாணம்)**

## பிள்ளையார் ஆலயத்தில் விக்கிரகங்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் அமைந்துள்ள கோவில் ஒன்றில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விக்கிர கங்கள் திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கல்வியங்காட்டில் அமைந்துள்ள சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த ஆலயத்தின் பூசகர் அன்றைய தினம் காலை ஆலயத்தில் பூஜை செய்வதற்காக ஆலயத்தை திறக்க வந்தபோதே ஆலயத்தின் முன்வாயில் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு வெண்கல சிலைகள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பூசகர் ஆலய நிர்வாகத்திற்கு அறிவித்ததனையடுத்து நிர்வாகத்தினர் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-4-6)

# வடக்கின் காணி அபகரிப்பு தொடர்பில் பிரதிநிதிகளுக்கு எடுத்துரைப்பு!

(கொழும்பு)

**போருக்கு பின்னரான இலங்கையின் வடபகுதியில் நிலைமைகள் எப்படி இருக்கின்றன, மக்களின் வாழ்க்கை நிலைமை எப்படி இருக்கின்றது என்பதை நேரில் கண்டறிவதற்காக அவுஸ்திரேலியாவின் செனட்டர் லீ ரியானொன், நியூசிலாந்து நாட்டின் கிறீன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேன்லொகி ஆகிய இருவரும் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.**

இவர்கள் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், புதிதாகப் பதவியேற்றுள்ள வட மாகாண சபையின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.



இங்குள்ள நிலைமைகளை அறிந்து அது தொடர்பில் தமது நாடாளுமன்றத்திலும், தமது வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுக்கும் தாங்கள அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக குறித்த இரு பிரதிநிதிகளும் தெரிவித்தனர்.

தங்கள் விஜயத்திற்கும், கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்கும் எந்தவிதமான தொடர்புமிலையென்றும், தாங்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளாத போதிலும் தங்கள் நாட்டைச் சேர்ந்த வேறு பிரதிநிதிகள் கலந்து கொள்வதனால், தமது விஜயத்தின் மூலம் கண்டறியப்படும் தகவல்கள் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வடபகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்ற காணி அபகரிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் வீடமைப்பு, காணாமற் போனோர் தொடர்பான பிரச்சினை, சிறைகளில் வாடுகின்ற அரசியல் கைதிகளின் விடுதலை, போரினால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்துள்ளவர்களின் வாழ்க்கை நிலைமை, மோதல்களில் சிக்கியும் ஷெல் தாக்குதல்களில் காயமடைந்தும் முள்ளந்தண்டு பாதிப்புக்கு உள்ளாகி அவயவங்கள் செயலிழந் துள்ளவர்களின் நிலைமை மற்றும் மனித உரிமை நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து தாங்கள் இந்தப் பிரதிகளுக்கு எடுத்துரைத்ததாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர். (அ-2)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினரால் கோப்பாய் சங்கமத்தில் யாழ்.மாவட்டத்தின் பிரதேச இளைஞர் கழக சம்மேளன நிர்வாக உறுப்பினர்களுக்கான 3 நாட்கள் தலைமைத்துவ பயிற்சி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளன தலைவர் எஸ்.லக்ஷன் மக்கல விளக்கேற்றுவதையும் பயிற்சியில் ஈடுபட்ட நிர்வாக உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-தனங்கிளப்பு செய்தியாளர்)

## கைகொடுக்கும் நண்பர்களுக்கு தொண்டர்கள் திரட்டப்படுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பு விரைவில் தனது ஓராண்டை பூர்த்தி செய்யவுள்ளது. ஸ்ரீலங்கா சுமித்ரயோவின் யாழ்ப்பாணக் கிளையாக இந்த அமைப்பு யாழ்ப் பாணத்தின் 4 ஆம் குறுக்குத் தெரு 104 ஆம் இலக்கத்தில் உள்ள பணி மனையில் இயங்கி வருகின்றது.

வடபகுதியில் தொடர்ந்து பெருமளவில் தற்கொலைகள் இடம் பெற்று வருவதால், கை கொடுக்கும் நண்பர்களின் நடவடிக்கைகளை மேலும் விரிவாக்கத் தீர்மானித்துள்ளதாக அதன் வழி நடத்தற் குழுவின் தலைவர் நித்தியானந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மேலதிகமாக தன்னார்வ தொண்டர்கள் பெரும் எண்ணிக்கையில் தேவைப்படுகின்றனர்.

இதனை விடவும் வன்னி மாவட்டங்களுக்கும் இந்த அமைப்பின் சேவை விரிவாக்கப்பட்டவுள்ளதால் அங்கும் தொண்டர்கள் தேவைப்படுவர்.

புதிய தொண்டர்களுக்கான பயிற்சி நெறியொன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு பயிற்சி நெறியில் சேர்ந்து கொள்வோரிடமிருந்து ஒரு வருடத்துக்குக் குறையாத தொடர்ச்சியான பங்களிப்பு எதிர்பார்க்கப் படும். தொண்டர்கள் தேர்வுக்கான நேர்முகமும் விரைவில் நடைபெறவுள்ளது.

பாதிக்கப்பட்டோருக்கு உணர்வு ரீதியான ஆதரவை வழங்குவதே தன்னார்வத் தொண்டர்களின் பணியாகும். வாரத்தில் ஒரு நாள் நான்கு மணி நேரம் சம்பளம் எதுவுமின்றி இவர்கள் பணியாற்ற வேண்டும். முன்வரும் தன்னார்வத் தொண்டர்களை 021 2228117 அல்லது 0773355173 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளலாம்

இப்பணி செய்வதற்கு குறிப்பிட்ட எந்தக் கல்வித் தகைமையும் அவசியமில்லை. ஓய்வு பெற்றோரும் இணைந்து தொண்டாற்றலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# அவுஸ்., நியூசிலாந்து பிரதிநிதிகள் மௌன பிரார்த்தனையில் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மௌன பிரார்த்தனையில் யாழ். மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவுஸ்திரேலிய, நியூசிலாந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வலி. மேற்கு பிரதேச சபையின் தலைவர் திருமதி.நா.ஐங்கரனின் தலைமையில் ஆறு அம்சக் கோரிககைகளை முன்வைத்து குறித்த மௌன பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மீளக் குடியமர்ந்தவர்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்றுதல், எமது பண்பாட்டு அம்சமான ஆலயங்களை அழிப்பதை நிறுத்துதல், பரவலாக இடம்பெற்று வரும் பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல், காணாமற் போனோர் தொடர்பில் விரைவாக திருப்தி அளிக்கக் கூடிய தீர்வை அளித்தல், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாது கைது செய்யப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளை விடுவிக்க விரைவாக நடவடிக்கை எடுத்தல் என்ற 6 அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றும் இதன்போது ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த மௌனப் பிரார்த்தனையில் வெளிநாட்டு பிரதிநிதிகள் உட்பட குருமார்கள், வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர்களான சித்தார்த்தன், கஜதீபன், பிரதேச சபை உறுப்பினர்கள், தவிசாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

மேலும் யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலி.வடக்கின் சில முக்கிய இடங்களைப் பார்வையிட்டதோடு மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலையத்தையும் பார்வையிட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மழலை கலையமுதம் நிகழ்வு

கோப்பாய் எக்ஸ்பிரஸ் நிறுவன மழலைப் பூங்கா முன்பள்ளியின் மழலைக் கலையமுதம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிறுவனத்தின் 40 ஆம் ஆண்டு நிறைவு அரங்கத்தில் நிறுவன இயக்குநர் த.வரதராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்வி பணிப்பாளர் க.விமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

## தேசிய மின் இணைப்புடன் நுரைச்சோலை மின்சாரம்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையம் மீண்டும் இயங்கவுள்ளது. இதன் மூலம் 300 மெகாவோட்ஸ் மின்சாரம் தேசிய மின் இணைப்புடன் இணைக்கப்படுகிறது.

அத்துடன் டிசெம்பர் மாதம் முதல் இரண்டாம் கட்டமாக 300 மெகாவோட்ஸ் மின்சாரம் தேசிய மின் இணைப்புடன் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் இரண்டாம் கட்ட பணிகள் 97 வீதம் முடிவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் அது இயங்க ஆரம்பிக்கும்.


இதேவேளை, மின் நிலையத்தின் மூன்றாம் கட்ட வேலைகள் 80 வீதம் பூர்த்தியடைந்துள்ளன.

இவ் வேலைகள் பூர்த்தியடைந்ததன் பின்னர் 2014 ஆம் ஆண்டு மே மாதம் முதல் மூன்றாம் கட்ட மின் உற்பத்தி தேசிய மின் இணைப்புடன் சேர்த்துக்கொள்ளப்படும்.

நுரைச்சோலை அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டதனூடாக எரிபொருளுக்காக செலவிட்ட 300 மில்லியன் ரூபாவை மீதப்படுத்த முடிந்தது என மின்சார சபையின் தலைவர் டபிள்யூ.பி.கணேகல தெரிவித்தார். (அ-2)





## தெனாலி விற்ற குதிரை



ஒருசமயம் தெனாலிராமனுக்கு உடல்நலம் மோசமாகிவிட்டது. வைத்தியரும் வந்து பார்த்து வைத்திய செலவு நிறைய ஆகும் என்று சொல்லிவிட்டுப்போய்விட்டார் வைத்தியம். வைத்திய செலவுக்கு தெனாலி ராமனிடம் பணம் இல்லை.

ஆகையால் அவ்வூரில் வட்டி கொடுக்கும் செல்வந்தரை அணுகினான். அதற்கு அவரும் பணத்தை எப்போது திருப்பிக் கொடுப்பாய் என்று கேட்டார்.

தெனாலிராமனும் உயர் ஜாதி அரேபியக்குதிரை வைத்திருந்தான். நல்லவிலைபோகும். அதனால் உடல் நலம் தேறியதும் குதிரையை விற்றுப் பணம் தருவதாகச்சொன்னான். அவன் சொன்னதின் பேரில் நம்பிக்கையோடு பணம் கொடுத்தான் அந்த செல்வந்தன்.




பணத்தைப்பெற்றுக் கொண்ட தெனாலிராமன் வைத்தியரிடம் சென்று சிகிச்சையை ஆரம்பித்தான். விரைவில் குணமும் அடைந்தான்.

பல மாதங்களாயின. தெனாலிராமனிடமிருந்து பணம் வருவதாகத் தெரியவில்லை. ஆகையால் அந்தச் செல்வந்தன், தெனாலிராமனை சந்திக்கப் புறப்பட்டான்.

தெனாலிராமனைப் பார்த்து என்னப்பா, உடல் குணமானதும் குதிரையை விற்றுப் பணம் தருவதாக சொன்னாயே, இன்னும் தரவில்லையே உடனே கொடு என்றான் தெனாலிராமனும் நன்கு யோசித்தான். அநியாய வட்டி வாங்கும் இவனுக்குப் பாடம் கற்பிக்கவிரும்பினான்.



சரி குதிரையை விற்றுப் பணம் தருகிறேன். என்னுடன் நீயும் வா என்று அவனையும் அழைத்துக் கொண்டு பக்கத்து ஊரில் நடக்கும் சந்தைக்குப் புறப்பட்டான் தெனாலி. போகும்போது குதிரையையும் கூடவே ஒரு பூனைக் குட்டியையும் அழைத்துச்சென்றான்.




சந்தையில் தெனாலிராமனின் பளபளப்பான குதிரையைப் பாரக்க பெரிய கூட்டமே கூடிவிட்டது. அப்போது ஒரு பணக்காரன் தெனாலிராமனைப் பார்த்து உன் குதிரை என்ன விலை என்று கேட்டான்.

அதற்கு தெனாலி ராமனோ, குதிரையில் விலை 1 பவுன்தான். இந்த பூனைக்குட்டியின்விலையோ 500 பவுன். ஆனால் இந்தப் பூனைக்குட்டியையும் சேர்த்து வாங்கினால்தான் இக்குதிரையைக் கொடுப்பேன் என்றான்.

தெனாலிராமனின் பேச்சு அவனுக்கு விநோதமாக இருந்தாலும் குதிரையை வாங்க வேண்டும் என்ற ஆவலில் 501 பவுன் கொடுத்து குதிரையையும் பூனைக் குட்டியையும் வாங்கிச் சென்றான்.

பின் தான் வட்டிக்குக் கடன் கொடுத்த அந்த செல்வந்தனிடம் ஒரு பவுனை மட்டும் கொடுத்தான். ஆனால் ஒரு பவுனை வாங்க அவன் மறுத்துவிட்டான். குதிரை அதிக விலைக்குப் போகுமென்று நினைத்துத் தானே உனக்குப் பணம் கொடுத்தேன். நீ இப்படி ஏமாற்றுகிறாயே என்றான்.

அதற்கு தெனாலிராமன் ஐயா செல்வந்தரே! குதிரையை விற்றுத் தான் உமக்குப் பணம் தருகிறேன் என்று சொன்னேன். உண்மைதான் அதன்படியே குதிரையை 1 பவுனுக்கு விற்று அந்த 1 பவுனையும் உமக்கே கொடுத்துவிட்டேனே. நீ வாங்க மாட்டேன் என்கிறாயே! இது என்ன நியாயம் என்றான்.



அந்த செல்வந்தரோ 500 பவுன் வேண்டுமென்றான். இறுதியில் இவர்கள் வழக்கு, மன்னர் கிருஷ்ண தேவராயரிடம் சென்றது.

மன்னர் இவ்வழக்கை விசாரித்தார். பின் தெனாலிராமன் செய்தது சரியே என தீர்ப்புக் கூறினார்.

⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙




- 1444- ஹங்கேரி, போலந்து ஆகியவற்றின் அரசன் மூன்றாம் விளாடிஸ்லாஸ் பல்கேரியாவின் வர்னா என்ற இடத்தில் ஒட்டோமான் பேரரசுடன் இடம்பெற்ற சமரில் தோற்கடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டான்.
- 1674-ஆங்கிலேய- டச்சு போர்: வெஸ்ட்மின்ஸ்டர் உடன்பாட்டின்படி புதிய நெதர்லாந்தை, இங்கிலாந்திடம் ஒப்படைத்தது நெதர்லாந்து.
- 1871-காணாமல் போனதாகக் கருதப்பட்ட ஸ்கொட்லாந்தின் நாடுகாண் பயணியும் மிஷனரியுமான டேவிட் லிவிங்ஸ்டனைத் தான்சானியாவில் தாம் கண்டதாக நாடுகாண் பயணியும் ஊடகவியலாளருமான ஹென்றி மோர்ட்டன் ஸ்டான்லி அறிவித்தார்.
- 1918-யாழ்ப்பாணம், சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய நகரங்களில் இடம்பெற்ற உள்ளூர்க் கலவரங்களில் பல கடைகள் சூறையாடப்பட்டன.
- 1928-ஹிரொஹீட்டோ ஜப்பானின் 124 ஆவது மன்னரானார்.
- 1970-சோவியத்தின் லூனா 17 விண்கப்பல் சந்திரனுக்கு லூனரகோட் எனப்படும் தானியங்கி ஊர்தியைக் கொண்டு சென்றது.
- 1971-கம்போடியாவில் கெமர் ரூச் படைகள் புனோம் பென் நகரையும் விமான நிலையத்தையும் தாக்கி 44 பேரைக் கொன்று பல விமானங்களை அழித்தனர்.
- 1995- நைஜீரியாவில் சுற்றுச்சூழல் ஆதரவாளர் கென் சரோ-வீவா என்பவரும் அவரது 8 சகாக்களும் தூக்கிலிடப்பட்டனர்.
- 1999-பாகிஸ்தானில் தேசத் துரோகம் மற்றும் சதி செயல்களில் ஈடுபட்டதாக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.
- 2006-தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொழும்பில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

**பிறப்புக்கள்**

- 1483-மார்ட்டின் லூதர், புரட்டஸ்தாந்த மதகுரு (இ.1546)
- 1675-குரு கோவிந்த் சிங் சீக்கியர்களின் 10ஆவது குரு.
- 1919- மிக்கையில் கலாஷ்னிகோவ், ரஷ்யாவின் ஏகே 47 இயந்திரத் துப்பாக்கியை வடிவமைத்தவர்.
- 1934-அ.துரைராசா, பேராசிரியர், யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் இ.1994)

**இறப்புக்கள்**

- 1982-லியோனிட் பிரெஷ்னெவ், சோவியத் யூனியன் தலைவர் (பி.1906)
- 1977- தமிழ்வாணன் தமிழக எழுத்தாளர். இதழாசிரியர். (இ.1926)

### தமிழ்வாணன்

தமிழ்வாணன், தமிழ்நாட்டில் தேவகோட்டையில் பிறந்தார். இவரது இயற்பெயர் லெட்சுமணன். தமிழ்வாணன் என்ற பெயரைச் சூட்டியவர், தமிழ்த்தென்றல் வி.க.ஆவார்.

கிராம ஊழியன் பத்திரிகையில் தமிழ்வாணன் உதவி ஆசிரியராக இருந்தபோது பல எழுத்தாளர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. சில மாதங்களில் கிராம ஊழியன் ஆசிரியராக பதவி உயர்வு பெற்றார். அதன் பின்னர் பல இதழ்களை இவர் வெளியிட்டார்.

ஜவகர்லால் நேருவின் வாழ்க்கை வரலாறு உட்பட பல நூல்களையும். சிறுவர்களுக்கான பல இதழ்களையும் இவர் வெளியிட்டுள்ளார்.

# நீங்கள் பரீட்சையில் தோல்விகண்டவர்களா?



ஆன்மீகம் 33

கேள்வி:- நான் பள்ளி இறுதியாண்டுப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் தேர்ச்சிபெறவில்லை. வாழ்க்கையே வெறுத்த நிலையில் இருக்கிறேன். மிகவும் விரக்தியான மன நிலையில் இருக்கிறேன். அதிலிருந்து என்னால் வெளியே வர முடியவில்லை... அதற்கு என்ன செய்வது?

சத்குரு:- ...மாணவர்கள் தேர்வுகளில் தோல்வியடையும்போது, அவர்களின் பலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள், இல்லையா?

ஏனென்றால் தன் வாழ்க்கையே அந்தத் தேர்ச்சியில்தான் அடங்கியிருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

நீங்கள் தேர்வு பெறுவதற்காக வழிபடும் ராமர், கிருஷ்ணர், புத்தர், ஏசு ஆகியோர் எந்தத் தேர்விலும் தேர்ச்சி பெற்றதில்லை. தெரியுமா உங்களுக்கு? ஒரு பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூட அவர்கள் ஆர்வம் காட்டியதில்லை.

ஆகவே, பரீட்சையில் தேர்ச்சி பெறாமல் போவது ஒரு பெரிய விடயமே இல்லை. சமூக சூழ் நிலைக்காக, தேவைகளுக்காக நீங்கள் ஒரு தேர்வில் தேர்ச்சிபெற விரும்புகிறீர்கள் என்பது சரிதான்.

ஆனால், அதற்காக தேர்ச்சி பெறாமல் போனால் விரக்தியடைவது என்பது முழுக்க முழுக்க மனம் சம்பந்தப்பட்ட விடயம். உயிர் சம்பந்தப்பட்டதல்ல.

நீங்கள் விரக்தியில் இருக்கும்போது இது என்ன வாழ்க்கை? செத்துவிடு என்று உங்கள் மனம்தான் சொல்லும். உயிர் சொல்லாது.

உங்கள் வாயை மூடிக்கொண்டு மூக்கை இரண்டு நிமிடங்களுக்குப் பிடித்து வைத்திருந்து பாருங்கள்! உங்களுக்குள் இருக்கும் உயிர், ஐயோ என்னை வாழவிடு என்றுதான் சொல்லும்.

எனவே, உங்கள் உயிருக்கு எதிராகவே நீங்கள் ஏதாவது செய்கிறீர்கள் என்றால் அதுதான் அறியாமை, அதுதான் முட்டாள்தனம்.




ஒரு முட்டாள்தான் தன்னுடைய உயிருக்கு எதிராகச் செயற்படுவான்.

ஆனால், தற்போதைக்கு நீங்கள் உங்கள் உயிருக்கு எதிராகவே செயற்படும் ஒரு மனநிலைக்கு ஆளாகிவிட்டீர்கள். உங்களுக்கு வரும் விரக்தி, மனதளர்வு, மன அழுத்தம் இவை எல்லாம் நீங்கள் உங்கள் உயிருக்கு எதிராகவே வேலை செய்து கொண்டிருப்பதைத்தான் காட்டுகின்றன. நீங்கள் முட்டாளாக இருந்தால் மட்டுமே இப்படிச் செய்வீர்கள். நீங்கள் முட்டாளாக இருப்பதால்தான் உங்களுக்கு விரக்தி வருகிறது. புத்திசாலியாக இருந்தால் உங்களுக்கு எப்படி விரக்தி வரும்? உங்கள் புத்திசாலித்தனத்தை செயற்படாமல் தடுத்துவிட்டீர்கள். அதனால்தான் உங்களுக்குள் விரக்தி நுழைந்துவிட்டது. இல்லாவிட்டால் விரக்தி, மன அழுத்தம் போன்ற பேச்சுக்கே இடமிருக்காது. (தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# பின்லேடனின் மறைவிடம் பற்றி தகவல் கொடுத்தவர் யார்?



பின்லேடன் வீடு

**பின்லேடனின் இருப்பிடம் பற்றி தகவல் கொடுத்த இந்த டாம் லீ என்பவர் யார்?**

இவர் ஒரு அமெரிக்க பிரஜை. எகிப்தில் பிறந்து, அமெரிக்காவில் குடியேறியவர். சர்வதேச வைர வியாபாரி. வைர வியாபாரத்துக்காக பல நாடுகளுக்கும் பயணம் செய்பவர். அந்த வகையில் பல நாடுகளில் பலருடன் தொடர்பு உடையவர்.

பாகிஸ்தானில் வைர வர்த்தகம் செய்யும் குடும்பம் ஒன்றுடன் டாம் லீ பல ஆண்டுகளாக தொடர்பில் இருந்திருக்கிறார். இந்த பாகிஸ்தானி வைர வர்த்தக குடும்பம், அல்-காய்தாவுக்கு எதிரான கருத்து கொண்டவர். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், பாகிஸ்தான் உளவுத்துறையில் அதிகாரியாக உள்ளார்.

பாக்.உளவுத்துறை அதிகாரிதான் பின்லேடன் பற்றிய தகவலைக் கூறியிருக்கிறார். பாகிஸ்தான் உளவுத்துறை அதிகாரி, பின்லேடன் தற்போது பாகிஸ்தானில் அபொத்தாபாத்தில் உள்ள ஒரு விட்டில் குடியிருக்கிறார். பாகிஸ்தான் உளவுத்துறைதான் அவர் அங்கே ரகசியமாக மறைந்து வாழ உதவுகிறது. பெஷாவார் பகுதியில் இருந்த பின்லேடனை அழைத்துக்கொண்டு அபொத்தாபாத்தில் உள்ள வீடு ஒன்றில் விடுவதற்கான என்னை அனுப்பி வைத்தார்கள்.

நான்தான் பின்லேடனுக்கு பாதுகாப்பு கொடுத்து, யாரும் அறியாமல் அவரை அழைத்துவந்து, அபொத்தாபாத்தில் விட்டேன். அந்த வீடு எனக்கு நன்றாக தெரியும் என்று டாம் லீயிடம் கூறியுள்ளார்.

அமெரிக்கா திரும்பிய டாம் லீ, இந்த இரகசியத்தை அமெரிக்க அதிகாரிகள் யாரிடமாவது தெரிவிக்க விரும்பினார். வைர வியாபாரம் தொடர்பான விசாரணை ஒன்றில் தம்முடன் பழக்கமான கஸ்டம்ஸ் அதிகாரி ஒருவரது ஞாபகம் வந்தது. கஸ்டம் அதிகாரியை சந்தித்து அந்த விடயத்தைச் சொன்னார்.

கஸ்டம்ஸ் அதிகாரி, இந்த விடயத்தை உளவுத்துறை எஃப்.பி.ஐயிடம் தெரிவிக்க, அவர்கள் தமது ஏஜென்ட் ஒருவரை அனுப்பினார்கள். டாம் லீயை சந்தித்த எஃப்.பி.ஐ. ஏஜென்ட், பின்லேடன் பற்றிய தகவலை பெற்றுச்சென்றிருக்கிறார்.

**இது 2003 ஆம் ஆண்டு நடந்தது.**

பின்லேடனின் இருப்பிடம் பற்றிய துல்லியமான தகவல் 2003 ஆம் ஆண்டு கிடைத்ததும் 2011 ஆம் ஆண்டுதான் பாகிஸ்தானில் பின்லேடன் இருக்கும் இடத்தை ரெயிடு செய்து, அவரைக் கொன்றது அமெரிக்க



அதிரடிப்படை சீல் டீம். 2003 ஆம் ஆண்டு டாம் லீ குறிப்பிட்ட அதே அபொத்தாபாத் நகரில்தான், பின்லேடன் மறைந்திருந்த வீடும் இருந்தது.

டாம் லீ, த கிராண்ட் ராப்பிட்ஸ் பிரஸ்ஸுக்கு கருத்து தெரிவித்தபோது, இந்த விவகாரம் தான் என்னை வியப்பில் ஆழ்த்துகிறது. பின்லேடனின் இருப்பிடம் பற்றி 2003 ஆம் ஆண்டே துல்லியமான தகவல்கள் இருந்தும் அதன்பின் அவரை 8 ஆண்டுகள் உயிருடன் விட்டுவைத்திருந்திருக்கிறார்கள். இப்போது தாமே பின்லேடனின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்ததாக கிளெயிம் பண்ணுகிறார்கள் என்றார்.

தமது கட்சிக்காரர் டாம் லீக்காக இந்த கேஸை எடுத்துள்ள வக்கீல் நிறுவனமும் சில ஆதாரங்களை திரட்டியுள்ளது. டாம் லீயை விசாரித்த எஃப்.பி.ஐ ஏஜென்ட் கேட்ட கேள்விகள், அவற்றுக்கு டாம் லீ கொடுத்த பதில்கள் அடங்கிய ரெக்கோட் ஒன்றை வைத்திருக்கிறார்கள். அத்துடன் டாம் லீ இந்த விடயத்தை முதலில் கூறிய கஸ்டம்ஸ் அதிகாரியிடம் இருந்து லீ கூறுவது நிஜம்தான் என கடிதம் ஒன்றையும் பெற்றுள்ளார்கள்.

கடந்த 2011 ஆம் ஆண்டு மே மாதம் பாகிஸ்தானில் உள்ள மறைவிட வீட்டில் வைத்து பின்லேடன் அமெரிக்க சீல் அதிரடிப்படையினரால் கொல்லப்பட்டார். அவரது உடலையும் அமெரிக்கர்களே எடுத்துச்சென்றுவிட்டனர். இந்த அதிரடித்தாக்குதல் நடப்பதற்கு முன், பின்லேடனின் இருப்பிடத்தை அறிவதற்காக சில வருடங்கள் தகவல் திரட்டியதாக கூறியிருக்கிறது சி.ஐ.ஏ.

அவர்கள்கூறுவதன்படி,போன், ஈமெயில் போன்ற தொடர்பு சாதனங்கள் எதையும் பயன் படுத்தாமல் நம்பிக்கைக்குரிய மனிதர்களை, செய்தி தொடர்பாளராக பயன்படுத்தி வந்த பின்லேடனை, அவரது தகவல் தொடர்பாளர் ஒருவரை வைத்தே பிடித்ததாக கூறப்பட்டது.

இந்த நபரை ட்ராக்-டவுன் பண்ணிய சி.ஐ.ஏ அவரது நடமாட்டங்களை பின்தொடர்ந்தது. அந்த வகையில் பாகிஸ்தானிலுள்ள ஒரு வீட்டுக்கு அவர் சென்றுவருவது தெரிந்தது. குறிப்பிட்ட வீடு பல மாதங்களாக இவர்களால் கண்காணிக்கப்பட்டது. அதன்பின் அந்த வீட்டில் பின்லேடன் மறைந்து இருக்கலாம் என்ற ஊக அடிப்படையிலேயே, அதிரடி தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதல் நடத்தப்பட்டு பின்லேடன் சுடப்பட்டு அவரது உடல் அடையாளம் காணப்படும் நிமிடம் வரை, அங்கு பின்லேடன் நிஜமாகவே இருந்தாரா என்பது சி.ஐ.ஏவுக்கே உறுதியாக தெரியாது எனவும் கூறப்பட்டது.

இதற்கு மற்றொரு விவகாரமும் உள்ளது.

அமெரிக்க மிக்சிகனை சேர்ந்த ஒருவர், பில்லேடனின் இருப்பிடம் பற்றிய உளவுத் தகவலை முதலில் கொடுத்தது நான்தான். பின்லேடனின் தலைக்கு கொடுப்பதாக சொல்லப்பட்ட சன்மான தொகை 25 மில்லியன் டாலரை எனக்கு தரவேண்டும் என அமெரிக்க உளவுத்துறை எஃப்.பி.ஐக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

இவரது இந்த உரிமை கோரலில் ஏதோ விடயம் இருக்க வேண்டும் போலிருக்கிறது. ஏனென்றால் இவரது சார்பில் உளவுத்துறை எஃப்.பி.ஐக்கு நோட்டீஸ் அனுப்பியிருப்பது, சிக்காக்கோவில் மிக பிரபல வக்கீல் நிறுவனம்.

இந்த நிறுவனம் எக்கச்சக்கமாக பணம் வாங்கும் நிறுவனம். பெரும்பாலும் இந்த நிறுவனத்தில் டீல் எப்படியிருக்கும் என்றால், தமது வக்கீல் கட்டணத்தை, கட்சிக்காரரர் பெறப்போகும் தொகையின் குறிப்பிட்ட சதவீதத்தில் ஒப்பந்தம் செய்துகொள்வார்கள்.

இந்த வக்கீல் நிறுவனம் எஃப்.பி.ஐ. டைரக்டர் ஜேம்ஸ் கேமிக்கு அனுப்பியுள்ள நோட்டீஸில் பின்லேடன் பற்றிய உளவுத் தகவலுக்கு உரிமை கோரும் நபர் வேறுயாரும் அல்ல. 63 வயதான டாம் லீ என்பவர்தான். டாம்லீ 2003 ஆம் ஆண்டே பின்லேடனின் இருப்பிடம் பற்றிய துல்லியமான தகவலைக்கொடுத்திருந்தார் என்கிறது வக்கீல் நோட்டீஸ்.

இந்த நிலையில் டாம் லீயும் அவரது வக்கீல் டீமும் உளவுத்துறை எஃப்.பி.ஐக்கு குடைச்சல் கொடுக்கப் போகிறார்கள். விவாகரம், 25 மில்லியன் டொலர் சம்பந்தப்பட்டது என்பதால், இதை இலகுவில் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். இது தொடர்பில் இரு சாத்தியங்கள் உள்ளன. ஒன்று, மேலும் பல விடயங்கள் வெளியாகும். அல்லது, கோர்ட்டுக்கு வெளியே, 25 மில்லியனைவிட சற்று குறைவான தொகைக்கு செட்டில்மென்ட் செய்து கொள்வார்கள். -இணையம்-

# பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்றால் காங்கிரஸிற்கு எதிராக போராடுவோம்!

## கொதித்தெழுந்தனர் மாணவர்கள்

பொதுநலவாய மாநாட்டுக்கு கொழும்பு செல்ல வேண்டாம் எனக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இந்திய மாணவர்கள் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களை தஞ்சாவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமிழர்களின் உணர்வுமிக்க கோரிக்கையை இந்தியா ஏற்க வேண்டும். இந்தியா இந்த கோரிக்கையை ஏற்க மறுத்து கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளுமாயின் எதிர் வரும் தேர்தல்களில் மாணவர் அமைப்புகள் களமிறங்கி காங்கிரஸ் கட்சிக்கு எதிராக போராடும்" எனத் தெரிவித்து வீதி மறியலில் ஈடுபட்ட இந்திய மாணவர் அமைப்புக் களைச் சேர்ந்தவர்கள் தஞ்சாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.தஞ்சாவூரில் உலகத் தமிழர் பேரமைப்பு சார்பில் நிர்மாணிக்கப் பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் நேற்றுமுன்தினம் திறக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டது.

குறித்த விழாவில் கலந்து கொளவ தற்காக மாணவர் அமைப்பினர் சென்னை, விருதுநகர், நீலகிரி, இடிந்தகரை ஆகிய இடங்களில் இருந்து கடந்த 4ஆம் திகதி சுடர் ஏந்திய பரப்புரைப் பயணத்தை மேற்கொண்டனர்.

பயணம் புறப்பட்ட சிறிது நேரத்தில் பொலிஸாரால் இந்த மாணவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்த சுடர்கள் அணைக்கப் பட்டன. ஆனாலும் மாணவர்கள் இடைவிடாது தொடர்ந்து பரப்புரைப் பயணத்தை மட்டும் மேற்கொண்டு தஞ்சை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர்.

நீலகிரியில் இருந்து புறப்பட்ட 35இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கூடலூர், கோவை, ஈரோடு, நாமக்கல் ஆகிய இடங்களில் "பொது நலவாய மாநாட்டை இந்தியா நடத்த அனுமதிக்க கூடாது, பெரிய நாடான இந்தியா கலந்து கொள்ள வில்லை என்றால் ஏனைய நாடுகள் தானாகவே பின்வாங்கிச் சென்று விடும்.

தமிழர்களின் உணர்வுமிக்க கோரிக்கையை இந்தியா ஏற்க வேண்டும். இந்தியா இந்த கோரிக்கையை ஏற்க மறுத்து மாநாட்டில் கலந்து கொள்ளு மாயின் எதிர்வரும் தேர்தல்களில் மாணவர் அமைப்புகள் களமிறங்கி காங்கிரஸ் கட்சிக்கு எதிராக போராடும் போன்ற கோரிக்கைகளை பொதுமக்களிடம் பரப்புரை செய்தனர்.

இவ்வாறு பரப்புரையில் ஈடுபட்ட மாணவர்கள் பொலிஸாரால் தடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

தமிழக அரசின் மாணவர் கைது உள்ளிட்ட பல்வேறு அடக்கு முறைக்கு மத்தியில் தமிழக மாணவர்கள் தங்கள் முள்ளி வாய்க்கால் பரப்புரை சுடரினை முள்ளி வாய்க்கால் முற்றத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு சுடரினை பழ.நெடுமாறன், உணர்ச்சிக் கவிஞர்காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா, பொ.மணியரசன் உள்ளிட்ட தமிழ் அமைப்பு தலைவர்கள் சுடரினை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்நிகழ்வில் மதிமுக பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி, மற்றும் பல தலைவர்களும் இலங்கையிலிருந்து சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, ரவிகரன் தமிழ்த் தேசிய முன்னணி செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோரும் முதல் நாள் நிகழ்வில் பங்கேற்றனர். (அ-2)

## சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் குற்றச்சாட்டுக்கு அரசாங்கம் மறுப்பு

சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமை நிறுவனத்தின் பிரதிநிதிகள் இலங்கை வருவதற்கான விசா அனுமதி மறுக்கப்பட்டதாக அந்த அமைப்பு சுமத்தியுள்ள குற்றச்சாட்டை இலங்கை வெளி விவகார அமைச்சு மறுத்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு உண்மைக்கு மாறானது எனவும் இலங்கை தொடர்பில் தவறான தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் இணைந்து எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நடத்த ஏற்பாடு செய்துளள கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்திடம் இருந்து விசா விண்ணப்பங்கள் லண்டனிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு கிடைத்தன.

இரண்டு வாரங்கள் கழிந்து இது குறித்து லண்டனில் உள்ள தூதரகம் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்திருந்தது. இதனால் விசா அனுமதிகளை வழங்கும் நடைமுறைகளை எளிதாக்க முடியாது போனது.

கருத்தரங்கொன்றில் வெளிநாட்டு பிரதி நிதிகள் கலந்து கொள்வது தொடர்பில் வெளி விவகார அமைச்சின் நடைமுறைகளுக்கு மாறாக அதன் ஏற்பாட்டாளர்களான இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்நோக்கத்துடன் செயற்பட்டுள்ளது.

கருத்தரங்கொன்றில் வெளிநாட்டு பிரதி நிதிகள் கலந்து கொள்வதாயின் அது குறித்து வெளிவிவகார அமைச்சுக்கு தெரியப்படுத்தி விசா அனுமதிகளை பெறுவதற்கான உதவிகளையும் ஆலோசனைகளையும் பெறவேண்டும்.

எனினும் உள்நோக்கத்துடன் குறுகிய காலத்தில் அதற்கான விண்ணப்பங்கள் செய்யப்பட்டன. இதனால் விசா சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுக்கு வழங்க முடியாது போயிறறு.

அத்துடன் குறித்த கருத்தரங்கு கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ள நேரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் வெளிநாட்டு பிரதி நிதிகள் இலங்கை வுரவுள்ளதால் பாதுகாப்பு ஏற்பாடுகள், வீதிகள் மூடுதல் என சகல வளங்களும் அதற்காக பயன்படுத்தப்படுவதால், தங்குமிட வசதிகளை பெறுவது உள்ளிட்ட பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன என அமைச்சு கூறியுள்ளது.(அ-2)




நெல்லியடி கொமர்சல் வங்கியின் சாதனை மாணவர் கௌரவிப்பு நிகழ்வு வங்கியில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவி யொருவருக்கு கொமர்சல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் பீ.ரஜீவன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:-தும்பளைச் செய்தியாளர்)

## கொழும்பு ம்ாநாட்டில் கனடாவின் கனிஷ்ட நிலை குழு பங்கேற்கும்

(ஒட்டாவா)

கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டுக்கு கனடாவின் கனிஷ்ட நிலைக்குழு ஒன்றே செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழு கொழும்பு மாநாட்டில் பங்கே ற்ற பின்னர் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்யவுள்ளது.

இக்குழுவுக்கு அந்த நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சின் மனித உரிமைகள் துறை நாடாளுமன்ற செயலாளர் தீபக் ஒபராய் தலைமை தாங்கவுள்ளார்.

ஒபராய் தான்சானியாவில் பிறந்த இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினராவார்.

1997 ஆம் ஆண்டில் இருந்து அவர் கனே டிய நாடாளுமன்றத்தில் கல்கரி கிழக்கு தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி வருகிறார். (அ-2)

## தேசிய வாசிப்பு மாத நிகழ்வும் பரிசளிப்பும்

(கிளிநொச்சி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் கரங்கள் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கைதடி பொது நூலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபைத்தலைவர் சிற்றம்பலம் துரைராசா தலைமையில் நடை பெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர்களான ச.தங்க ராசா, இ.ஜானகி, ஜே.சிற்சபேசன், சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் தி.தர்சினி, சனசமுக அபிவிருத்தி அதிகாரி திருமதி ஜே. செல்வராணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கைதடி பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள் அனைவரும் கெளரவ விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

முன்பள்ளி மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன் நூலகத்துக்கு இலவசமாக 5 மாணவர்களை அங்கத்தவராக்கும் நிகழ்வும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (அ-254)

## வெந்த புண்ணில் வேலை பாய்ச்சாதீர்! மத்திய அரசிடம் பா.ஜ.க.கோரிக்கை

தமிழக மக்களின் உணர்வுகளை மதிக்காது, தமிழக சட்ட சபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் மீறி, பொதுநலவாய மாநாட்டில், பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்றால், அது, வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதற்கு சமமாகி விடும் என்று, தமிழக, பா.ஜ.க. கூறியுள்ளது.

இலங்கையில், இம்மாதம் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில், இந்தியா பங்கேற்க கூடாது என, வலியுறுத்தி, தமிழகத்தில் பலத்த எதிர்ப்பு காணப்படுகிறது. இந்நிலையில், தமிழக, பா.ஜ.க. குழு, டில்லி விரைந்துள்ளது.

தமிழக பா.ஜ.க. தலைவர், பொன. ராதாகிருஷ்ணன், முன்னாள் தலைவர், லட்சுமணன் மற்றும் மூத்த தலைவர், இல.கணேசன் ஆகியோர் அடங்கிய இந்த குழு, கடந்த 6 ஆம் திகதி இரவு, பா.ஜ.க., தலைவர் ராஜ்நாத் சிங்கையும், லோக் சபா எதிர்க்கட்சித் தலைவர், சுஷ்மா சுவராஜையும், சந்தித்துப் பேசியுள்ளனர்.

இது தொடர்பாக இந்தக் குழுவினர், நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது,

இலங்கையில், 2009இல் நடைபெற்ற இறுதிப் போரின் போது, தமிழர்கள் கொல்லப்பட்டதில் ராஜபக்ஷவுக்கு எந்த அளவுக்கு பங்கு இருந்ததோ, அதற்கு சமமான அளவில்; மன்மோகன் சிங் அரசுக்கும் பங்கு இருந்தது. அந்த போரில், மன்மோகன் சிங் அரசும் கூட்டாளியாகத்தான் இருந்தது. இந்தியா சார்பில், பிரதமர் மன்மோகன்சிங், இலங்கைக்கு சென்று, பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்றால், அது தமிழக உணர்வுகளை, மதிக்காத நடவடிக்கையாக அமையும். மேலும், அது, வெந்த புண்ணில் வேலைப்பாயச்சுவதற்கு, சமமாகி விடும்.

இந்தக் கருத்துக்களை, ராஜ்நாத் சிங் மற்றும் சுஷ்மா சுவராஜ் ஆகிய இருவரிடமும், எடுத்துக கூறியுள்ளோம். எக்காரணம் கொண்டும், இலங்கைக்கு, பிரதமர் மன் மோகன் சிங் செல்வதற்கு, பா.ஜ.க. சார்பில், ஒப்புதலோ, அங்கீகாரமோ வழங் கிட கூடாது என்று வலியறுத்தியுமுள்ளோம்.

சில ஊடகங்களில் வந்துள்ள செய்திகளைப போல, பா.ஜ.க.,வின் மத்திய தலைமையானது, பிரதமர், இலங்கை செல்வதற்கு, ஆதரவு ஏதும் வழங்கிடவில்லை. இன்னும், இறுதி முடிவு எடுக்காத நிலையில், அடுத்தடுத்து மேற்கொள்ளப்படும், தீவிர முயற்சிகளின் வாயிலாக, நல்லதொரு முடிவு எடுக்கப்படும் என்ற நம்பிக்கை உள்ளது என பா.ஜ.க. தலைவர்கள் கூறினர். (அ-2)



## நினைவலைகள்

ஒவ்வொரு விடியலிலும்
ஊர் நினைப்பே தகிக்கிறது
ஏர் பூட்டிய நிலமெல்லாம்
போர் வந்து மேலாடி
பாதுகாப்பு வலயமாய்
பாழடைந்து கிடக்கும் வரை
நீங்காத நினைவுகளின்
நீட்சியே எங்கள் நிலம்
இருபது வருடம் முன்னர்
இடம்பெயர்க்கப்பட்ட வாழ்வில்
அறுபட்ட வேர் இருக்க
அகதியாய் அலைகின்றோம்
நெஞ்சம் வெந்து நொந்து
நெடுந்துயரில் நாமிருக்க
கண்முன்னே எங்கள் வாழ்வு
கருக்கப்படுகின்றது
பயிர் செய்த பரப்பெல்லாம்
பார்க்க மனம் துடித்திருக்க
கவரக வளர்ந்தனவே
மண் அகழ்ந்து கல் அகழ்ந்து
கிராமங்கள் ஒவ்வொன்றாய்
மலை அகழ்ந்து தன்னும்போது
இதயத் தசைகளை உலுக்கி
உரசிக் கிழிக்கிறது வலி

ஆ.பூவானந்தன்.வயாவிளான்

## சிறகொடிந்த பறவைகள்

விதிசெய்த சதியால்
விலங்கு மாட்டினோம்!
சிறகொடிந்த பறவைபோல்
சிறைக்குள் வாடுகின்றோம்!
விழிதூங்க மறுக்கின்றது
விடுதலையெண்ணி!
முட்கம்பி வேலிச் சுருளினுள்
முகவரியிழந்து எதிர்காலம் கடக்கின்றது!
கறைபடிந்த எம் வாழ்வுக்கு
கண்ணீர்தான் முடிவன்றோ
கனத்த இதயத்தோடு
கம்பிக் கூட்டினுள் காலம் கழிகின்றது!
சொந்தங்களை தொலைத்து
சோகங்களை சுமக்கின்றோம்!
சோதனைக் காலமிதோ
சோபையிழந்து தவிக்கின்றோம்
கையெடுத்துக் கும்பிட்டும்- கடவுள்
கண்திறவாததேனோ!
சத்தமின்றி நிசப்தமாகும் இரவுகளை
சங்கடத்துடன் தினமும் சந்திக்கின்றோம்!

கொட்டடி கோமகன். யாழ்ப்பாணம்

## உழைப்பவன் வாழ்வு மலராதோ

காடு களைந்தான்
களனி சமைத்தான்
அழுக்கை சுமந்தான்
நம் அழகான வாழ்வுக்காய்
பாடுபடுபவன் வாழ்வு
பட்டினியில் புரளுதையா
அவன் கரம் உயர்ந்ததனால்
அடுக்கு மாளிகைகள்
அழகாய் தெரியுதையா
பாடுபட்டவன் வீட்டில்
வெயில் மழை குடியிருக்குதையா
பணம் படைத்தவர் மாளிகையில்
புரியாணியையா
பாடுபட்டவன் வீட்டில்
கஞ்சிக் கலயமையா
அவன் சிந்திய வியர்வைத்துளிகள்
பாரெங்கும் ஓடி
பசுமை தெரியுதையா
பாடுபட்டவன் இல்லம்
பாலைவனமையா

கலாநாதன்
வவுனியா

## அன்றாடங் காட்சிகள்

நாங்கள்
அன்றாடங் காட்சிகள்;
உழைக்காத நாட்களில் எமது
அழைக்காத விருந்தாளிகள்தான் பட்டினி;
மாடி மனைகளை பலருக்குக் கட்டினோம்
மண்குடிசையே எமது வசிப்பிடம்;
களனிகளில் உழுது விதைத்தோம்
கஞ்சிக்கும் வழியின்றி நிற்கின்றோம்;
ஆடைத்தொழிற்சாலைகளில் உழைத்தோம்
ஆடை நல்லது போட்டதில்லை வாழ்நாளில்;
உழைக்க ஓர் வர்க்கமும்
உறிஞ்ச ஓர் வர்க்கமும்
இருக்கும் வரைக்கும்
நாம் என்றும் இங்கு
அன்றாடங்காட்சிகள்தான்;

புத்தூர் கு.குகன்

## தம்பியுடையான்...



தம்பி எழுந்தான்
இன்னும் எதற்கினி
படிப்பென்று
கூடாத கூட்டம் கூடியே
சந்தியில் நின்று தினம்
சண்டைகள் போடுறான்
மண்டையுடைந்தவன்
மயங்கி விழுகிறான்
விழிக்கிறான்
வைத்திய சாலையில் கிடக்கின்றான்

- மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல் - 177



## அன்னை

தன்னம்பிக்கையுடன்
சின்னவயதினிலே பட்டுடுத்து
மின்னிடும் பொன்னகை பூட்டி
என் பிள்ளை ஞானவாட்டி
தான் என அன்புடன்
அன்னம் ஊட்டும்போதே
வன்முறையில்லாத அ, ஆவுடன்
நன்மை செய்யும் பேனாவின்
உன்னதத்தை புரிய வைத்தவள்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## மண்வாசம்

தமிழ் நங்கையே- உன்
சிந்தைதான் என்னவோ?
உன் சேயின் உயர்வோ?
கலங்கிடாதே
எம் மண் வாசம்
நிச்சயமாய் மனிதராய்
வாழவைக்கும்

ஆர்.விஜி
உடுவில்

## புரியாது

பட்டுச்சேலை அணிந்து
ஒயிலாக அமர்ந்திருக்கும்
சிட்டுக் குருவியே
உன் அன்னையின் சிந்தனை
என்ன தெரியுமா?
வாழ்வில் வரும் வேதனைகள்
சோதனைகளை தாங்கி
எதிர்நீச்சல் போட்டு
வழிநடத்திச் செல்லாயோ
என்பதை உனக்கு
சொன்னாலும் புரியாதடி

லீலா சிவவடிவேல்
இணுவில் மேற்கு

## பெற்றவளின் ஆசை

நன்நாளில் ஏட்டைத் தொடங்கி
பட்டங்கள் பல பெற்று
உன்னை சான்றோனாக்குவது
பெற்றவளின் ஆசை
அவளின் ஆசையை- நீ
நிறைவேற்றுவாயா...?

வி.நிறோ

## தேவை

பாரதி கண்ட புதுமைப்பெண்ணாய்
பழைமையையும் விடாது
பெருமையாய்
தொடரும் நீயும் நின் சேயும்
கல்வியோடு எம் நவீன
உலகிற்கு தேவை

ரூபி, மானிப்பாய்

## முடிவு

'அ' எழுதி ஆரம்பித்த பயணம்
அகிலம் கடந்தும் அடங்காது
பண்பாடு காக்கவென
'பண்' பாடும் இவளுக்கு
அடங்கிடுமோ அகிலம்?
தேடல்கள் முடிவிலே
தெளிவாகும் பதில்கள்
தாயே! அதுவரை காத்திடு

அ.கஜன், மல்லாவி

## ஆயுதம்

அன்னையே!
உன்னிடம் எனக்கு
தர எதுவுமில்லையே
அறிவைத்தவிர

நா.யதுர்சன்
அந்தணத்திடல்

## வாழ்த்துகிறோம்

எங்கள் செல்வமே
நம்பிக்கையுடன்
பல்கலையும் கற்று
நீடூழி காலம்
வாழ்க வாழ்கவென
வாழ்த்துகிறோம்

ஆ.கஜவேந்தன்
மட்டுவில்

## புரியாத அர்த்தங்கள்

அன்னையின் பார்வையில்
ஆயிரம் அர்த்தங்கள்
ஏனோ அது
எனக்குப் புரியவில்லை

ம.குணாளினி,மயிலிட்டி

## அ

'அ' எழுதுவித்த
என். அன்னைக்கு
அகத்தினுள் ஆயிரம்
கனவுகள் வலிகள்
அவற்றை நிரப்பிவிட
முடியவில்லை எனக்கு

பளையூர் அசோக்

## அவதாரம்

தமிழன் தலைவிதியையே
தடம்புரட்டும் கலாசாரம்
தலைவியர்கள் போற்றும்
பண்பாடு மாறுகையில்
தரணியின் அவதார புருஷர்
இவள் அகரத்துடன்
அவதாரமாய் அவனியிலே
தமிழுக்கு...

கி.ராகுலன், பாலிநகர்

## கண்மணியை கரைசேர்க்க

பெரியவளாக்கி அழகுபார்க்க
ஆசைப்படும் தாயே..!
பெண்ணவள் பெரியவளானால்
கண்மணியைக் கரைசேர்க்க...
பொன்னும் மணியும் இறைத்து
சீதன அரக்கன் கைகளில்
சிறைப்பட நேருமென்பதை
ஏன்தான் சிந்திக்க மறந்ததோ
தங்கள் சிந்தை


வ.ச.செல்வராசா
திருநாவலூர்

## மாற்றம்

தாய் பிள்ளைக்கு
'கற்றுக்கொடுத்தாள் அன்று
பிள்ளை தாய்க்கு
கற்றுக்கொடுக்கிறது இன்று
காலத்தின் மாற்றம் என்பது
இதுவா...?

க.ஹிமாலினி, வல்வெட்டித்துறை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -178



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 14.11.2013 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# மன்மோகனின் பிடிவாதமா? மோடியின் கனவா?





இறந்துபோன தலைவர்களைத் தங்கள் சுயநலத்துக்காக பயன்படுத்திக் கொள்வது அரசியல் வாதிகளுக்கு கைவந்தகலை. ஜவஹர்லால் நேருவும் சர்தார் வல்லபபாய் படேலும் இப்போது அரசியல்வாதிகளிடம் சிக்கியுள்ளனர்.

எவ்வளவு அவமானம் ஏற்படினும் பிரதமர் பதவியை கைநழுவ விடமாட்டேன் என்று பிடிவாதமாக உட்கார்ந்து இருக்கும் மன்மோகன்சிங்கும், எதைச் செய்தாவது அந்த நாற்காலியை அடைந்தே தீருவேன் என்று வலம்வரும் நரேந்திரமோடியும் மீண்டும் ஒருமுறை நேருவையும் படேலையும் மரணக் குழிக்குள் இறக்கியிருக்கிறார்கள்.

“முதலாவது பிரதமராக சர்தார் வல்லபபாய் படேல் அமர்ந்திருந்தால் நாட்டின் தலையெழுத்தே வேறுவிதமாக இருந்திருக்கும். நாட்டின் முகமே மாறி இருக்கும். அவர முதலாவது பிரதமராக ஆகவில்லையே என்ற வருத்தமும் வேதனையும் எப்போதும் இருக்கிறது” என்று நரேந்திர மோடி கூறியிருக்கிறார்.

·இதிலிருந்து படேல் மீதான பாசத்தை விட, நேரு மீதான மோடியின் வெறுப்பே அதிகம் தெரி கிறது.

“வகுப்புவாதம் இந்தியாவை உடைத்து விடும்' என்றும் “வகுப்புவாதம் பாஷிசத்தின் இந்திய வடிவம்” என்றும் “மதச்சார்பு இல்லாத அரசு ஒன்றே நாகரிகமான அரசு' என்றும் சொன்ன நேருவை மோடிக்கு எபபடிப் பிடிக்கும்? “எங்காவது ஒரு நபர் மற்றொருவரைக் கொல்வதற்குத் தன் கரத்தை உயர்த்தினால் நான் அவனை எதிர்த்துக் கடைசி மூச்சு உள்ளவரை போராடுவேன்” என்று 1951-ம் ஆண்டு காந்தி ஜெயந்தியில் பேசிய நேருவை இவர்களுக்கு எப்படிப் பிடிக்கும்?

காந்தி கொலை செய்யப்பட்டு, ஒரு மாதத்தின் பின்னர் அன்றைய உள்துறை அமைச்சர் படேலுக்கு, பிரதமர்நேரு எழுதிய கடித்தை மோடி படித்திருப்பார் போலும்.

“பாபுவின் படுகொலையானது ஒரு தனிப்பட்ட விஷயமல்ல. ஆர்.எஸ்.எஸ். தலைமையில் நடைபெற்ற மிகப் பரவலான பிரசாரத்தின் ஒரு பகுதிதான் அது என்ற முடிவுக்கு வந்துள்ளேன். ஆர்.எஸ்.எஸ்-காரர்கள் ஏராளமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் அப்பாவிகள். ஆனால், இதில் தொடர்புடைய பல முக்கியப் புள்ளிகள் இன்னும் வெளிநாட்டிலோ, தலைமறைவாகவோ அல்லது சில நேரங்களில் வெளியில் நடமாடிக்கொண்டேதான் இருக்கின்றனர். இவர்களில் பலர் அலுவலகங்களிலும் காவல் துறையிலும் உள்ளனர். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு இன்னும் பல வழிகளில் செயற்பட்டுக்கொண்டு இருக்கிறது. வாய்ப்பு கிடைக்கும்போது மீண்டும் தாக்குதலை ஆரம்பிக்கும் என்ற சந்தேகம் இருக்கிறது” என்று எழுதியுள்ளார் நேரு.

“சர்தார் படேல் கரஸ்பான்டென்ஸ்' என்ற புத்தகத்தில் இந்தக் கடிதம் முழுமையாக உள்ளது. இப்படிப்பட்ட நேரு முதல் பிரதமராக வந்தது மோடிக்கு வருத்தமும் வேதனையையும் கொடுத்திருக்கலாம்.

16 வயதில் இங்கிலாந்துக்குப் படிக்க அனுப்பிவைக்கப்பட்டு அங்கு ஏழு ஆண்டுகள் வாழ்ந்த செல்வச் செழிப்புள்ள குடும்பத்து ஜவஹர்லால், சுதந்திரப் போராட்டத்தால் ஈர்க்கப்பட்டு ஒன்பது ஆண்டுகளை இந்தியச் சிறைகளில் கழித்தவர். இங்கிலாந்தின் நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் கார்ல் மார்க்ஸின் பொருளாதார சோஷலிசத்தையும் தனது இலட்சியங்களாகச் சொல்லிக் கொண்டவர். இந்த இரண்டையும் நடைமுறைப்படுத்தியதில் பல்வேறு கோளாறுகள் உள்ளன.


ஆனால், அத்தகைய பரந்துபட்ட இலட்சியம் கொண்ட முதலும் கடைசியுமான பிரதமர், நேரு மட்டும்தான்.


ஆன்மிகமே தன்னை வழிநடத்துவதாகச் சொல்லிக் கொண்ட காந்திக்குக் கிடைத்த நாத்திக சிஷ்யன் நேரு.

மதம், மதம் என்றே பேசிய காந்திக்கு அருகில் இருந்துகொண்டே, “மதம் என்ற வார்த்தையே அச்சத்துக்கு உரியது' என்று சொன்ன பகுத்தறிவுவாதி. எந்த மதத்தின் குருமார்களாக இருந்தாலும் அவர்களை முன்னேற்றத்தின் தடையாகப் பார்த்தார் நேரு.

“சாதாரண மனிதன் மீது நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். அதுவே என் மதம்' என்று சொன்ன பொருள்முதல்வாதி. “இந்தியா மாபெரும் வளர்ச்சி அடைய வேண்டும் என்று நாம் நம்புகிறோம். அப்படியானால் இந்தியா அகத்திலோ, புறத்திலோ மற்றவற்றை ஒதுக்கக் கூடாது, அறிவின் அல்லது ஆன்மாவின் அல்லது சமூகத்தின் வளர்ச்சிக்குத் தடையாகவுள்ள எல்லாவற்றையும் கைவிட வேண்டும்' என்றவர். தேசியம், சோஷலிசம் என்ற சொற்களையே திரும்பத் திரும்பச் சொன்னார்.

ரொட்டித் துண்டுகளைப்போல இந்த நாடு துண்டாடப்பட்டபோது வெட்டிக் கொல்லப்பட்ட இந்து, முஸ்லிம் மக்களின் இரத்தம் எல்லையில் ஓடியது. அந்தக் காலகட்டத்தில் எந்த மத





ஈடுபாடும் அற்ற மனிதராக நேரு இருந்ததால்தான் அந்தக் களரி தொடராமல் நிறுத்தப்பட்டது. இல்லாவிடினும் 1991-ல் இருந்து அனுபவித்து வரும் துன்ப துயரங்கள் 1950-களில் இருந்தே தொடர்ந்திருக்கும். நேரு, தான் மதச்சார்பற்றவராக இருந்தால் போதும் என்று நினைத்தார். காங்கிரஸ் கமிட்டியை அப்படி மாற்ற முயற்சிக்கவில்லை. சித்தாந்த ரீதியாக வகுப்புவாத எதிர்ப்பைச் செய்யவில்லை. முதலாளித்துவவாதிகளை வைத்துக் கொண்டு சோஷலிசம் பேசினார். அவர் சொன்னதை, நேரு சொல்கிறார் என்பதற்காகப் பலரும் ஏற்றுக்கொண்டார்களே தவிர, நேரு சரியானதைத்தானே சொல்கிறார் என்று எந்தக் காங்கிரஸ் தலைவரும் நினைக்கவில்லை. அதனால்தான் நேரு மறைவோடு, நேருவின் காங்கிரசும் மறைநதது. எனவே நேருவை, பிரித்துப் பார்க்க வேண்டுமே தவிர உதாசீனப்படுத்திவிட முடியாது.

திராவிட இயக்க ஆட்சியாளர்களின் திருட்டுத்தனத்துக்கும் தந்தை பெரியாருக்கும் எப்படிச் சம்பந்தம் இல்லையோ, அப்படித்தான் காங்கிரஸ் ஆட்சியாளர்களின் கயமைக்கும் நேருவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மோடிக்கு முத்லில் இது புரிய வேண்டும்!

மோடியைப் போலவே மன்மோகன் சிங்கும் படேல் குறித்து தவறான புரிதலைக் கொண்டுள்ளார். “சர்தார் படேல் மதச்சார்பற்ற தலைவர். அவர் காங்கிரஸ்காரர். அவர் தலைமை தாங்கிய கட்சியில் இருப்பதை பெருமையாக கருதுகிறேன்' என்று மன்மோகன் கூறியிருக்கிறார்.

ஆனால், மன்மோகன் பிரதமராக இருக்கும் காங்கிரஸ் கட்சியில் ஒரு காலத்தில் நாமும் இருந்தோம் என்பதை படேல், நிச்சயம் பெருமையாகக் கருத மாட்டார்.

மோடிக்கு வேட்டு வைப்பதாக நினைத்து, படேலுக்கு “மதச்சார்பற்றவர்' மகுடம் சூட்டுவது மோசமான வரலாற்றுப் பிழை. “படேலின் மதச்சார்பின்மையே தேவை. வாக்கு வங்கி மதச் சார்பின்மை வேண்டாம்' என்று விளக்கமும் சொல்லியிருக்கிறார் மோடி. படேலை முழுமையாக அப்படிச் சொல்லிவிட முடியாது.

இடைக்கால அரசாங்கத்தில் படேல் அமைச்சராக இருந்தபோதுதான் இந்து - முஸ்லிம் கலவரம் அதிகமாக ஏற்பட்டது. இந்தக் கலவரங்களைத் தடுக்க படேல் தவறினார் என்ற வருத்தம் காந்திக்கு இருந்தது.

கலவரம் நடக்கும் இடங்களில் போய் தங்கி, அங்கிருந்து நேருவுக்கும், படேலுக்கும கடிதம் எழுதினார் காந்தி. “உங்களுக்கு எதிராக பல புகார்கள் எனக்கு எட்டியிருக்கின்றன. உங்களுடைய பிரசங்கங்கள் மக்களுக்கு வெறியூட்டுவனவாகவும், விஷமிகளுக்கு திருப்தி அளிப்பனவாகவும் இருக்கின்றன' என்று படேலுக்கு கடிதம் எழுதியவர் காந்தி.

“முஸ்லிம் லீக் சொல்லாத அவதூறை என் மீது நீங்கள் எப்படிச் சொல்லலாம்?' என்று பதில் கடிதம் அனுப்பினார் படேல். பீகார் கலவரம் பற்றி விசாரிக்க கமிஷன் அமைக்க வேணடும் என்று காந்தி கோரிக்கை வைத்தபோது படேல் அதை நிராகரித்தார். “கமிஷன் அமைக்காவிட்டால் முஸ்லிம்களுக்கு கொடுமை நடந்தது உண்மைதான் என்பதை அது நிரூபக்கும் என்றார் காந்தி. ஆனாலும் விசாரணைக கமிஷன் அமைக்கப்படவில்லை. “கமிஷன் அமைத்தால் தீங்குதான் நேரும்' என்று காந்திக்கு பதில் அனுப்பியவர் படேல்.

இவர்கள் சொன்னதை மீறி பீகாருக்கு காந்தி சென்றார். “உறுதியான தலைவர்கள் எல்லாம் டெல்லியில் இருக்க... இந்தப் பகுதியில் வேறு தலைவர்கள் இல்லாததால் நான் ஏதோ ஒரு தலைவராக இருந்து வருகிறேன்' என்று படேலுக்கு கிண்டலாகக் கடிதம் அனுப்பினார் காந்தி. இப்படித் தொடர்ச்சியாக காந்திக்கும் படேலுக்கும் மோதல் இருந்ததை “தலைவர்களுக்கு காந்தி எழுதிய கடிதங்கள்' என்ற நூலைப் படித்தால் புரியும்.

சுதந்திரம் கொடுப்பதற்கு முன்னதாக பிரிவினையைச் செய்துவிட வேண்டும் என்று மவுன்ட்பேட்டன் முடிவெடுத்தபோது, முதலில் சம்மதித்தவர் படேல்தான் என்று மௌலானா அபுல்கலாம் ஆசாத் எழுதியிருக்கிறார். “முஸ்லிம் லீக்குடன் சேர்ந்து உழைக்க முடியாது என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டிருந்தது. முஸ்லிம் லீக்கை விட்டுத் தொலைப்பதற்காகவே... இந்தியாவின் ஒரு பகுதியைக் கொடுக்க தாம் தயாரென்று வெளிப்படையாகவே படேல் கூறினார்” என்கிறார் ஆசாத். அதன் பின்னர்தான் நேருவும், அதையடுத்தே காந்தியும் பிரிவினையை ஏற்றனர்.

இடைக்கால அரசாங்கம் உருவானது முதல் காங்கிரஸிடம் இருந்தும் படேலிடம் இருந்தும் காந்தி விலகியே இருந்தார். பஞ்சாப் கலவரப் பகுதியைப் பார்வையிட காந்தி புறப்பட்டபோது தடுத்தவர் படேல். நவகாளி, டில்லியில் கலவரம் மூண்டது. இந்திய யூனியனில் இருக்கும் முஸ்லிம்களையும், பாகிஸ்தானுக்கு போய்விடும்படி கட்டாயப்படுத்துவதாக காந்திக்குத் தகவல் வந்தது. அதிகார மட்டம் வகுப்புவாத அடிப்படையில் பிரிந்துவிட்டதாக காந்தி கருதினார். பாதிக்கப்பட்ட மக்கள் சொல்வது உண்மையா என்று படேலிடம் கேட்டார். ஆனால், அவர் சொன்ன பதில் காந்திக்கு ஏற்புடையதாக இல்லை. அந்தக் கோபத்தில் உண்ணாவிரதம் தொடங்கினார் காந்தி. இந்த உண்ணாவிரதத்துக்கு காரணம் படேல்தான் என்று எழுதுகிறார் மௌலானா அபுல்கலாம் ஆசாத்.

முஸ்லிம்களுக்கு பாதுகாப்புத் தர படேல் தவறிவிட்டார் என்பதே காந்தியின் வருத்தம். நாட்டில் நடக்கும் முஸ்லிம்களின் கொலைக்கு தான்தான் காரணம் என்பது போல காந்தி நடந்து கொள்வதாக படேல் நினைத்தார். படேல் சொன்ன சமாதானத்தை காந்தி ஏற்கவில்லை. “நான் ஒன்றும் சனாவில் இல்லை. இங்கேதான் இருக்கிறேன்' என்றார் காந்தி. கோபப்பட்டு எழுந்து வெளியே போகப்போன படேலை, ஆசாத் தடுத்தார்.

“நான் இருந்து என்ன பிரயோஜனம்? எனக்குச் செவிசாய்க்க காந்திஜி தயாராக இல்லை. உலகத்தின் முன், இந்துக்களின் முகத்தில் கரிபூச அவர் உறுதி கொண்டிருப்பதாகவே தெரிகிறது. இது அவரது மனப்பான்மையானால் எனக்கு யாதொரு பயனும் இல்லை” என்று சொல்லிவிட்டு படேல் புறப்பட்டுப் போனார்.

இதுவே அவர்கள் இருவருக்குமான இறுதிச் சந்திப்பு. மோடி ஏன் படேலை புகழ்கிறார் என்று புரிகிறதா? குஜராத்காரர் என்ற எல்லையைத் தாண்டி படேல் புகழப்படுவதற்கான அடிப்படைக் காரணம் இதுதான். காந்தி கொலைக்குப் பின்னர்தான் படேல் எண்ணத்தில் பரவலாக மாற்றம் ஏற்பட்டது.


மக்கள் மனதுக்கு மரியாதை கொடுப்பவராக இருந்தார் நேரு. படேல், நாட்டின் எல்லைக்கு முக்கியத்துவம் கொடுப்பவராக இருந்தார். இதுதான் இரண்டு தலைவர்களுக குமான வேறுபாடு. ஆங்கில நூலாசிரியர் ஒருவர் இதை, “தொழில் நகரத்தில் இருந்து வந்தவர் படேல். பூக்களின் நகரத்தல் இருந்து வந்தவர் நேரு. அது, அவர்களது குணத்தால் அறியப்படும்' என்று எழுதினார்.

பிர்லா மாளிகையில் வைக்கோல் மெத்தையில் காந்தி உடல் கிடத்தி வைக்கப் பட்டுள்ளது. இளஞ்சிவப்பு நிற ரோஜாவை அவரது உடலில் வைத்து அஞ்சலி செலுத்தி விட்டு நேரு, படேல் ஆகியோர் இருக்கும் இடம்நோக்கி வருகிறார் மவுன்ட்பேட்டன். “காந்தி எப்போதும் உங்கள் இருவரைப் பற்றியும்தான் கவலைப்பட்டார். நீங்கள் இருவரும் முரண்பட்டு நிற்பது குறித்து வருந்தினார். அவரின் நினைவுக்கு முக்கியத்துவம் இருக்குமானால் கருத்து வேறுபாடுகளைக் களைந்து நீங்கள் இருவரும் கட்டித் தழுவுங்கள்” என்றார் மவுன்ட்பேட்டன். அழுது கொண்டிருந்த இருவரும் தழுவிக்கொண்டனர்.

அனைவரையும் சமமாக நினைக்கும் உள்ளமும் நிர்வாகத் திறனும் காந்தியின் உடலைச் சாட்சியாக வைத்து தழுவியது. அப்படி ஒரு பிரதமர் இந்தியாவுக்கு எப்போது கிடைப்பார்?

**ப.திருமாவேலன்**

# மாநாட்டிலிருந்து இலங்கையை நீக்கக்கோரி தமிழகத்தில் கடையடைப்பு போராட்டம்



(சென்னை)

**இலங்கையை பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் இருந்து நீக்குவதற்கு தமிழக மக்கள் அனைவரும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தமிழகத்தில் நடைபெறவுள்ள கடையடைப்புக்கு முழு ஆதரவை வழங்க வேண்டும் என ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கைத் தீவில் நடைபெற இருக்கும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்ற ஒரு கருத்து உண்மையான உணர்வாளர்களாலும், 2008-2009 இல் ஈழத் தமிழ் இனப்படுகொலைக்கு உடந்தையாக செயற்பட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் அப்போது அங்கம் வகித்த தமிழகத்தைச் சேர்ந்த சில கட்சிகளாலும் தற்போது வலியுறுத்தப்பட்டு வருகிறது.

53 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட பொதுநலவாய அமைப்பில், எந்த நாட்டையும் நிரந்தரமாக நீக்கி வைக்க அதன் விதிகளில் இடமில்லை.

இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை ஈவு இரக்கமின்றி படுகொலை செய்த இலங்கை அரசு பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்கப்பட்டால்தான், பொதுநலவாயத்தின் குறிக்கோள் உயிரோடு இருப்பதாக அர்த்தம்.

பரித்தானிய சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட 2008 ஆம் ஆண்டு, எட்டு ஈழத் தமிழ் வாலிபர்கள் கைகளும் கண்களும் கட்டப்பட்டு, நிர்வாணமாக இழுத்துவரப்பட்டு, கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்ட கோரக் காட்சி உலகத்தில் மனிதாபி மானம் உள்ளவர்களை அதிர்ச்சிக்கு ஆளாக்கியது.

அத்துடன் இசைப்பிரியா மிகக் கொடூரமான முறையில் இலங்கை இராணுவ சிப்பாய்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு சிதைந்து கிடந்த காட்சி தமிழர் மனங்களை நடுங்கச் செய்தது.

பொதுநலவாய மாநாட்டை கொழும்பில் ஏற்பாடு செய்ததே சோனியா காந்தி இயக்குகிற இந்தியாவின் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுதான்.

இலங்கையில் மாநாட்டை நடத்தி விட்டால் தமிழ் இனப்படுகொலை குற்றவாளியான இலங்கை ஜனாதிபதியை இனக் கொலை குற்றத்திற்கான அனைத்துலக நீதிமன்ற விசாரணை என்ற கூண்டுக்குள் சிக்க விடாது தப்பிக்க வைத்துவிடலாம் என்பதுதான் இந்திய அரசின் திட்டமாகும். இந்த இனப்படு கொலையில் கூட்டுக்குற்றவாளிதான் இந்திய அரசு.

மேலும் 6 அணு ஆயுத வல்லரசுகளிடம் இலங்கை அரசு ஆயுதங்கள் வாங்குவதற்கு இந்தியா பண உதவியும் செய்தது. இதுவே விடுதலைப் புலிகள் போரில் தோற்கக் காரணமாயிற்று.

எனவே, இனப்படுகொலை குறித்த நீதி விசாரணை நடைபெறுமானால், இந்திய அரசும் குற்றவாளிக் கூண்டில் நிற்க வேண்டி வரும்.

இலங்கையில் நடைபெற இருக்கும் இம் மாநாட்டில் இந்தியப் பிரதமர கலந்துகொள்ளாது இருப்பதாலோ அல்லது இந்தியாவிலிருந்து எந்தப் பிரதிநிதியும் பங்கேற்காது தவிர்ப்பதாலோ தமிழர்களுக்கு எந்த நீதியும் கிடைக்கப் போவதில்லை.

பொதுநலவாய அமைப்பு தலைவர் கிரீடம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுககு இரண்டு ஆண்டுகளுக்கு சூட்டப்பட்டு விடும்.

இனிமேல் பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்த விடாமல் செய்ய வாய்ப்பு இல்லை. இதனால் மானத்தமிழர்கள் மனம் சோர்வடையத் தேவையில்லை. உலகம் பொதுநலவாய அமைப்போடு சுருங்கிவிடவில்லை.

எனவே, எதிர்வரும் 12 ஆம் திகதி தமிழகத்தில் புகையிரத மறியல் போராட்டம் நடத்துவது என்றும் முழு கடை அடைப்பு நடத்துவது என்றும் எடுக்கப்பட்ட முடிவை மறுமலர்ச்சி திராவிடர் முன்னேற்றக் கழகம் வரவேற்று ஆதரிக்கிறது.

எனவே, முழு கடை அடைப்பை வெற்றிபெறச் செய்யும் வகையில், அன்று வாகனங்களை வீதிகளில் இயக்க வேண்டாம் என வேண்டுகிறேன்.

12 ஆம் திகதி தமிழகத்தில் அனைத்து புகையிரத தடங்களிலும் புகையிரத மறியல் செய்யுமாறு மலர்ச்சி திராவிடர் முன்னேற்றக் கழக தமிழ் உணர்வாளர்கள் அடக்குமுறையை எதிர்த்து முன்வர வேண்டுகிறேன். இதற்கு தமிழர்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று வைகோ கூறியுள்ளார். (2)

## மாநாட்டின் முதலாவது அமர்வில் முக்கிய தலைவர்கள் உரையாற்றுவர்

(கொழும்பு)

பொதுநலவாய அரச தலைவர்கள் பங்கு கொள்ளும் உச்சி மாநாடு எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

முதல் நாள் அமர்வுகள் சுமார் ஒன்றேகால மணித்தியாலங்கள் வரை நடைபெறுமென தகவல் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி சரித ஹேரத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

53 நாடுகளின் பங்குபற்றுதலுடன் இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டின் ஏற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் தகவல் திணைககளத்தில் நடைபெற்றது.

இதன்போதே மேற்கண்ட கருத்துக்கள் முன்வைக்கப் பட்டன.

உச்சி மாநாட்டின் முதல் நாள் அமர்வில் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ், பொது நலவாயத்தின் தற்போதைய தலைவியும், அவுஸ்திரேலிய முன்னாள் பிரதமருமான ஜூலியா ஹிலார்ட் ஆகிய நால்வரும் உரை நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனை அனைத்து இலத்திரனியல் ஊடகங்களும் நேரடி ஒலி, ஒளிபரப்பு செய்ய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிககிழமை காலை வரை வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அரச தலைவர்களும் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.

இதனை அடுத்து கட்டுநாயக்க கொழும்பு, காலி, அம்பாந் தோட்டை, மத்தள, கண்டி, கல்கிஸை ஆகிய பகுதிகளில் என்றுமில்லாத வகையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுநலவாய மாநாடு தொடர்பில் செய்தி சேகரிக்கும் முகமாக உள்நாடு மற்றும் வெளிநாடு களைச் சேர்ந்த ஆயிரம் ஊடகவியலாளர்கள் இதில் பங்குபற்றுவர்

பொதுநலவாய உச்சிமாநாடு மற்றும் அதனுடன் இணைந்து நடத்தப்படும் ஏனைய பேரவைகள் தொடர்பிலான அனைத்து அம்சங்களும் www.chogm 2013.lk என்ற இணையத்தளத்தில் உடனுக்குடன் பதிவு செய்யப்படுமெனவும் அவர் குறிப்பிடடார். (அ-2)

## ஐரோப்பிய செய்மதியொன்று பூமியில் விழும் தறுவாயில்

ஐரோப்பிய செய்மதி ஒன்று அடுத்த இரு தினங்களுக்குள் பூமி யில் விழவிருப்பதாக எச்சரிக்கப் பட்டுள்ளது.

எனினும் பூமியை நோக்கி வரும் இந்தச் செய்மதி எங்கே, எப்போது விழும் என்பது குறித்து எதிர்வுகூற முடியாதிருப்பதாக விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒரு தொன் எடை கொண்ட இந்த செயற்கைக் கோள் சுமார் 25 முதல் 45 துண்டுகளாக உடைந்து பூமியில் விழும் என எதிர்பார்க்கப் படுகிறது. இவற்றிலே மிகப்பெரிய துண்டு 200 பவுண்ட்ஸ் அளவு நிறைகொண்டதாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் மட்டும் சுமார் 100 தொன் குப்பைகள் பூமியில் விழுந்துள்ளன. எனினும் இவ்வா றான விழுகைகளால் எவரும் பாதிப் புக்குள்ளானதாக இதுவரை தகவ லில்லை.

விண்கலம் பூமியில் எங்கு மோதவிருக்கிறது என்பது பற்றி கணிப் பது மிக கடினமாக இருப்பதாக ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்தின் ஈர்ப்பு விசை மற்றும் நிலையான கடல் நீரோட்டம் தொடர்பான அவதானிப்பு நிலையத்தின் முகாமையாளர் ரன் பிளோ பகன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த செய்மதி குப்பைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பூமிக் குள் நுழைய வாய்ப்பு இருப்பதாக வும் நாளை திங்கட்கிழமையளவில் பூமியுடன் மோத வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித் தார்.

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்தின் இந்த செய்மதியின் பயணம் கடந்த மாதத்தில் நாளொன்றுக்கு 2.5 மைல்களாக குறைவடைந்து வந்ததாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

## 22,943 மாணவர்கள் பல்கலைக்கு தகுதி!

(கொழும்பு)

2012-2013 ஆம் கல்வியாண்டுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள வெட்டுப்புள்ளியின் பிரகாரம் 22 ஆயிரத்து 943 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு நுழைய தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் 55 ஆயிரத்து 241 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப்பரீட்சையில் 2இலட்சத்து 29 ஆயிரத்து 737 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. (அ-2)



அமரர் ஜீ.ஜீ பொன்னம்பலத்தின் 112 ஆவது பிறந்த தினத்தையொட்டி குருநகரிலுள்ள அவரது உருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட அனைவரும் உருவச்சிலைக்கு முன்னால் நிற்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

# வவுனியா வைத்தியசாலை சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை

## மூன்றரை வருடங்களாக ஏமாற்றப்படுவதாக முறைப்பாடு

(பூந்தோட்டம்)

**நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு பல்வேறு இக்கட்டான நேரங்களிலும் பணியாற்றிய சுகாதார சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்காது ஒருநாளேனும் கடமை புரியாதவர்களுக்கு நியமனம் வழங்கியதன் மூலம் தாம் ஏமாற்றப்பட்டுள்ளதாக வவுனியா பொது வைத்தியசாலை சுகாதார சிற்றூழியர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னி இறுதிக்கட்ட யுத்தத்தின்போது வவுனியா வைத்தியசாலையில் ஏற்பட்ட ஆளணி பற்றாக்குறை காரணமாக வட மாகாண ஆளுநரின் உத்தரவுக்கமைய கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி ஐம்பது ஆண் சிற்றூழியர்களை வைத்தியசாலை நிர்வாகம் நேர்முகப்பரீட்சை மூலம் சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளர்களாக உள்ளமர்த்தியது.

இதன்படி சுத்திகரிப்பு தொழில்களான நோயாளிகளை பராமரித்தல், வைத்தியசாலை விடுதிகளை அழகுற வைத்தல், முற்றிலும் இயலாத நோயாளிகளை குளிப்பாட்டுதல், உடைந்த மலசலகூடங்களை சீரமைத்தல், மருத்துவர்களுக்கு உதவுதல், நோயாளர்களின் விடுதிக்கேற்ப தாதியர்களுக்கு உதவியாக பணிபுரிதல், வைத்தியசாலை கட்டட நிர்மாணங்களுக்காக கட்டட தொழிலாளர்களாகவும் அமர்த்தப்பட்டு பணி செய்தமை, வன்னியில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது அங்கிருந்து கொண்டுவரப்பட்ட இறந்தவர்களின் உடல்கள் துர்நாற்றம் எடுத்த வேளையில் அவற்றை அகற்றி பிரேத அறையை சுத்தமாக வைத்திருந்தமை போன்றவற்றைத திறம்பட செய்தல் மூலமாக வைத்தியசாலையின் சுகாதாரத்திற்கும் செம்மையான அழகிற்கும் அதனூடான ஏனைய தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கும் நாங்களே மிக முக்கியமான தூண்களாக இருந்தோம் எனபது எவருமே மறுக்க முடியாத உண்மை.

அத்துடன் இவ்வாறு நாம் தொடர்ச்சியாக கடமையாற்றி வருவதற்கான காரணம் விரைவில் நாம் வைத்தியசாலையில் நிரந்தர சிற்றூழியர்களாக நியமிக்கப்படுவோம் என்று வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் அளித்த வாக்குறுதியின் பேரிலேயுமாகும்.

அவரது உறுதிமொழியை நம்பி நாங்கள் வாழ்க்கை செலவின் மட்டத்தை விட குறைந்த ஊதியமான 400 ரூபாவைப் பெற்றுக் கொண்டு பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு மேலான வேலை நேரத்துடன் தொடர்ச்சியாக மூன்றரை வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்து வருகின்றோம்.

2013 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி அன்று வடமாகாண செயலகத்தின் "யாழ்ப்பாணம் பண்ணை" அழைப்பின் பெயரில் வைத்தியசாலை வைத்தியஅத்தியட்சகர் ஊடாக நேர்முகப்பரீட்சைக்கு நாம் அனைவரும் தோற்றியமை குறிப்பிடத்தக்க விடயம்.

எனினும் இவ்வாறான சூழ்நிலையில் தான் எமது நியமனத்திற்கான வெற்றிடம் எதுவுமே இல்லையென கூறிக்கொண்டு எமது வைத்தியசாலைக்கு சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட சிற்றூழியர்களுக்கான நியமனத்தை வட மாகாண ஆளுநர் வழங்கியிருந்தார்.

ஆனால் இவர்களில் முப்பதிற்கு மேற்பட்டோர் வைத்தியசாலைக்குள் ஒருநாள்கூட சிற்றூழியர்களாக கடமை புரிந்த அனுபவம் அற்றவர்கள் என்பது அவருக்கு தெரியாததா?

எனவே இந்த முறையற்ற நியமனத்தின் நியாயத்தைக்கோரி 2013 ஆம் ஆண்டுஜூன் மாதம் 8 ஆம் திகதியன்று வவுனியா பொது வைத்தியசாலை முன்பாக சிற்றூழியர்களான நாம் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தி அமைச்சர் றிஷாட் பதியுதீனிடம் மனு ஒன்றையும் வழங்கியிருந்தோம். அதன் போது அவர் எமக்கான நியமனத்தை 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதியன்று வழங்குவதாக எமக்கு உறுதியளித்து கையொப்பமிட்டு தந்துள்ளார். வவுனியா மாவட்ட பொலிஸ் தலைமையதிகாரி இதற்கு சாட்சியாக இருந்ததுடன் நியமனத்தையும் பெற்றுத்தருவதாக கூறி எமது கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நிறுத்தினார். ஆனால் குறிப்பிடப்பட்ட தினத்தில் எமக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

இதன் பின்னர் வட மாகாண ஆளுநர், உட்பட பல பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை பலமுறை சந்தித்து நாம் மனுக்களை வழங்கியுள்ள போதிலும் எதுவித பயனும் கிடைக்காது ஏமாற்றப்பட்டு கதிகலங்கி நிற்கினறோம். நிரந்தர நியமனம் வழங்கப்படாத இந்த அநீதியானது தமிழ், சிங்கள, முஸ்லிம் இனம என்ற வேறுபாடின்றி நடந்தேறி வருகின்றது.

இறுதிக்கட்டமாக எமது சிற்றூழியர்கள் இருபத்தாறு பேரின் நியமனத்தை உடனடியாக வழங்குமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கோரி நிற்கின்றோம். அவ்வாறு மேற்கொள்ளாத பட்சத்தில் நாங்கள் அடுத்தகட்ட எமது நிலையின் நகர்வுகளை மேற்கொள்வோம். அதுமட்டுமன்றி இவ்வாறு தொடர்ச்சியாக புறக்கணிப்புக்குள்ளான எங்களின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளாலும், கையறு நிலைகளாலும் எற்படும் மன அழுத்தம் காரணமாக எங்களில் எவருக்கேனும் ஏதாவது அசம்பாவிதங்கள் நிகழுமாயின் இது தொடர்பான அரசதரப்பினரும் சுகாதாரத்துறை உயர் அதிகாரிகளுமே பொறுப்பாளிகளாவர்.

எங்கள் சிற்றூழியர்களது குடும்பங்களின் வயிற்றில் அடித்து தமது சுகபோக அரசியலை மேற்கொள்ளும் அரசியல் சக்திகளுக்கு எதிராக எங்களுக்காகவும் மனச்சாட்சியுள்ள மனிதர்கள், சமூக முற்போக்கு சக்திகள், தொழிற் சங்கங்கள், புத்திஜீவிகள் என்போர் குரல் கொடுப்பீர்கள் என நம்பி இச்சிறு துண்டுப் பிரசுரத்தை தங்களிடம் கையளிக்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-250-266)




## வவுனியா மக்கள் ஒன்றியம் சமூகத் தேவைகளை நிறைவேற்றும்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியம் என்னும் அமைப்பு வவுனியா மாவட்ட மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்த்து வைக்கும் முகமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அவ் அமைப்பின் செயலாளர் குமாரசாமி சஜிஸ்குமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியம் நேற்று முன்தினம் அருந்ததி விருந்தினர் விடுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இன, மத, மொழி பேதங்களைக் கடந்து வவுனியா மாவட்ட மக்களின் தேவைகளை இனங்கண்டு அதனை உரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தூண்டுவதன் மூலம் எமது பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பி பிரதேச அபிவிருத்தியை மேற்கொள்ளும் முகமாக ஆரம்பித்து வைக்கப்படுவதாக செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் அவ் அமைப்பின் தலைவரும் வவுனியா நகரசபையின் முன்னாள் உறுப்பினருமான தேசமான்ய சுந்தரம் குமாரசாமி, முன்னாள் நகரசபை உறுப்பினர் அப்துல் பாரி உள்ளிட்ட பெருமளவிலானோர் கலந்து கொண்டனர். (ம-250)

## வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கு முன்பாகவும் அருகாமையிலும் உள்ள பிரதான வீதிகள் இரண்டும் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் சீருடைகளுடன் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் அனைவரும் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

உருத்திரபுரம் பிரதான வீதி எவ்வித போக்குவரத்தும் செய்ய முடியாத நிலையில் உள்ளதால் ஜெயந்தி நகருக்கூடான உட்பாதை வழியாகவே இ.போ.ச., தனியார் பேருந்துகள், ஏனைய வாகனங்கள் மற்றும் பயணிகள் அனைவரும் தமது போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த திருத்தப்படாத வீதிக்கு அருகாமையிலே மகாதேவா சிறுவர் இல்லங்கள், மகாதேவா ஆச்சிரமம் என்பனவும் அமைந்துள்ளன.

இப் பாதையினூடாக பயணிப்போர் தொகை அதிகமாக உள்ளதால் மழை காலத்தில் ஏனையவர்களுடன் பாடசாலை சிறுவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இவர்களது பாடசாலைச் சீருடைகள் சேறு சகதிகளாலும் வெள்ளத்தாலும் அழுக்கடைந்து போகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் துறைசார்ந்தவர்களும் இவ்வீதி தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி குறிப்பாக பாடசாலை மாணவர்களின் நலன்கருதி விரைவில் இவ் வீதியை புனரமைத்துத் தரவேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ம-254)





துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள மு/கரிப்பட்ட முறிப்பு அ.த.க. பாடசாலை மாணவர்களின் கையெழுத்து சஞ்சிகைகளின் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் துணுக்காய் வலயக்கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி அபிராமி பார்த்தீபன் நாடாவெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்கள் மற்றும் விருந்தினர்கள் சஞ்சிகைகளை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

# பேராசிரியர் அழகையா துரைராஜா எனும் மங்காப் புகழுடையோன்

பேராசிரியர் அழகையா துரைராஜா இன்றிருந்தால் அவருக்கு வயது 79. தமது 59 ஆவது வயதில் 11.06.1994 இல் மறைந்தார்.

மறைந்து 19 வருடங்கள் கடந்தும் பேராசிரியர் அழகையா துரைராஜா எனும் அவர் நாமம் இன்னும் வாழ்கிறது. அவர் புகழ் இன்னும் மங்காச் சுடராக ஒளி வீசிக்கொண்டிருக்கிறது.

நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் பீடாதிபதி பதவியைத் துறந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியை பொறுப்பேற்றார்.

அன்று முதல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தியை இலட்சியமாகக் கொண்டு பல கட்டுமானங்களை உருவாக்க விழைந்தார்.

கிளிநொச்சியில் விவசாய பீடம் ஒன்றை உருவாக்கியமையும் முறிகண்டியில் பொறியியல் பீடமொன்றை அமைக்க பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவிலிருந்து அங்கீகாரம்

## இவரின் 79 ஆவது பிறந்த தினம் இன்று

பெற்றுக்கொண்டமையும் யாழ்ப் பாண விஞ்ஞான சங்கத்தை ஆரம்பித்து வைத்தமையும யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத்துறை, வெளி வாரிப் பட்டப்படிப்பு, தொழிலாளர் கல்வி, புற நிலைப் படிப்பலகு என்பவற்றை உருவாக்கியமையும் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக துணைவேந்தர் நிதியம் ஒன்றை ஆரம்பித்தமையும் பேராசிரியர் துரைராஜாவின் எதிர்காலவியல் அடிப்படையிலான தூரநோக்கைக் காட்டுகின்றன.

தமது பொறியியற்துறை சார்ந்த நிபுணத்துவத்துடன் கூடிய வர்ணனையாளராக மாத்திரமின்றி சிறந்த நிர்வாகியாகவும் விளங்கி னார்.

நெருக்கடியான காலகட்டத்தில் வடமராட்சியிலுள்ள தனது வீட்டிலிருந்து பல்கலைக் கழகத்துக்கு துவிச்சக்கரவண்டியில் சென்று வந்து பிறருக்கு முன்மாதிரியாக திகழ்ந்து அந் நெருக்கடியான காலகட்டத்தில் சவால்களை ஏனையோரும் எதிர்கொள்ள துணை நின்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெண் ஊழியர்களும் பெண் விரிவுரையாளர்களும் கூட இச் சவால்களை எதிர்கொண்டு சைக்கிள் ஓட பயின்றனர். அதேவேளை தனது நிர்வாகத்துக்கு உட்பட்ட சகல பீடங்களையும் துறைகளையும் ஒருங்கிணைத்து அரவணைத்து சென்றதோடு மாணவர்களுக்கிடையேயும் அமைதியை நிலை நாட்டினார்.

இவர் சிறந்த ஆய்வாளர்களாகவும் விளங்கி புதியகோட்பாட்டையும்உருவாக்கினார். பொறியியலாளர் துறைசார்ந்த சர்வதேச மாநாடுகளிலும் பங்குபற்றி தமது துறைசார் நிபுணத்துவத்தை நிறுவி எமது நாட்டுக்கும் புகழீட்டித் தந்தார்.

பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை பல்வேறு மாநாடுகளில் படிப்பதெற்கென இவர் எழுதியுள்ளார்.

மண்ணியல் தொடர்பான நிபுணத்துவ ஆலோசனைகளையும் அவ்வவ்போது வழங்கி வந்தார். பிற நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் வருகை விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் பணிபுரிந்தார்.

இக்கட்டான கால கட்டத்தில் உடல் வருத்தத்தையும் பாராது தமிழர் அபிவிருத்திக்காக உழைத்த வேளையில் உடல்நலம் பாதிப் படைந்தநிலையிலும் தனது கடமையிலிருந்து வழுவாது செயற்பட்டார்.

எளிமையாகவும் பழக இனியவராவும் நேர்மையாகவும் விளங்கி எல்லோருடைய மனங்களையும் அவர் கவர்ந்தார். எவரையும் வசீகரித்த அவரது புன்னகை என்றும் மறக்கக் கூடியதன்று.

இதனாலேயே அவர் என்றும் எம் எல்லோர் மனங்களிலும் வாழ்கிறார். அவரின் மங்காப் புகழ் இன்றும் சுடர் விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

**கலாநிதி த.கலாமணி**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**கல்வியியற்றுறை,**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**

# மிருதங்க அரங்கேற்றம்

மொறட்டுவ பல்கலைக்கழக புதுமுக மாணவன் மகிழனின் மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் நல்லூர் இளங் கலைஞர் கலா மண்டப அரங்கத்தில் இடம் பெறவுள்ளது.

அரங்கேற்றம் காணும் மகிழன் விக்கினேஸ்வரன் தாரணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் என்பதுடன் குருநல்லை கண்ணதாஸின் மிருதங்க மாணவருமாவார்.

அரங்கேற்றத்தின் கலைஞர்களாக, பாட்டு சங்கீத வித்துவான் கருணாகரன், கடம் ஞான வேல் வசந், தம்புரா வர்ஜிகன் ,முகர்சிங் க்லா வித்தகர் சதீஸ்குமார், கஞ்சிரா பிரம்ம ஸ்ரீ சிவ சுந்தரசர்மா ,வயலின் முதுமெய்யியல் மாணி குகபரன் ஆகியோர் அணி செய்யவுள் ளனர். (அ-9-23)

# மனித உ.ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கருத்தரங்கு

(தும்பளை)

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவினால் சகல பிரதேச செயலகங்களினூடாக கிராம சேவையாளர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங் கொன்றை நடத்த தீர்மானித்துள்ளனர்.

இக் கருத்தரங்கில் மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்படவுள்ளன.

இக்கருத்தரங்கு கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், தமது கடமைகளை வினைத்திறனுடன் ஆற்ற வழி வகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில் வளவாளர்களாக மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் பங்குபற்றவுள்ளனர்.

இக்கருத்தரங்கு முதலில் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (அ-9-19)




# யுத்தத்திற்கு பின்னர் வன்னியில் போதைப்பொருள் விற்பனை அதிகரிப்பு

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(மல்லாவி)

வன்னி பெருநிலப் பரப்பில் போர் நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்டு ஏதிலிகளாக மீள்குடியேறியுள்ள மக்களின் துன்பங்களை மேலும் தூண்டும் செயல்களாக கஞ்சா, கசிப்பு, சட்டவிரோத மதுபான விற்பனை உட்பட பல்வேறு சமூக சீர்கேடுகள் அதிகரித்து செல்வதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவது, அண்மையில் கிளிநொச்சி பாரதிபுரம் பிரதேசத்தில் வாழும் ஒருவரிடமிருந்து 9 1/2 கிலோ கஞ்சா கிளிநொச்சி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேபோன்று மாங்குளத்தில் மல்லாவிக்கு கொண்டு செல்லும் நோக்கோடு முச்சக்கரவண்டி ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்ட கஞ்சா பொதிகள் மாங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து முச்சக்கர வண்டியுடன் அவர்களால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மல்லாவி ஐயங்கன்குளம், கிராமங்கள் உட்பட முல்லைத்தீவு மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளனர்.

இதனைவிட இயற்கை வளங்களான பாலை, முதிரை, தேக்கு மரங்கள் உட்பட பெறுமதி வாய்ந்த பல மரங்கள் வெட்டப்பட்டு மாட்டுச் சாணம் ஏற்றும் பாரவூர்தியில் மறைத்துக்கொண்டு செல்லப்பட்ட போது அம்மரங்கள் மாங்குளம், கிளிநொச்சி பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டதோடு சந்தேகநபர்களும் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு மரங்கள் ஏற்றப்பட்ட பாரவூர்திகளும் நீதிமன்றத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பாடசாலை மாணவரிடையே போதைப்பாக்கு விற்பனை செய்த சிலரையும் பொலிஸார் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே மக்கள் விழிப்புடன் செயற்படும் பட்சத்தில் குற்றவாளிகளை கைது செய்து தண்டனை வழங்கமுடியும் என மாங்குளம் பொலிஸ் அத்தியட்சகர் பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார். (ம-15)

# நாச்சிக்குடா மீனவர்கள் எம்மைத் தாக்குகின்றனர்

## குருநகர் மீனவர்கள் முறையீடு



குருநகர் மீனவர்களை முல்லைத்தீவு நாச்சிக்குடா மீனவர்கள் தாக்கி வருவதாக மாகாணசபை உறுப்பினர் இம்மானுவேல் ஆனல்ட்டிடம் குருநகர் மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் றோலர் தொழிலில் ஈடுபடும் குருநகரைச் சேர்ந்த மீனவர்களே இவ்வாறு தாக்கப்படுவதாக குருநகர் மீனவர்களால் மாகாண சபை உறுப்பினர்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்பகாலம் தொட்டு நாம் றோலர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றோம். அதனைத் தடைசெய்ததன் பின்னர் தான் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஆகையால் இது தொடர்பில் எமக்கு உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டுமென ஆனல்டிடம் மீனவர்கள் கோரியிருந்தனர். மீனவர்களின் கோரிக்கைக்கு பதிலளித்த மாகாண சபை உறுப்பினர், நான் இது தொடர்பில் எமது கடற்றொழில் அமைச்சர் பா.டெனிஸ்வரனிடம் பேசி அவரை நீங்கள் சந்திக்க வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருகிறேன். அமைச்சரிடம் உங்கள் பிரச்சினைகளைக் கூறி உரிய தீர்வினை பெற்று கொள்ளுங்கள் என்றார்.

இதேவேளை றோலர் மீன்பிடி தொழில் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் இது சட்டவிரோத மீன்பிடி முறை எனவும் யாழ்ப்பாணம் நீரியல் துறைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-4)

# திருமுறிகண்டி தபாலகமூடாக உதவிப்பணம் பெற்றுக்கொள்ளலாம்

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலக பிரிவில் பொன்னகர் கிராம மக்கள் திருமுறிகண்டி தபாலகமூடாக பொதுசன மாதாந்த உதவிப் பணத்தை டிசெம்பர் மாதம் முதல் பெற்றுக் கொள்ள வட பிராந்திய தபால்மா அதிபர் எஸ். இரட்ணசிங்கம் அனுமதி அளித்துள்ளார்.

கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரனின் வேண்டுகோளின்படி வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ஆகியோர் வட மாகாண தபால்மா அதிபருடன் தொடர்பு கொண்டு இந்த அனுமதியைப் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

பொன்னகர் கிராம மக்கள் தமக்கு அருகாமையிலுள்ள முறிகண்டி தபாலகம் ஊடாக இக் கொடுப்பனவைப் பெற முடியாது 8 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி நகர தபாலகத்திற்கு இதுவரையில் சென்று வந்தனர்.

திருமுறிகண்டி தபாலகம் முல்லைத்தீவு மாவட்ட தபால் அத்தியட்சகரின் கீழ் வருவதனாலேயே அவ்வாறு கொடுப்பனவு வழங்கப்பட்டது.

கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் பொதுமக்கள் விடுத்த கோரிக்கை தற்பொழுது இப்போது நிறைவேற்றப்பட்டமையை முன்னிட்டு பொன்னகர் மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

அதுபோன்று 70 வயதை அடைந்த வறிய முதியோருக்கு சமூக சேவைகள் அமைச்சால் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டு மாதாந்தம் வழங்கப்படும் 1000 ரூபா கொடுப்பனவையும் திருமுறிகண்டி தபாலகம் மூலமாக வழங்க வகை செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-254)

# அதிகாரிகளுக்கான செயலமர்வுகள்

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் சமூக சேவைகள் அதிகாரிகளுக்கான நான்கு நாட்கள் செயலமர்வு எதிர்வரும் 19, 20, 21, 22 ஆம் திகதிகளில் வவுனியா தவசிக்குளத்தில் நடைபெற உள்ளது.

யுனிசெவ் நிறுவன நிதி மூலம் பாடசாலை செல்லும் மாணவர்களைக் கொண்ட வறிய குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா முதல் 40 ஆயிரம் ரூபா வரையில் வழங்கப்பட்டு வரும் சுயதொழில் தொடர்பான மதிப்பீட்டை செய்யும் செயலமர்வாக இது அமையுமெனவும் கூறப்படுகின்றது.

பாடசாலை செல்லும் வறிய மாணவர்களின் குடும்பங்களின் தரத்தை உயர்த்தும் செயற் திட்டமாக யுனிசெவ் நிறுவனம் இந்த வாழ்வாதார நிதி நன்கொடையை வழங்கி வருகின்றது.

பிரதேச செயலகப் பிரிவு ஒன்றில் 30 பேருக்கு மேல் சுயதொழில் நன்கொடையைப் பெறும் இடங்களில் யுனிசெவ் நிறுவனத்தினால் சமூக சேவை உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் யுனிசெவ் நிறுவனம் 2010 ஆம் ஆண்டு முதல் இந்த சுயதொழில் நன்கொடையை வழங்கி அநேக குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருவது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியம், ஜரிஸ் தனவந்தர்கள் போன்ற கொடையாளிகள் மூலமாக இந்த நிதி நன்கொடை கிடைக்கப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ம-254)




# வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கும் சந்திரன் முன்பள்ளி

முல்லை. மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள முள்ளியவளை மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள பொன்னகர் கிராமத்தில் சந்திரன் முன்பள்ளி பல வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருவதாக மாணவர்களின் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1988ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இம்முன்பள்ளி மீள்குடியேற்றத்துடன் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து மீண்டும் இயங்கி வருகின்றது. இங்கு 35 மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் இப் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் எதுவுமின்றி அரை ஏக்கர் அரச காணியில் ஓலையால் வேயப்பட்ட கூரையின் கீழ் இயங்கி வருகின்றது.

மேலும் மலசலகூட வசதி, மின்சார வசதி, நூலகம் என்பனவும் கிடையாது. இங்கு ஆசிரியர்களுக்கான தளபாடவசதி, கற்றல் உபகரணம், விளையாட்டு உபகரணம், விளையாட்டு முற்றம், கற்றல் உபகரணங்களை பாதுகாக்கும் அலுமாரி என்பன இல்லை.

மாணவர்களுக்கான தளபாடம் போதுமான அளவு கிடையாது.

பாடசாலையின் சுற்றுவேலி சீரின்மையால் கால்நடைகள் வகுப்புக்களை அசுத்தம் செய்கின்றன.

எனவே உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து இப்பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவவேண்டுமென மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)


# கலாசாரவிழா

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச கலாசார விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பரந்தன் புனித திருச் சிலுவை முன்பள்ளி மண்டபத்தில் கண்டா வளை பிரதேச கலாசார பேரவையின் தலை வரும் கண்டாவளை பிரதேச செயலருமான த.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவருமான மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீனிவாசன், கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ஜே.கில்பேட் குணம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-263)



கிளிநொச்சி மாவட்ட பாதுகாப்பு தலைமை அலுவலகத்தால் தீபாவளி விழா அண்மையில் கிளிநொச்சி மக்கள் வங்கி தலைமை அலுவலகத்திற்கு அருகாமையிலுள்ள ஒத்துழைப்பு மத்திய நிலையத்தில் பாதுகாப்பு படைகளின் மாவட்டத் தளபதி மேஜர் உதய பெரேரா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் கலை நிகழ்வையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

# பயங்கரவாதிகளுக்கு பணியேன்! பா.ஜ.வேட்பாளர் மோடி ஆவேசம்

(லக்னோ)

**நான் வித்தியாசமானவன். பயங்கரவாதிகளுக்கு ஒருபோதும் அடிபணிய மாட்டேன். நாம் பயங்கரவாதிகளை வேரோடு வீழ்த்துவோம். நாட்டை வளர்ச்சி அடைய செய்வதற்காக நாம் எடுத்துள்ள சபதத்தை பயங்கரவாதிகளின் துப்பாக்கி குண்டுகளால் முறியடிக்கமுடியாது என பா.ஜ.பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி ஆவேசமாக பேசியுள்ளார்.**

பா.ஜ., பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி, நாடு முழுவதும் சென்று, தேர்தல் பிரசார கூட்டங்களில் உரையாற்றி வருகிறார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் உ.பி., மாநிலம், பராய்ச்சில் நடந்த கூட்டத்தில், அவர், அனல் பறக்க உரைநிகழ்த்தினார்.

அவர் பேசியதாவது,

குஜராத்தில், தொடர்ச்சியாக, மூன்று முறைகளில் நடந்த சட்டசபை தேர்தல்களில், என்னையும், பா.ஜவையும், எதிர்க்கட்சியினரால், தோற்கடிக்கமுடியவில்லை. ஜனநாயக முறைப்படி என்னை தோற்கடிக்க முடியாது என அவர்களுக்கு புரிந்து விட்டது.

இதனால், வேறு மாதிரியான நடவடிக்கைகளின் மூலம என்னை தோற்கடிக்க முயற்சிக்கின்றனர். சி.பி.ஐ. அமைப்பை தவறாக பயன்படுத்தி பொய் வழக்கு போட்டு அதில் சிக்க வைக்க முயற்சிக்கின்றனர். "இந்தியன் முஜாகிதீன்"



போன்ற பயங்கரவாத அமைப்பனரை சுதந்திரமாக நடமாட அனுமதி அளித்துள்ளனர்.

அதனால்தான், பாட்னாவில் நான் பங்கேற்ற கூட்டத்தில அந்த அமைப்பினர் வெடி குண்டுகளை வெடிக்கச் செய்தனர். ஜனநாயக ரீதியாக வெற்றிபெற முடியாதவர்கள் துரோகிகளைப் போல முதுகில் குத்துகின்றனர்.

வெடிகுணடுகள், துப்பாக்கிகள் மூலம் அரசியல் செய்பவர்கள் ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டும்.நான் வித்தியாசமானவன். பயங்கரவாதிகளுக்கு ஒருபோதும் அடிபணிய மாட்டேன். நாம் பயங்கரவாதிகளை வேரோடு வீழ்த்துவோம். நாட்டை வளர்ச்சி அடைய செய்வதற்காக நாம எடுத்துள்ள சபதத்தை பயங்கரவாதிகளின் துப்பாக்கி குண்டுகளால் முறியடிக்க முடியாது என்றார்.

மேலும் முசாபர் நகர் கலவரத்துக்கு காரணமான உண்மையான குற்றவாளிகளை கைது செய்யாது எங்கள் கட்சியின் அப்பாவிகளான இரண்டு எம்.எல்.ஏ. க்களை கைது செய்துள்ளனர்.

அவர்கள், ஒரு வழக்கிலிருந்து விடுதலையானால், மற்றொரு பொய் வழக்கில் கைது செய்யப்படுகின்றனர். எத்தனை பொய் வழக்குகள் போட்டாலும் அத்தனையையும் முறியடிப்போம்.

அடுத்த தேர்தலில், பா.ஜ., ஆட்சி அமைத்தால் நாட்டு நலனுக்கு எதிராக செயற்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நரேந்திர மோடி கூறினார். (2)



இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் சென்னையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## மீனவர்களை விடுவிக்கக் கோரி தொடர் உண்ணாவிரதப் போராட்டம்

(இராமேஸ்வரம்)

இலங்கை சிறையிலுள்ள, தமிழக மீனவர்களை விடுவக்கக்கோரி, வேலை நறுத்தத்தில் ஈடுபட்டுவரும், இராமேஸ்வரம் மீனவர்கள், நாளை மறுதினம் முதல் தொடர் உண்ணாவிரத போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.



இந்திய, இலங்கை சிறையிலுள்ள இருநாட்டு மீனவர்களையும் விடுவிக்க கோரியும், பாக்.ஜலசந்தி கடலில், இரு நாட்டு மீனவர்களும் சுமுகமாக மீன்பிடிக்க மத்திய, மாநில மற்றும் இலங்கை அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், இராமேஸ்வரம் விசைப்படகு மனவர்கள் கடந்த 6 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழக கடலோர விசைப்படகு மீனவர் நலச்சங்க செயலாளர் என்.ஜே. போஸ் கூறியதாவது,

பல கோடி ரூபாய் மதிப்புள்ள தமிழக படகுகள், இலங்கை அரசின் வசம் உள்ளன. படகு உரிமையாளர்கள் கடனில சிக்கி தவிக்கின்றனர். இரு நாட்டு மீனவர்களும் சுமுகமாக மீன்பிடிக்க, இலங்கை அரசுடனும், அந் நாட்டு மீனவர்களுடனும் மத்திய, மாநில அரசுகள் பேச்சு நடத்த வேண்டும். இதை வலியுறுத்தி, நாளை மறு தினம் தங்கச்சிமடத்தில் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என்றார். (2)

## இந்தியா, பாகிஸ்தான் சம்மதத்துடன் காஷ்மீர் பிரச்சினையில் தலையிடத்தயார்

(வோஷிங்டன்)

இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் கேட்டுக் கொண்டால் மட்டுமே காஷ்மீர் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தலையிட தான் தயார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க அதிகாரி ஒருவர் கடந்த வியாழக்கிழமை கூறியதாவது,

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்குமிடையே காஷ்மீர் பிரச்சினை நீடித்து வருகிறது. இருநாடுகளுக்கு ம[illegible]யேயும் நாங்கள் (அமெரிக்கா) வி[illegible]திக்க முடியாது.

எனினும், காஷ்மீர் பிரச்சினையில் இரு நாடுகளுக்கிடையே மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் எப்போதும் துணை நிற்போம்.

காஷ்மீர் பிரச்சினையில் முன்னேற்றம் ஏற்பட, இந்த இருநாடுகளும்தான் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். நாங்கள் விலகியே நிற்க விரும்புகிறோம். இரு நாடுகளின் உறவு எல்லாவகையிலும் மேம்பட நாங்கள் ஆதரவு அளிப்போம்.

காஷ்மீர் பிரச்சினையில் தீர்வு காண, இரு நாடுகளும் கேட்டுக் கொண்டால் மட்டுமே நாம் அதில் தலையிடுவோம் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

முன்னதாக, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கடந்த மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது அவர், காஷ்மீர் பிரச்சினையில் தலையிட்டு தீர்வுகாண உதவ வேண்டும் என்று ஒபாமாவிடம் கேட்டுக்கொண்டார். எனினும், இரு நாடுகளின் விவகாரத்தில் தலையிட முடியாது என்று கூறிய ஒபாமா, ஷெரீப்பின் கோரிக்கையை நிராகரித்ததாக தகவல்கள் வெளிவந்தன. (2)

## மாநாட்டில் பங்கேற்பது குறித்து பிரதமரே முடிவு எடுப்பார்

### காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது தொடர்பான இறுதி முடிபை பிரதமரே எடுப்பார் என காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி கூறியுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை புறக்கணிப்பதாக இந்தியா பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் தொடரும் எதிர்ப்பால் மட்டுமே மாநாட்டை இந்தியா புறக்கணிக்கும் என்று கூறுவது தவறு என்று கூறிய அக்கட்சி, இலங்கை போரக்குற்றம் புரிந்ததால் மாநாட்டை புறக்கணிக்கிறோம் என்று இந்தியா அறிவிக்க வேண்டும் என்று கூறியுள்ளது. மேலும் இந்த விவகாரத்தில் இந்தியாவன் நிலை குறித்து இன்னும் அறிவிக்கப்படாதது வருத்தம் அளிப்பதாகவும் கூறிய அக் கடசி முடிவு தாமதப்படுத்துவது மத்திய அரசின் அலட்சிய போக்கை காட்டுகிறது என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

இந்நிலையில் பொதுநலவாய மாநாடு விவகாரம் குறித்து நேற்று முன்தினம் சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் உயர்மட்டக்குழு கூடி விவாதித்தது. அப்போது, இம் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று சில அமைச்சர்களும், கலந்து கொள்ள கூடாது என்று சில அமைச்சர்களும் பிரதமரிடம் கூறியதாக தெரிகிறது.

இதனால் இந்த கூட்டத்தில் எந்த ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து பிரதமரே இறுதி முடிவு எடுப்பார் என காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி கூறியதாக தெரிகிறது.

இந்நிலையில் இம் மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்ள கூடாது என வலியுறுத்தி தமிழகம் மற்றும் புதுச்சேரியில் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (2)

## 152 பேருக்கு மரண தண்டனை; வங்கதேசத்துக்கு ஐ.நா. கண்டனம்

வங்கதேச எல்லைப் பாதுகாப்பு படையினர் 152 பேருக்கு அந்நாட்டு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளதற்கு ஐ.நா. மனித உரிமை ஆணையம் கண்டனம் தெரிவித்துள்ளது.

வங்கதேச எல்லைப் பாதுகாப்பு படையினர் ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 2009 ஆம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது நிகழ்ந்த கலவரத்தில் 57 இராணுவ உயர் அதிகாரிகள் உள்ளிட்ட 74 பேர் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக 846 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின் இறுதி தீர்ப்பை அந்நாட்டு நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கியது. அதில், எல்லைப் பாதுகாப்பு படையினர் 152 பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

'இந்தத் தீர்ப்பு குறித்து ஐ.நா.மனித உரிமை ஆணையர் நாயகம் நவநீதம பிள்ளை கூறியவை வருமாறு,

"இந்த விசாரணை, சர்வதேச அடிப்படை நெறிமுறைகளைக் கடைபிடிக்கத் தவறி விட்டது. மேலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 47 பேர் காவலில் இருக்கும் போதே இறந்து விட்டனர் என்பது நம்பத்தகுந்ததாக இல்லை" என்று அவர் தெரிவித்துள்ளார். (2)

## மாநாட்டு புறக்கணிப்பை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்

கொழும்பில் நடைபெறும் பொது நலவாய மாநாடு குறித்த புறக்கணிப்பை பரதமர் மன்மோகன் சிங் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

டில்லியில் அக்கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா செய்தியாளர்களிடம் கூறுகையில்,

குறித்த மாநாட்டை புறக்கணிக்க பிரதமர் முடிவு செய்துள்ளார். இது தாமதமாக எடுக்கப்பட்ட முடிவு. இதனை சில காலத்திற்கு முன்பே எடுத்திருக்க வேண்டும்.


இந்தியா புறக்கணிப்பு என்பது பொது நலவாய அமைப்புக்கு ஒரு சரியான செய்தியாக அமையும். போர்க்குற்றம், இனப்படுகொலை நடந்தேறிய இலங்கைக்கு எதிராக இந்தியா எடுத்த முடிவு இது. தமிழ்நாட்டில் எதிர்ப்பு எழுந்ததால் பிரமதர் இந்த முடிவை எடுத்தார் என்று கூறக்கூடாது. இதில் தூதரக ரீதியான அணுகுமுறை வேணடாம் என்றார். (2)



உகண்டா தலைநகர் கம்பாலாவில் நடைபெற்ற எய்ட்ஸ் நோய் பரிசோதனை முகாமில் அந்நாட்டு ஜனாதிபதி யோவேரி முசெவேனிக்கு சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதுபோன்ற பரிசோதனைக்கு பெரும்பாலான அரசியல் தலைவர்கள் உடன்படாத நிலையில் ஜனாதிபதி யோவேரி முன்னின்று பரிசோதனை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சச்சினின் 199 ஆவது டெஸ்டில்

# தோனி புதிய சாதனை



கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் மேற்கிந்தியத் தீவுகளுடன் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி அமோக வெற்றிபெற்றது. சச்சினின் 199 ஆவது போட்டியாக அமைந்த இப்போட்டியில் பல சாதனைகள் பதிவாகியுள்ளன.

### தோனியின் சாதனை

மூன்று நாட்களுக்குள் இந்திய அணி டெஸ்டில் வெற்றி பெறுவது இது 9ஆவது நிகழ்வாகும். அணித் தலைவராக டோனியின் 25ஆவது டெஸ்ட் வெற்றி இதுவாகும். இந்த மைல்கல்லை எட்டிய ஒரே இந்திய அணித்தலைவர் என்ற பெயரைப் பெற்றுள்ளார்.

### ரோகித்தின் அறிமுக சதம்

மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான இந்த டெஸ்ட் தான் இந்திய வீரர் 26 வயதான ரோகித் ஷர்மாவின் முதலாவது டெஸ்ட் போட்டியாகும். 6ஆவது துடுப்பாட்ட வரிசையில் களம் இறங்கி 177 ஓட்டங்கள் எடுத்த அவர், 6ஆவது வரிசையில் அதிக ஓட்டங்கள் குவித்த அறிமுக வீரர் என்ற சிறப்பை பெற்றிருக்கிறார். இதற்கு முன்பு அவுஸ்திரேலியாவின் டக் வால்ட்டர்ஸ் 1965-66ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் 155 ஓட்டங்கள் எடுத்ததே இந்த வகையில் அதிகபட்சமாக இருந்தது.

### அஸ்வினின் சாதனை

27 வயதான அஸ்வினுக்கு இது 2ஆவது சதமாகும். ஏற்கனவே அவர் அடித்த முதலாவது சதமும் மேற்கிந்தியத் தீவுக்கு எதிராக (2011ஆம் ஆண்டு, 103 ஓட்டங்கள்) எடுத்தது தான். இதன் மூலம் 8ஆவது வரிசையில் களம் கண்டு அதிக சதங்கள் அடித்த இந்தியர்களான கபில்தேவ், டோனி, ஹர்பஜன்சிங் (இந்த வரிசையில் தலா 2 சதம்) ஆகியோரின் சாதனையை சமன் செய்துள்ளார்.

### சிறந்த இணைப்பாட்டம்

ரோகித் ஷர்மாவும், அஸ்வினும் 7ஆவது விக்கெட்டுக்கு 280 ஓட்டங்கள் திரட்டினர். 7ஆவது விக்கெட்டுக்கு இந்திய ஜோடி ஒன்றின் அதிகபட்ச ஓட்டம் இதுவாகும். இதற்கு முன்பு வி.வி.எஸ்.இலட்சுமணும், டோனியும் தென்னாபிரிக்காவுக்கு எதிராக (2009-10ஆம் ஆண்டு) 259 ஓட்டங்கள் எடுத்ததே இந்த இணைக்கு அதிகபட்சமாக இருந்தது.

### அறிமுகப் பந்துவீச்சாளரின் வேகம

இந்த போட்டியின் மூலம் சர்வதேச டெஸ்ட் அரங்கில் காலடி எடுத்து வைத்த இந்திய வேகப்பந்து வீச்சாளர் 23 வயதான முகமது ஷமி இரு இன்னிங்சையும் சேர்த்து மொத்தம் 118 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 9 விக்கெட்டுகளை அள்ளினார். இந்திய அறிமுக பந்து வீச்சாளரின் 2ஆவது சிறந்தபட்ச செயற்பாடு இதுவாகும். இந்திய சுழற்பந்து வீச்சாளர் நரேந்திர ஹர்வானி 1988ஆம் ஆண்டு சென்னையில் நடந்த மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான டெஸ்டில் 136 ஓட்டங்கள் கொடுத்து 16 விக்கெட் வீழ்த்தியதே இந்திய அறிமுக பந்துவீச்சாளரின் அபாரமான பந்து வீச்சாக இருந்து வருகிறது.

மேற்கிந்தியத் தீவின் சுழற்பந்து வீச்சாளர் ஷில்லிங்போர்டு முதலாவது இன்னிங்சில் 6 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இந்திய மண்ணில் 6 விக்கெட் வீழ்த்திய 2ஆவது மேற்கிந்தியத் தீவு சுழற்பந்து வீச்சாளர் ஷில்லிங்போர்டு ஆவார். இதற்கு முன்பு மேற்கிந்தியத் தீவின் லான்ஸ் கிப்ஸ் இந்திய மண்ணில் இரண்டு முறை இச்சாதனையை செய்துள்ளார்.

# ரோகித்தின் ஆட்டத்தில் மாற்றம்

## -கவாஸ்கர்




மும்பை அணியின் தலைவராகப் பொறுப்பேற்ற பின்தான், ரோகித்தின் ஆட்டத்தில் மாற்றம் உண்டானது, என, இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான் கவாஸ்கர் தெரிவித்தார். மேற்கிந்தியத் தீவுக்கு அணிக்கு எதிரான கொல்கட்டா டெஸ்டில் இந்தியாவின் ரோகித் அறிமுக போட்டியில் சதம் விளாசினார். அணியின் முன்னிலைக்கு கைகொடுத்த இவர் குறித்து கவாஸ்கர் கூறுகையில்,

இந்த ஆண்டு ரோகித்துக்கு சிறப்பானதாக அமைந்துள் ளது. கடந்த பிறீமியர் தொடரில் மும்பை அணியின் தலைவராக இவர் நியமிக்கப்பட்டார். இதன் பின்தான், இவரது ஆட்டத்தில் மாற்றம் ஏற்பட்டது. இதற்கு முன்பும் கூட, இவரி டம் திறமை இருந்தது. ஆனால், விக்கெட்டின் மதிப்பு இவருக்கு தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை, அணித் தலைவர் பதவி ஏற்றதுதான், ரோகித்தின் வெற்றிக்கு முக்கிய காரணம். முக்கியமாக, அணித் தலைவர் தோனி இவர் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தார். இதன்படி, அறிமுக டெஸ்டில் சதம் அடித்து அசத்தினார். இவருக்கு சிறப்பான எதிர்காலம் உள்ளது. சக வீரர் அஷ்வினும் திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இரண்டு ஆண்டுகளுக்கு முன், மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிராக எப்படி செயறபட்டாரோ, அதைத்தான் நேற்றும் வெளிப்படுத்தினார். தவிர, நெருக்கடியை சிறப்பாக எதிர்கொண்டார். இவ்வாறு கவாஸ்கர் கூறினார்.

# காத்திருந்தது வீண்போகவில்லை

## - ரோகித் சர்மா

டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் இடம்பிடிப்பதற்காக இத்தனை காலம் காத்திருந்தது வீண் போகவில்லை. இதை விட சிறந்த அறிமுகம் எனக்கு கிடைத்திருக்க முடியாது. இந்த போட்டியை என்றைக்கும் மறக்கமாட்டேன். அஸ்வினுடன் இணைந்து சேர்த்த ஓட்டங்கள் அணியின் வெற்றிக்கு உதவியது மகிழ்ச்சி அளிக்கிறது. எங்கள் இணைப்பாட்டம் மிக முக்கியமானது என்பதை உணர்ந்திருந்தோம். ஆடுகளம் ஓட்டங்களைக் குவிக்க முழுமையாக ஒத்துழைக்காவிட்டாலும், சரியான பந்துக்காக காத்திருந்து அடித்து விளையாடினோம். ஈடன் கார்டன் மைதானத்தில் விளையாடியது அற்புதமான அனுபவம். ரசிகர்களின் ஆதரவுக்கு நன்றி என்றார் ஆட்ட நாயகன் ரோகித் ஷர்மா.




# 2018 உலகக் கிண்ணக் ஹொக்கி இந்தியாவில்

2108 ஆம் ஆண்டு நடைபெறும் ஆண்கள் உலகக் கிண்ணக் ஹொக்கி போட்டியை நடத்தும் வாய்ப்பை இந்தியா பெற்றுள்ளது.

அதே ஆண்டு நடைபெறும் மகளிர் உலகக் கிண்ண போட்டி இங்கிலாந்தில் நடைபெறும் என்று சர்வதேச ஹொக்கி சம்மேளனம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஹொக்கி சம்மேளனம் விடுத்த செய்திக் குறிப்பில், 2018ஆம் ஆண்டுக்கான ஆண்கள் உலகக் கிண்ணத்தை நடத்துவதற்கான போட்டியில் இந்தியாவும், மகளிர் உலகக் கிண்ணத்தை நடத்துவதற்கான போட்டியில் இங்கிலாந்தும் வெற்றி பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த உலகக் கிண்ணப் போட்டியில் ஆண்கள் மற்றும் மகளிர் என இரு பிரிவுகளிலும் 16 அணிகள் கலந்து கொண்டன.



2ஆவது முறை: 8 ஆண்டுகளுக்குள் 2ஆவது முறையாக உலக ஹொக்கி போட்டியை இந்தியா நடத்த உள்ளது குறிப்பிடத்தக்கது.

கடைசியாக, 2010ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டி டில்லியில் நடைபெற்றது. 2014ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணப் போட்டி நெதர்லாந்தில் நடைபெறவுள்ளது. ஜூன் மாதம் நடைபெறும் இப்போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் தலா 12 அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

சர்வதேசத் தொடர்கள்: இந்தியாவில் அடுத்த 4 ஆண்டுகளுக்கு 2018 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் உட்பட [illegible]வதேச அளவிலான 4 விளையாட்டுத் தொடர்கள் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

2018ஆம் ஆண்டு உலக ஹொக்கி போட்டி, 2016ஆம் ஆண்டு நடைபெறும் ஜூனியர் உலகக் கோப்பை போட்டி, 2015 மற்றும் 2017ஆம் ஆண்டு நடைபெறும் ஆடவர் உலக ஹொக்கி லீக் போட்டிகள் இந்தியாவில் நடைபெறும் என்று சர்வதேச ஹொக்கி சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால்
தம்பி சண்டப்பிரசண்டன்
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தண்ணிக்காக வெட்டிய கிணறுகள் பெண்களைக் கொல்லும் இடமோ?

குப்பையைக் கிளறுவதுதான் கோழிகளின் தலைவிதி என்றாயிற்று. கோழிகளுக்கு எவ்வளவு தான் தீனி வைத்தாலும் அவை குப்பைகளைக் கண்டதும் கிளறத் தொடங்கிவிடும். இதைத் தான் தலைவிதி என்று சொல்வது.

இந்தத் தலைவிதி நிறைவேறுவதற்காக முட்டையிலிருந்து வெளிவந்து மூன்றே நாட்க ளான கோழிக்குஞ்சு, தன் பிஞ்சுக் கால்களை அங்குமிங்குமாக ஆட்டிக் கிளறப் பழகிக் கொள் கிறது.

அடேங்கப்பா! பொரித்து மூன்றே நாளில் அந்தக் குஞ்சு என்ன அழகாகக் கிளறக் கற்றுக் கொள்கிறது என்று பெருமிதப்படுவோரும் இருப்பர்.

ஆனால் அந்தக் குஞ்சின் கற்றல், சாதனை படைப்பதற்கானதல்ல. அது குப்பையைக் கிளறு வதற்கானது என்ற உண்மையை பலரும் உணர்ந்து கொள்ளத் தவறுகின்றனர். கோழிகளின் தலை விதி குப்பையைக் கிளறுவதுபோல,

எங்கள் தலைவிதி உயிரற்ற சடலங்களை மீட்பது, சேர்த்துவைத்த செல்வங்களைத் திரு டர்களுக்குக் கொடுப்பது, நேர்மைத் திறனற்றவர் களை உச்சமான பொதுநலவாதியாக நம்புவது என்றவாறாகத் தொடர்கிறது.

யுத்த காலத்தில் உயிரிழந்துபோன தமிழர்க ளின் எண்ணிக்கையை இன்னும் சரியாகக் கணக் கெடுக்க முடியாமல் அந்தத் துன்பம் நீடிக்கிறது.

இதனிடையே வன்னி யுத்தத்தில் உயிரிழந்த வர்கள் தொடர்பான காணொளிகள் இடையி டையே வெளிவந்து எங்கள் இதயங்களைக் கசக்கிப் பிழிகின்றன.

யுத்தம் முடிந்தபோதிலும் யுத்தத்தின் வடுக் கள் எங்கள் நெஞ்சுகளில் ஓங்கி அறையவே செய்கின்றன.

பரவாயில்லை, சமாதான சூழ்நிலை என்று கூறும்போது கடந்தவற்றை-நடந்தவற்றை சகித்துக் கொண்டு எங்கள் வாழ்வைத் தொடர்வோம் என்றால், தேர் முட்டியில் பெண்ணின் சடலம், வன்புணர்வுக்குப் பின்பே கொலை, கிணற்றில் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு, பட்டப்பகலில் வீடு உடைத்துத் திருட்டு என நாளாந்தம் வெளி வரும் செய்திகள் இந்த மண்ணில் நாங்கள் நிம்மதி யாக வாழ முடியாது என்பதை நிரூபிக்கின்றன.

வடமாகாணம் முழுவதிலும் பொலிஸ் சேவை. தாராளமாகப் பொலிஸார் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பது உண்மைத் தகவலாக இருக்க, இப்படியான கொலைகளும் களவுகளும் தொடர்ந்தால் நிம்மதியான வாழ்வு தமிழ் மக்களுக்கு எப்படிக் கிடைக்கும்? எப்போது கிடைக்கும்?

இலங்கைத் திருநாட்டில் சமாதான வாழ்வை ஏற்படுத்த வேண்டும் என அரசு நினைத்தால், இனப்பாகுபாடின்றி எங்கும் சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்பட வேண்டும்.

ஆனால் வடக்கில் சட்டம் ஒழுங்கு குலைவுற் றிருப்பது போலவே தெரிகிறது. சில இளைஞர் கோஷ்டிகளின் சண்டித்தனங்களும் பெண்கள் மீதான அவர்களின் சேஷ்டைகளும் கவனிக்கப் படாத சம்பவங்களாகத் தொடர்கின்றன.

குடிபோதைகளும் போதைப் பாவனைகளும் எல்லை மீறித் தாண்டவம் ஆடத் தொடங்கி யுள்ளன. எனினும் இவற்றையெல்லாம் பொலி ஸார் கண்டுகொள்ளாது இருப்பது ஏன்?

கடந்த சில வாரங்களுக்குள் நடந்த கொலை கள், களவுகள் எதிர்காலத்தில் இங்கு என்ன நடக்கப் போகிறது என்பதற்குக் கட்டியம் கூறு கின்றது அல்லவா?

இவற்றைத் தடுப்பதும் தட்டிக் கேட்பதும் பொலி ஸாரின் கடமை என்பதை அவர்கள்தான் உணர்ந்து செயற்பட வேண்டும். நடக்குமா?

## 50 வீடுகளையும் 22 காணிகளையும் இராணுவத்தினர் கையளித்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை பிரதேச செய லாளர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இரா ணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழி ருந்த 50 வீடுகளும் 22 காணிகளும் நேற்றைய தினம் அதன் உரிமையா ளர்களிடம் கையளிக்கப்பட்டன.

இதில் பருத்தித்துறையில் 29 வீடுகளும் 3 காணிகளும் வல்வெட் டித்துறையில் 19 வீடுகளும் 18 காணி களும் சக்கோட்டையில் 2 வீடுகளும் ஒரு காணியுமாக மொத்தம் 50 வீடுகளும் 22 காணிகளும் அதன் உரி மையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

வடக்கு மாகாணசபைத் தேர் தலை முன்னிட்டு இராணுவத்தினரின் கட் டுப்பாட்டின் கீழிருந்த வீடுகள் யாழ். மாவட்டத்தில் அதன் உரிமையாளர் களிடம் கையளிக்கப்பட்டு வந்தன.

இதேவேளை தேர்தல் காலத்தில் வீடுகள் கையளிக்கப்படுவதாக"எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதையடுத்து அந்த நட வடிக்கை கைவிடப்பட்டது.

இந்நிலையில் கொழும்பில் இம் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு இராணுவத்தின ரின் கட்டுப்பாட்டின் கீழிருந்த வீடுகள் கையளிக்கும் நிகழ்வு யாழ்.மாவட்டத் தில் இடம்பெற்று வருகின்றது.


இதன் தொடர்ச்சியாக பருத்தித் துறை பகுதியில் சுமார் 50 வீடுகள் நேற் றைய தினம் அதன் உரிமையாளர் களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளைவலிகாமம்வடக்கிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தமது சொந்த இடங்க ளில் மீள்குடியேற முடியாத நிலையில் கடந்த 23 வருடங்களுக்கு மேலாக அவதிப்பட்டு கொண்டிருக்கும் நிலையில் அவர்களுக்கு சொந்தமான வீடுகள் இரா ணுவத்தினரால் புல்டோசர் வாகனம் மூலம் இடித்தழிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-6)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### ஓம் சிவாய நமவெனத் துதிப்போம்



தும்பிமுகன் அடிக்கீழ்ப் படுப்போம்
அம்மையப்பன் பாதத்தில் கிடப்போம்
ஆறுவது சினமென நடிப்போம்
நாறுமுடல்நா மல்லவென்று முடிப்போம்
தேறிந் தெளிந்தவரை அடுப்போம்
ஊறிவரும் அமுதத்தை உண்போம்
வாழ்கசிவ தொண்டனெனக் களிப்போம்
ஊழ்வினையை முற்றாக அழிப்போம்

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிபு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தின் வளர்ச்சிக்காக சங்கத்தின் யாழ். கிளையினரால் அதிர்ஷ்ட இலாபச் சீட் டுக்கள் முன்னதாக விற்பனை செய் யப்பட்டன. இதற்கமைய அந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு நேற்று நடைபெற்றது.

இதில் முதலாம் பரிசு-4998, இரண் டாம் பரிசு-17455, மூன்றாம் பரிசு- 17000 என்ற இலக்கங்கள் பெற்றுள்ளன.

மற்றும் 05 ஆறுதல் பரிசுகளை

16001, 2269, 4841, 5803, 10308

ஆகிய இலக்கங்கள் பெற்றுள்ளன.

எனவே, அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றிபெற்றவர்கள் 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை அலுவலகத்திற்கு எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமுக மளித்து அதிர்ஷ்டலாபச்சீட்டை வழங்கி பரிசில்களை பெற்றுக்கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் கே.பாலகிருஸ் ணன் அறிவித்துள்ளார். (அ)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

கோண்டாவில் பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போதைப்பொருள் ஒழித்தல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் ஜதுநந்தன் கருத்துரை வழங்கவுள்ளார். (அ)

## கண்களையும் இதயத்தையும் திறந்து எதார்த்த வாழ்வு வாழத் தொடங்குவோம்

### பரமபிதா காட்டிய பாதை

இன்று நமக்குத்தரப்படும் வேதாக மப் பகுதியில்" உயிர்த்தெழுதலை மறுக் கும் சில சதுசேயர் இயேசுவிடம், மணமான ஒருவர் மகப்பேறின்றி இறந்துபோனால் அவர் மனைவி, யைக் கொழுந்தனே மனைவியாக ஏற்றுக்கொண்டு தம் சகோதரருக்கு வழிமரபு உருவாக்க வேண்டும் என்று மோசே எழுதி வைத்துள்ளார். இங்கு சகோதரர் எழுவர் இருந்தனர். மூத்தவர் ஒரு பெண்ணை மணந்து மகப்பேறின்றி இறந்தார். இவ்வாறே எழுவரும் அவளை மணந்து மகப் பேறின்றி இறந்தனர்.

கடைசியாக அப்பெண்ணும் இறந் தார். அப்படியானால் உயிர்த்தெழும் போது அவர் அவர்களுள் யாருக்கு மனைவி ஆவார்? ஏனெனில் எழுவ ரும் அவரை மனைவியாகக் கொண் டிருந்தனரே? என்று கேள்வி கேட்ட னர். அதற்கு இயேசு சதுசேயரிடம், இக் கால வாழ்வில் மக்கள் திருமணம் செய்து கொள்கின்றனர்.

ஆனால் வருங்கால வாழ்வைப் பெறத்தகுதி பெற்ற யாரும் இறந்து உயிர்த் தெழும் போது திருமணம் செய்துகொள்வ தில்லை. நம் கடவுள் இறந்தோரின் கடவுள்அல்ல. மாறாக வாழ்வோரின் கடவுள்.

ஏனெனில் அவருக்கு அனை வரும் உயிருள்ளவர்களே எனகூறும் பகுதிகளைப் பார்க்கின்றோம்" இயேசு விடம் கேள்வி கேட்டவர்கள் பலர். சில வேளைகளில் அவர்கள் நல்ல எண ணத்தோடு கேள்விகள் கேட்டார்கள். ஆனால் வேறு சில வேளைகளில் சிலர் இயேசுவிடம் குற்றம் காணும் நோக் கத்துடன் கேள்வி கேட்டனர். இத்த கைய கேள்விகளில் ஒன்றுதான் இன்று சதுசேயர் இயேசுவிடம் உயிர்த்தெழு தல் பற்றி கேட்கும் தந்திரக் கேள்வி.

அக்கேள்விகளுக்கு இயேசு பொருத் தமான பதிலளித்தார்.

இங்கு ஒரு சிறுகதையை பகிர்வது நல்லது: ஒரு விமானத்தில் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு வெள்ளைக் காரப பெண், ஒரு ஆபிரிக்கர் பக்கத்தில் அமர்த்தி வைக்கப்பட்டார். இதைப் பொறுக்க முடியாத அப்பெண்மணி விமானப் பணிப்பெண்ணை அழைத் தார். உனக்குக் கண் தெரியவில் லையா? இப்படிப்பட்ட இழிவான ஒரு வகுப்பைச் சேர்ந்தவருடன் நான் எப்படி பயணம் செய்ய முடியும்? என்று கேட்டார்.

சற்றுப் பொறுமையாக இருங் கள்.எல்லா இருக்கைகளும் நிறைந்து விட்டன. நான் ஏதாவது செய்ய முடி யுமா என்று பார்த்து வருகிறேன் என்று பணிப்பெண் கூறிச் சென்றார். சிறிது நேரத்தில் திரும்பி வந்த அவர்,நான் கூறியதுபோலவே எல்லா இருக்கைக ளும் நிரம்பி விட்டன. எக்கானமி வகுப் பும் பிஸினஸ் வகுப்பும் நிரம்பிவிட்டன. அதிர்ஷ்டவசமாக முதல் வகுப்பில் மட்டும் ஒரு இருக்கை உள்ளது. பொது வாக எக்கானமி வகுப்பில் உள்ள வரை முதல் வகுப்புக்கு மாற்ற முடியாது

ஆனால் நான் விமானியிடம் விளக கிக் கூறினேன். அவரும் இப்படிப்பட்ட ஒரு இழிவான மனிதருடன் பயணம் செய வது கடினம் என்று ஒத்துக் கொண்டார் என்றாள்.

முகம் மலர்ந்த வெள்ளைக்காரப் பெண்ணை நோக்காமல்,ஆபிரிக்க மனிதர் பக்கம் திரும்பிய பணிப்பெண், ஆகவே நீங்கள் உடனே உங்கள் பொருட்களை எடுத்துக்கொண்டு என் னோடு முதல் வகுப்பிற்கு வாருங்கள் என்றார். அதுவரை நடப்பதைக் கண்டு அதிர்ச்சியில் இருந்த ஏனைய பயணி கள் மகிழ்ந்து எழு ந்து நின்று கை தட்டினார்கள்.



பணிப் பெண் ணின் பதிலில் தகு ந்த பதில் கிடைத் தது. கேள்வி கேட்ட பெண்மணி தலை குனிந்தார். அவ் வாறே சதுசேயர் கேட்ட இக்கேள் விக்கு இயேசு அளி த்த பதிலில் இரு ப்குதிகள் உள்ளன. முதலில் இயேசு உயிர்த் தெழுவோர பெறும வாழ்வு எவ்வாறு இருக்கும் என்பதை விளக்குகிறார். பின்னர் நம் இறைவன்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

வாழ்வோரின் கடவுள். அவரைப் பொறு த்தமட்டில் அனைவ ரும் உயிருள் ளவர்களே என்கிறார்.

மனிதர் ஒரு புதிய நிலை அடை வார்கள். எனவே, இவ்வுலக வழக்கங் கள் போலவே மறுவுலகிலும் இருக்கும் என நினைப்பது சரி யல்ல. மனிதருக்கு உயிரளிக்கின்ற கடவுள் அந்த உயிர் முற்றிலுமாக மறைந்துவிடுவதை விரும்ப வில்லை.

வாழ்வோரின் கடவுளாக விளங்கும் இறைவன் நமக்கு வாழ்வளிக்க விரும்பு கிறார. இங்கு இயேசுவின் பதில் உயிர்ப்பு பற்றிய தெளிவைக் கொடுக்கி ன்றது.

இச் சதுசேயர்போல் உயிர்த்தெழுத லில் நம்பிக்கை இல்லாமல் வாழ்வோர் இன்றும் எம்மிடையே இருக்கிறார்கள். உயிர்ப்பை மறுக்கும் வகையில் அவர் கள் கண்களை மூடி கேள்விகள் எழுப்பு கின்றனர்.

எனவே நாமும் கண்ணை இருக மூடிக்கொண்டு வாழ்ந்தால் வாழ்க்கை இருண்டுவிடும். கண்களையும் இதயத் தையும் திறந்து எதார்த்த வாழ்வு வாழத் தொடங்குவோம். வாழ்க்கை வசந்தமாகும்.

## 'ஐ' படத்தில் கலக்கும் எமி ஜாக்சன்



ஐ' படத்தில் வில்லனுடன் இணைந்து கலக்கியுள்ளாராம் எமி ஜாக்சன். கொலிவுட்டில் ஷங்கரின் இயக்கத்தில் பிரமாண்ட பொருட்செலவில் உருவாகிவரும் திரைப் படம் "ஐ".

ஒஸ்கார் புகழ் ரகுமான் இசையமைக்கும் இப்படத்தில் விக்ரம், எமி ஜாக்சன், உபேன் பட்டேல் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

படத்தின் வில்லன் நடிகர் உபேன் உடன் இணைந்து பாடல் காட்சி ஒன்றில் நடிக்கிறார் எமி. எமியின் பால்வெள்ளை நளினத்தை தனக்கே உரிய அழகியலோடு பாடல் காட்சியில் இணைத்து இயக்குநர் ஷங்கர் பதிவு செய்துள்ளார்.

இந்த பாடல் காட்சி அடுத்த வருடம் வெளியாகும் போது பரபரப்பாக பேசப்படும் என்று படக்குழு எதிர்பார்க்கிறது.

மேலும் விக்ரமுக்கு வித்தியாசமான வில்லன் வேடத்தையும் கொடுத்திருப்பதாக பட வட்டாரம் கூறுகிறது.

## இசையமைக்க விரும்பும் ஜெய்

நடிகர் ஜெய் தனது இசைத் திறமையை வெளிப்படுத்த துடித்துக் கொண்டிருக்கிறார்.

இளையதளபதி விஜய்யின் தம்பியாக பகவதி படத்தில் நடிகராக அறிமுகமானார் ஜெய்.

அதன் பின்னர் சுப்பிரமணியபுரம் படத்தின் மூலம் தனக்கென தனிமுத்திரையை பதித்தார்.

நடிப்பில் முத்திரை பதிக்க கடுமையாக உழைக்கும் ஜெய் இசையிலும் கவனம் செலுத்துகிறார்.

இவர் ஏராளமான ட்யூன்கள் போட்டு வைத்திருக்கிறாராம். தன்னை பார்க்க வரும் இயக்குநர்களுக்கு அந்த ட்யூன்களை போட்டுக் காட்டுகிறாராம்.

தன் இசைத்திறமையை பார்த்து வியக்கும் இயக்குனர்களிடம் தான் இசைக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்றும் என் அப்பா, பெரியப்பா, சித்தப்பா என்று எங்களது குடும்பம் இசைக் குடும்பம், என் உடலிலும் இசை இரத்தம் தான் ஓடுகிறது எனவும் கூறி வருகிறாராம்.



மேலும் இசையமைக்க வாய்ப்பு கிடைத்தால் நடிப்பை போன்று இசைத் துறையிலும் உலாவருவேன் என்று கூறும் ஜெய் வாய்ப்பு கேட்டு வருகிறாராம்.

## இரண்டாம் உலகம் படத்திற்கு 'யு' சான்றிதழ்

எந்தவித கட்டுப்பாடுமின்றி தணிக்கை குழுவினரிடம் பாராட்டு பெற்றுள்ளது இரண்டாம் உலகம்.

செல்வராகவனின் பிரமாண்டமான இயக்கத்தில் உருவாகியிருக்கும் படம் இரண்டாம் உலகம்.

இப்படத்தில் ஆர்யா, அனுஷ்கா இருவரும் இரண்டு வேடத்தில் நடித்துள்ளனர்.

ரொமாண்டிக் பேண்டசி திரைப்படமான இப்படத்தை பெரும் பொருட்செலவில் தயாரித்திருக்கிறது பி.வி.பி சினிமா நிறுவனம்.

ஹாரிஸ் ஜெயராஜ் இப்படத்திற்கு இசையமைக்க, கொலைவெறி புகழ் அனிருத் பின்னணி இசையமைத்துள்ளார்.

தற்போது இப்படத்தை பார்த்த தணிக்கை குழுவினர், படத்திற்கு யு சான்றிதழ் வழங்கியுள்ளனர். அதுமட்டுமின்றி, இப்படத்தில் வித்தியாசமான கதைக்களத்தை கையாண்டுள்ளதால் படக்குழுவினரை வெகுவாக பாராட்டினார்களாம் தணிக்கை குழுவினர்.

ஏற்கெனவே வெளியான இப்படத்தின் பாடல்கள் மற்றும் டிரைலர்கள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்படம் ஒரே நேரத்தில் தமிழிலும், தெலுங்கில் வர்ணா என்ற பெயரிலும் வருகிற நவம்பர் 22ஆம் திகதி வெளியாகவிருக்கிறது.



திரை உலகில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி மக்கள் திலகம், நடிகர் திலகம் ஆகியோருடன் நடித்து நடிப்பின் சிகரமாக இருக்கும் கமல் ஹாசன் கடந்த 7 ஆம் திகதி தனது 59ஆவது பிறந்தநாளை கொண்டாடினார். அன்றைய நிகழ்வொன்றில் அவர் தனது ரசிகர்களுடன் அளவளாவும் காட்சி.

## மகிழ்ச்சியில் விசால்



விஷாலின் நடிப்பில் வெளியாகி தீபாவளி ரேசில் சக்கைபோடு போட்டு வரும் திரைப்படம் பாண்டியநாடு.

இப்படம் ஒரு நல்ல வர்த்தக படத்துக்குரிய அத்தனை அம்சங்களோடும் வெளியாகி வெற்றி பெற்றுள்ளது.

முந்தைய படங்களில் எதிர்பார்த்த வெற்றியை பெறாமல் போனதில் வருத்தத்தில் இருந்த விஷாலுக்கு நிச்சயமாக இப்படம் ஒரு விருந்தாக அமையும்.


எல்லா பகுதிகளிலும் பாண்டியநாடு படத்திற்கு திரையரங்குகளை அதிகப்படுத்தியிருப்பதாக செய்தி வந்தது விஷாலை இரட்டிப்பு சந்தோஷத்தில் ஆழ்த்தியுள்ளதாம்.

## 12 வருடங்களுக்குப் பின் விஜய் படத்தில் வைரமுத்துவின் பாடல்

ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கும் அனைத்து படங்களிலும் வைரமுத்து இருப்பார். சில படங்களில் வேறு சில கவிஞர்கள் இடம்பெற்றாலும், அதிகபட்ச பாடல்களை வைரமுத்துதான் எழுதி வருகிறார். ஆனால், விஜய் நடிக்கும் படங்களுக்கு அதிகமாக ரகுமான் இசையமைக்காததால், விஜய் படங்களில் வைரமுத்துவின் பாடல்கள் இடம்பெறுவதும் குறைவாக உள்ளது.

அதனால் சுமார் 12 வருடங்களுக்கு முன்பு விஜய் நடித்த யூத் படத்துக்கு பாடல் எழுதிய வைரமுத்துவிற்கு, அதன்பிறகு விஜய் படங்களுக்கு பாட்டு எழுதும் சந்தர்ப்பமே அமையவில்லை. ஆனால் தற்போது நேசன் இயக்கத்தில் விஜய் நடித்து வரும் ஜில்லா படத்தில் மீண்டும் பாடல் எழுதியிருக்கிறார். டி.இமான் இசையில் வைரமுத்து எழுதியுள்ள கண்டாங்கி கண்டாங்கி என்ற பாடலை சமீபத்தில்தான் ஸ்ரேயா கோஷலுடன் இணைந்து பாடினார் விஜய்.

பாடலை பாடி முடித்தவர், பாடலின் இசையும், வரிகளும் அருமையாக உள்ளது. எனது லேட்டஸ்ட் ஹிட் பாடல்களான கூகுள் கூகுள், வாங்கண்ணா வணக்கங்கண்ணா பாடல்கள் வரிசையில் இந்த பாடலும் பெரிய அளவில் ஹிட்டாகும் என்று தெரிவித்துள்ள விஜய், இப்பாடலைத் தான் தற்போது



அடிக்கடி முணுமுணுத்துக்கொண்டிருக்கிறாராம்.

### விநியோகஸ்தர்கள் முண்டியடிப்பு

விஜய், மோகன் லால், காஜல் அகர்வால் என்று நட்சத்திர கூட்டணியில் உருவாகியிருக்கும் இப்படம் தொடங்கிய நாளிலிருந்தே படத்தின் மீதான எதிர்பார்ப்பு கிளம்பியுள்ளது.

எதிர்வரும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளியிட முடிவு செய்துள்ள இப்படத்தின் படப்பிடிப்பு இன்னும் முடிவடையவில்லை.

ஆனால் அதற்குள்ளாகவே ஜில்லா படத்தை வாங்கி வெளியிடுவதில் விநியோகஸ்தர்கள் மத்தியில் போட்டி உருவாகி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. திருச்சி, கோவை போன்ற பகுதிகளில் பெரும் விலைக்கு விற்பனை ஆகியிருப்பதாக கூறப்படுகிறது.

# இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க பிரித்தானியாவுக்கு உரிமையில்லை

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



இலங்கைக்கு அழுத்தங்களை கொடுக்கும் எந்த உரிமையும் பிரித்தானியாவுக்கோ வேறு எந்த நாடுகளுக்கோ இல்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய சர்வதேச விசாரணை ஒன்றின் அவசியம் குறித்து தனது இலங்கை விஜயத்தின் போது வலியுறுத்தப்படும் என பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்திருந்தமை தொடர்பில் பதிலளிக்கும் போது அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல இதனை கூறினார்.

அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரமான நாடு என்ற வகையில் அப்படியான அழுத்தங்களுக்கு அடிபணிய இலங்கை தயாரில்லை.

இறையாண்மையுள்ள சுதந்திர நாடான இலங்கைக்கு பிரித்தானிய பிரதமர் உண்மையில் அப்படியான அழுத்தங்களை கொடுத்தாரா என்பதை நான் அறியவில்லை என்றார்.

பிரித்தானிய தமிழர் பேரவையின் பிரதிநிதிகளை கடந்த வியாழகிழமை சந்தித்த பிரதமர் கமரூன், சுதந்திரமான விசாரணை நடத்த இலங்கை தவறினால் மட்டுமே சர்வதேச விசாரணை ஒன்று அவசியப்படும் என்று தெரிவித்திருந்தார் என பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில், பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு புறம்பாக தனிப்பட்ட விடயங்களை கலந்துரையாடும் என்ற நோக்கமும் இல்லை என அமைச்சர் ரம்புக்வெல்ல குறிப்பிட்டார். (எ-11)

# இலங்கை மீது தேசிய விசாரணை

## கமலேஷ் சர்மா தெரிவிப்பு



இலங்கையில் இடம்பெறுகின்ற சித்திரவதைகள் தொடர்பில் பொதுநலவாய அமைப்பின் உதவியுடன் இலங்கை அரசாங்கம் தேசிய விசாரணை ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் பங்கேற்பதற்காக கொழும்பு புறப்பட முன்னர், லண்டனில் உள்ள மல்பரோ இல்லத்தில் வைத்து த ஹிந்து ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் "இந்த விசாரணைக்குழு பொதுநலவாய செயலகத்தின் கண்காணிப்பில் இலங்கையின் தேசிய மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கீழ் அமைக்கப்படவுள்ளது.

2009ஆம் ஆண்டு முதல் தற்போது வரையான காலப்பகுதிக்குள் அரசாங்கத்தின் முகவர் அமைப்பு மற்றும் படைத்தரப்பு ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்து இந்த விசாரணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளும். இந்த விசாரணைகள் 18 மாத காலத்தில் நிறைவடையும்" என்று மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பொறுப்புக் கூற வைப்பதில் இருந்து இலங்கை அரசாங்கத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் பொதுநலவாய அமைபபின் செயலாளர் கமலேஷ் சர்மா ஈடுபட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தமை தெரிந்ததே. (எ-11)

# ஹோட்டல்களுக்கு அருகில் பட்டம் விடத்தடை விதிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறும் காலப் பகுதியில மாநாடு நடைபெறும் மண்டபங்கள் மற்றும் அரச தலைவர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களுக்கு அருகில் பட்டங்கள் பறக்கவிடுவது தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார தெரிவித்தனர்.

அரச தலைவர்களுக்கு தேவையான உச்ச பாதுகாப்பை வழங்கும் நடவடிக்கையாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

அத்துடன் அரச தலைவர்களின் பாதுகாப்புக்காக பொலிஸ் போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த 5 ஆயிரம் பேரும் ஏனைய பாதுகாப்பு பணிகளுக்காக 2 ஆயிரம் பேரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, பொதுநலவாய நாடுகளின் மாநாடு தொடர்பில் பேசுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு பற்றி பொய் பிரசாரங்களை மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த் தீர்மானம் குறித்து கருத்து வெளியிட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க, புலனாய்வுப் பிரிவினர் ஏற்கெனவே அதற்கான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன் மாநாடு நடைபெறும் நாட்களில் கொழும்பில் வீதிகள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட மாட்டாது. அரச தலைவர்கள் பயணிக்கும் நேரத்தில் மட்டும் சுமார் 20 நிமிடங்கள் வீதிகள் மூடப்படும் என்றும் அனுர சேனாநாயக்க குறிப்பிட்டார். (எ-11)

# எம்.பிக்களுக்கு அழைப்பு

கொழும்பு தாமரைத்தடாகம் அரங்கத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தின் அங்கம் வகிக்கும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவலக அமைச்சின் ஊடாக இந்த அழைப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகளின்மாநாடு பிரித்தானியாவின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் தலைமையில் எதிர்வரும் 15ஆம் திகதி முற்பகல் 10.15 மணிக்கு கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# சஜித்தின் ஆதரவாளர்களை சந்திக்கிறார் சந்திரிகா!



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபையின் தலைவராக தெரிவாகியுள்ள கரு ஜயசூரியவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜனநாயகம் நிலைபெற வேண்டுமானால் பலமான எதிர்க்கட்சி ஒன்று இருப்பது அவசியம் என சுட்டிக்காட்டியுள்ள சந்திரிகா, ஐக்கிய தேசியக் கட்சியினரை மீண்டும் ஒற்றுமைப்படுத்தும் ஆற்றல் கரு ஜயசூரியவுக்கு இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்

இதனிடையே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும் கரு ஜயசூரியவும் அடுத்த வாரம் சந்தித்து பேச்சு நடத்த உள்ளனர்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவின் ஆதரவாளர்கள் சிலரை கடந்த வாரம் சந்தித்து பேசியுள்ளார்.

இதன் போது முன்னாள் ஜனாதிபதி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை கடுமையாக விமர்சித்திருந்தாகவும் இதனை ஆங்கில வார இதழ் ஒன்று விசேட செய்தியாக பிரசுரிக்க இருந்ததாகவும் கூறப்படுகிறது.

எனினும் அந்த இதழ் அச்சிடும் பணிகள் நடைபெற்ற பொழுது முன்னாள் ஜனாதிபதியின் பெயர் அதில் இருந்து உடனடியாக நீக்கப்பட்டதாக கூறப்படுகிறது. (எ-11)

## மாநாட்டுப் பிரதி...

நடத்தி வருகின்றனர்.

எவ்வாறாயினும் இதற்கு முன்னர் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ளும் அரச தலைவர்களை ஏற்றிச் செல்வதற்காக இறக்குமதி செய்யப்பட்ட 54, எஸ்400 ரக பென்ஸ் கார்களில் மூன்று விபத்துக்கு உள்ளாகி பயன்படுத்த முடியாதளவில் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மாநாட்டை...

வரி வருமானத்தைப் பயன்படுத்தி பொய்யான பிரசாரம் மேற்கொள்ளப்படுவதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு சிகப்பு கம்பள வரவேற்பு அளிக்கும் இந்த நிகழ்வில் பங்கேற்கப் போவதில்லை என கட்சி அறிவிததுள்ளது. (எ-11)

## மீள்குடியே...

பெயர்ந்த தமிழ்க்குடும்பங்களை மீள் குடியேற்றுமாறு நாளை மறுதினம் 12 ஆம் திகதி காலை 8 மணியளவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்பாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ள நிலையில் நலன்புரி முகாம்களில் தங்கி வாழ்ந்து வரும் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவதைவிடுத்து வேறு இடங்களில் குடியேற்ற இராணுவத்தினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமை தமிழ் மக்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் நோக்குடன் என்றே நாம் கருதுகின்றோம்.

தையிட்டி, மயிலிட்டி பகுதிகளிலிருந்து கடந்த 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்கள் 23 வருடங்களுக்கு மேலாகவும் தற்பொழுதும் சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாத நிலையில் நலன்புரி முகாம்களில் தங்கிவாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பலாலி கிழக்கு வளலாய் இடைக்காடு பகுதியில் சுமார் 150 குடும்பங்களைக் குடியேற்ற இராணுவத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதில் கோணாபுலம் நலன்புரி முகாமில் தங்கி வாழ்ந்து வந்த தையிட்டி, மயிலிட்டி பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த தமிழ்க் குடும்பங்கள் அதிகளவில் உள்வாங்கப்பட்டுள்ளனர். (எ-11)

## யுத்த உயிரிழப்பு...

தவர்களின் இறப்புச் சான்றிதழ்களை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.

அரசாங்கம் இந்த கோரிக்கைகளை புறக்கணித்து விட்டு, வடபகுதி மக்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாக கருதி செயற்படுகிறது என்றும் குற்றம் சுமத்தப்பட்டது.

எவ்வாறாயினும் இந்த கணக்கெடுப்பானது பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பிக்க அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியாக இருக்கலாம் என வட பகுதியை சேர்ந்த சில அமைப்புகள் சந்தேகம் வெளியிட்டுள்ளன. (எ-11)

## இணைப்பு...

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் படையினர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில், அரசாங்கம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்நடவடிக்கையானது வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் மத்தியில் ஒரு நற்பெயரை ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு முனைப்பாக நோக்கப்படுகின்றது.

அதேவேளை, வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் பங்கேற்கும் பொதுநலவாய மாநாட்டில் படையினர் முன்னிலைப்படுத்தப் படுகின்றமை தொடர்பில் மனித வுரிமை செயற்பாட்டாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (எ-11)

## ஜனாதிபதி...

பொதுநலவாய மாநாட்டில்இருந்து விலகிக் கொள்வது தொடர்பான தனது முடிவு குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இன்று இந்தியப் பிரதமர் கடிதம் எழுதக் கூடும் என்று இந்திய அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும், பொதுநலவாய மாநாட்டில் இருந்து மன்மோகன் சிங் விலகிக் கொள்வது தொடர்பான முடிவு இன்னமும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

அதேவேளை இந்தியக் குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தலைமை தாங்குவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் மன்மோகன் சிங் கொழும்பு செல்வதை தவிர்த்தால், துணைக்குடியரசுத் தலைவர் ஹமீத் அன்சாரி இந்தியக் குழுவுக்குத் தலைமை தாங்குவாரா என்று எழுப்பிய கேள்விக்கு இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர சையட் அக்பருதீன் நேரடியாகப் பதிலளிக்கவில்லை.

எனினும். 1993-ம் ஆண்டுக்குப் பின்னர் நடந்துள்ள 10 பொதுநலவாய மாநாடுகளில், 5 தடவைகள் மாத்திரமே இந்தியாவின் சார்பில் பிரதமர் பங்கேற்றுள்ளதாகவும், 4 முறை அமைச்சர்களே தலைமையேற்றுள்ளதாகவும் ஒருமுறையே துணைக்குடியரசுத் தலைவர் தலைமை தாங்கிச் சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# மக்கள் கொல்ல...

செய்யப்பட்ட பொதுமக்கள் மற்றும் விடுதலை புலிகளின் உறுப்பினர்கள் கொலை செய்யப் பட்டமை பயங்கரமான குற்றச் செயல் என தயான் ஜயதிலக்க கூறியுள்ளார்.

இவை தொடர்பில் விசாரணை நடத்தி அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு காலம் தாழ்த்தாது தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக பணியாற் றிய தயான் ஜெயதிலக இந்திய ஊடகம் ஒன்றிடம் நேற்று முன்தினம் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைது செய்யப்பட்டவர்களை கொலை செய்வது இலங்கை இராணுவத்தின் கொள்கை அல்ல. இந்த கொலைகள் சில இராணுவத்தினர் அல்லது சிறிய குழு வொன்றினால் மேற்கொள்ளப்பட்டிருக் கலாம்.

இப்படியான செயல்கள் போர்க் குற்றங்கள் என்று கருதப்படும் என்ற காரணத்தினால், கைது செய்யப்பட்ட எதிரிகளை கொலை செய்யும் கொள்கைகளை உலகில் அங்கீ கரிக்கப்பட்ட எந்த இராணுவமும் கொண்டி ருப்பதில்லை.

இவ்வாறான குற்றச் செயலுக்கு கட்டளை யிட்ட மற்றும் அதனை செயற்படுத்திய படையினரை அடையாளம் கண்டு அவர் களுக்கு உரிய தண்டனையை இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டும்.

உண்மை என்றாவது ஒரு நாள் வெளிச்சத்திற்கு வரும். பங்களாதேஷ், கம்போடியா, கௌதமாலா, அர்ஜென்ரீனா போன்ற நாடுகளில் நடைபெற்றது போன்று பல வருடங்களின் பின்னராவது நியாயம் கிடைக்கக் கூடும் என்றார். (எ-11)

# பொதுநலவாய...

டும் என்பதால் தற்பொழுது ஒதுக்கப்பட்ட நிதியை விட மும்மடங்கு நிதி தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அரச தலைவர்கள் தம்முடன் 9 முதல் 10 உறவினர்களை அழைத்து வரவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இவ்வாறு எதிர்பாராத விதமாக நிதியை செலவிட நேரிட்டுள்ளதால் திறைசேரி பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கி இருப்பதாக கூறப்படுகிறது. (எ-11)


## வேலைவாய்ப்பு

தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை (JSO/ LSO/SSO/OIC) 18-55 ஆண் -பெண் தேவை. (தனியார் பாடசாலை, வங்கி, தனியார் நிறுவனம், தொழிற்சாலைகள், தொடர் மாடி வீடுகள்) கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் வேலை வாய்ப்பு (சம்பளம் 18,000/- 25,000/-, 35,000/-) மற்றும் கொழும்பு உள்பாதைகள் வாகனம் ஓட்ட தெரிந்த மென்சாரதி, கனரக சாரதி, சாரதி உதவியாளர் தேவை. தொழில் அடிப்படையில் சம்பளம், விரைவாக **தொடர்பு 0775561883** (C-5427)

## உடனடியான வேலை வாய்ப்பு

வயது 17-50 ஆண் - பெண் இருபாலாருக்கும் பல வெற்றிடம் கல்வி அறிவு அவசியமில்லை. 18,000/-, 25,000/-, 32,000/- வரையான சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்பு கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் (ஜேம், கோடியல், டயர், கிளவுஸ், புத்தகம், தண்ணீர் போத்தல், பிளாஸ்டிக், கோழி இறைச்சி, Keels, காமென்ட், தேயிலை போன்றவற்றுக்கு தரம்பிரித்தல், பொதியிடல், உற்பத்தி, களஞ்சிய பிரிவுக்கு தேவை. உணவு+ தங்குமிடம் குறைந்த விலை தரப்படும். நண்பர்கள் + குழு+ தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில் **0778430179, 0777117661**

## நீங்களும் அறிவிப்பாளராகலாம்!

சர்வதேச இணைய வானொலி வாரணம்FM இன்
ஒலிபரப்பாளர் இதழியல் பயிற்சி நெறி
**யாழ்ப்பாணத்தில் அடுத்த பிரிவு ஆரம்பம்!**
தமிழில் சிறந்த உச்சரிப்பு, பேச்சாற்றல், இசைத்துறை, எழுதுதிறன், நடிப்பாற்றல், இதர கலைத்துறை ஆர்வலராயின்

**ஒலிபரப்பாளர் இதழியல் பயிற்சி நெறியில் இணைவதற்கு.....**

1. க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் தமிழ் விசேடசித்தியுடன் உயர்தரம் பல்கலைக்கழக அனுமதிக்கான பெறுபேறு.
2. கணினித்துறை, கலைத்துறையில் ஈடுபட்டமைக்கான சான்றிதழ்கள்.

**இவற்றுடன் இணைந்த சுயவிபரக்கோவையை 30.11.2013க்கு முன் எமது அலுவலக முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**

* சர்வதேச புகழ்பூத்த மூத்த ஒலிபரப்பாளர்கள் சிரேஷ்ட ஊடகமுன்னோடிகளால் விரிவுரைகள்.
* ஊடகங்களில் உள்ளகப்பயிற்சி, நேரடி கலையகப்பயிற்சி, வாரணம் எவ்.எம்.இல் பகுதிநேர ஒலிபரப்பாளர் களப்பயிற்சியும் கல்விச் சுற்றுலாவும்.
* இலங்கையின் பிரபல வானொலிகளின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு.
* பூர்த்திசெய்யும் தகுதியானோருக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

## வாரணம் FM

Managing Director
Varanam FM
52, Hospital Road, Jaffna.
T.P: 021 221 9822
077 908 6737
E.mail: varanamfm@yahoo.com
www.varanamfm24.com
(C-5415)

## வெளிநாட்டு உயர்கல்வி

பகுதி நேர வேலைவாய்ப்புடன்
ஹோட்டல் முகாமைத்துவம் சிங்கப்பூர் மலேசியா
ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L
- மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவு 100,000/-
- பாடநெறிக்கட்டணம் 350,000/- 1 வருடம்

கட்டணம் 100% வீசா வந்தபின்
வீசா 14 நாட்களில்

Hotline: 077 3013060

உயர் கல்வி அனுசரணை
AUSTRALIA, NEW ZEALAND, USA, CANADA, UK, LATIVIA CYPRUS ETC...
எந்த ஒரு வங்கியிலும் பண வைப்பிற்கான சரியான வழிகாட்டல்கள் எம்மால் வழங்கப்படும்.

iCS Study Overseas
இல. 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
021 7306000 , 077 3013060
107, B-1/1 காலி வீதி, கொழும்பு-06,
011 434 3322 . 077 3013060
(C-5400)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான [illegible]சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 11-11-2013 | 16-11-2013 | 18-11-2013 | 23-11-2013 |

(சி-5399)

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

## YOGI'S

(Academy of beautiful Culture Hair Dressing & Home Science)

Cookery Demonstration Classes,
15 th, 16 th, 17 th November 2013

**பண்டிகைக் கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புகள் 3 நாட்கள் மட்டும் 15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் காலை 10 மணிமுதல் நடைபெறும். இலகுவாகவும் வித்தியாசமாகவும் விரைவாகவும் செய்யக்கூடிய**

- 5 கேக் கலவைகள்
- 5 பேஸ்ரி வகைகள் (Pastryies)
- 5 Sweets வகைகள்

சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளவும்.
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
**தொ.பே: 021 222 2796, 0777164923**
(C-5423)

## IPS @ ACCA

The Specialist in Acca education

### கற்கைப் பிரிவுகள்

i) FIA, : FAB, FMA, FFA
ii) ACCA : F1, F2, F3
iii) Exemptions : HNDA/ B.Com/ BBA பட்டதாரிகள்

### கருத்தரங்கு

**16.11.2013, 23.11.2013** காலை 9.30 மணி

1. கற்கை நெறிக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன
2. மாணவர்களின் வசதிக்கேற்ப நேர அட்டவணை
3. பரீட்சைகள் யாழ், கொழும்பில் நடைபெறுகின்றன

மேலதிக விபரங்களுடன் தொடர்புகட்கு:
182, இராமநாதன் வீதி,
(யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 567 0345
email:ipsacca@gmail.com
ACCA THE GLOBAL BODY FOR PROFESSIONAL ACCOUNTANTS
(சி-5428)

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:

T.P : 021 321 0815, 021 567 1532
E-mail : valampurii@yahoo.com, valampuriijaffna@gmail.com

**தேவை:** கட்டட நிர்மாணத் துறையில் தேர்ச்சி பெற்றவராய் கொழும்பு, யாழ், விசுவமடு, நீர் கொழும்பு, கம்பஹா, மட்டக்களப்பு, திருகோணமலை பிரதேசங்களில் மேசன், தச்சு, பெயின்டர், பிளம்பர், இலற்றிசன், கம்பிபாஸ், (1200/- மேல்) கை உதவியாளர் (900/- மேல்) வாரச் சம்பளம், மாதாந்த சம் பளம் தினமும் செலவு உண்டு. **0775561883** (C-5426)

## வெளிவந்துவிட்டது.

2014, 2015 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான ஆசிரியர் N. சுந்தாவின்
வினாத்தாள் I இல் 100 % மதிப்பெண்களைப் பெற்றுக் கொள்வதற்கான
DVD + நூல்
1200 வினாக்களும் 18 மணிநேர DVD ஊடான விரிவான விளக்கமும்
பல மாணவர்களின் வசதிகருதி நூலின் விலை 850/- இருந்து 590/- க்கு விற்பனையாகிறது.
கிடைக்கும் இடம்-
- அன்னை புத்தகசாலை- யாழ்ப்பாணம்.
- பூபாலசிங்கம் புத்தகசாலை- யாழ்ப்பாணம்.
- சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை-நெல்லியடி.

தொடர்புகளுக்கு- 0719003171
(C-5377)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடியோ கடைக்கு பெண் வேலையாள் தேவை
**தொடர்பு: 0778225961**
(4449)

## English for Toddlers & Kids

Toddlers (from 1 - 3 years)
Mon, Wed & Fri - 9.30 - 11.30
Kids (from 3+ - 5 years)
Mon, Wed & Fri- 3.30 - 5.30
(C-5424)

Visalam
127/1 Temple Road Jaffna
021 221 9695, 075 979 9695
admin@visalamholdings.com


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.